கோகுலம்

GOKULAM

செப்டம்பர் '88 விலை ரூ. 3.




இயற்கையின் பெருமை
மாங்கனியின் இனிமை
இதை "ஃப்ரூட் பார்" ஆக மாற்றிடும்
திறமை நியூட்ரினின் மகிமை
நேட்சுரோ
மாங்கனி "ஃப்ரூட் பார்"
Naturo
MANGO
FRUIT BAR
ஆகவே
பன்னிரண்டு மாதமும்
மாம்பழக் காலமே!
இதுவே
மாங்கனி மந்திரம்
நியூட்ரின்
இன்சுவை இயற்கையிலேயே!
nutrine




உயிர்களிடத்தில் அன்பு வேணும். — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

கோகுலம்

1988 செப்டம்பர் மாத இதழ்
மலர்: 6 இதழ்: 8
தனிப் பிரதி — ரூ. 3/—
ஆண்டுச் சந்தா — ரூ. 36/—

கௌரவ ஆசிரியர்: அழ. வள்ளியப்பா.

பூகலூர் முத்து



அருமைச் சிறுவர் சிறுமியரே,

முன்பு ஒரு நாள் நாம் தொலைத்த பந்து இன்னொரு நாளில் கிடைக்கலாம். நாம் இழந்த நண்பன் மீண்டும் நம்முடன் சேரலாம். நாம் பாடும் போது மறந்து போன ஓர் அடி மீண்டும் நினைவுக்கு வரலாம். ஆனால்,

அன்றொரு நாள் சோம்பலிலே
நான் இழந்த காலம்
என்னருமை வாழ்க்கையிலே
இன்னொரு நாள் வருமா?

என்று கேட்கிறார் கவிஞர் திரு. தம்பி சீனிவாசன்.

'கல்விக் கூடங்கள் திறந்ததும் நாம் களிப்போடு சென்று கல்வி கற்கலாம்' என்று எண்ணியிருந்த பெரும்பாலான மாணவர்களுக்கு, ஒரு மாதம் வரை கல்வி கற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது அவர்கள் இழந்த கல்வி கற்க வேண்டிய காலம், பந்து போல, நண்பன் போல, பாட்டின் அடி போல மீண்டும் வர வேண்டுமானால், மும்முரமாகப் பாடங்களைப் படிப்பதில் ஈடுபட வேண்டும். சோம்பலால் அந்தக் காலத்தை அந்த மாணவர்கள் இழக்கவில்லை; சூழ்நிலையின் காரணமாகவே இழந்தார்கள். ஆகையால் ஓரிரு மாதங்களில் சரி செய்து விடலாம். கவலை வேண்டாம்.

நீங்கள் ஆவலாக எதிர்பார்த்த தொடர்கதை இந்த இதழில் ஆரம்பமாகிறது. சென்ற ஆண்டு குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய சிறுவர் நாவல் போட்டியில் முதல் பரிசு பெற்றது இந்தக் கதை. இந்திய அரசினரின் தேசிய விருது பெற்றவரும், சிறந்த கல்வியாளருமாகிய கோவை திரு. ஈ. வெங்கடேசலு அவர்கள் தம் தந்தை — தாய் பெயரில் நிறுவிய எல்லப்பா — ரங்கம்மாள் நினைவுப் பரிசு இதற்குக் கிடைத்தது.


இக் கதையை எழுதும் திரு. பூகலூர் முத்து ஒரு சிறந்த எழுத்தாளர். சிறுவருக்கேற்ற சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் எழுதியிருப்பவர். எட்டுப் புத்தகங்களை, இவர் வெளியிட்டிருக்கிறார். 'நல்லவன்' என்ற இவரது நாடகத்திற்கு 1980—ஆம் ஆண்டு ஏ.வி.எம். தங்கப் பதக்கம் கிடைத்தது. புதுச்சேரி, குழந்தை இலக்கிய மன்றத்தின் துணைத் தலைவராக இருந்து, குழந்தை இலக்கியம் வளர்க்கும் பணியிலும் ஈடுபட்டிருப்பவர்.

அழ. வள்ளியப்பா


இந்த இதழ் எழுத்தாளர்கள்



எஸ். பாலகிருஷ்ணன்,



க. இராமலிங்கம்,



இராஜா பால சந்தர்,



குமார் சுப்பிரமணியம்,

பிருந்தாவனக் கதாசிரியர்கள்



ஜெ. அனிதா,




ஜி. சுஜாதா,

பிருந்தாவனக் கவிஞர்கள்



பி. கோவிந்தசாமி,



க. ஸ்ரீராம்,

வண்ண அட்டைப்படம்: யோகா

என் குழந்தைப் பருவம்





ஓவியர் கோபுலு

தமிழகத்தின் தலை சிறந்த ஓவியராக விளங்கும் கோபுலு அவர்களின் பெயரை தமிழக மக்கள் கடந்த 50 ஆண்டுகளாக நன்கறிவர்.

இவர் 1924—ல் தஞ்சையில் பிறந்தார். வளர்ந்து, படித்து உருவாகியது குடந்தையில். அந் நாளிலிருந்தே ஓவியத் துறையில் படகேறி, முயற்சியே படகாக, ஆர்வமே துடுப்பாக முன்னேறினார்.

1941—ல் இவருக்கு, பிரபல ஓவியர் அமரர் மாலியின் அறிமுகம் கிடைத்தது. அது முதல் 'மாலி'யே இவருடைய குரு. 1945—ல் 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் ஓர் ஓவியராகச் சேர்ந்து பணிபுரிய 'மாலி' வழி செய்தார்.


அவர் காட்டிய ராஜ பாட்டையில், அவர் அளித்த ஊக்கத்தினால் கற்பனையை வளர்த்து நகைச்சுவைப் படங்கள், கேலிச் சித்திரங்கள், கதைச் சித்திரங்கள், சரித்திரக் கதை ஓவியங்கள், தீபாவளி மலர் வண்ணப் படங்கள் என்று பல வகைப்பட்ட சித்திர பாணிகளில், பல ஆயிரம் சித்திரங்களை வரைந்து, தமிழக வாசகர்களை மகிழ்வித்தார்.

பிறகு, 1963 முதல், பத்திரிகைத் துறையை விட்டு, விளம்பரத் துறையில் ஈடுபாடு கொண்டார். இரண்டு விளம்பர நிறுவனங்களில், ஆர்ட் டைரக்டர், டைரக்டர் எனப் பணி செய்து 1972—ல் சொந்தமாக ஒரு விளம்பர நிறுவனத்தை அமைத்து, விடா முயற்சியுடன் அதை ஒரு சிறந்த நிறுவனமாக உருவாக்கி நடத்திக் கொண்டு வருகிறார்.

இருப்பினும், பத்திரிகைத் துறை இவரை அவ்வளவு எளிதில் விட்டு விடுமா? தொடர்ந்து பல பத்திரிகைகளுக்குச் சித்திரங்கள் வரைந்து தமிழக மக்களைத் தொடர்ந்து மகிழ்வித்துக் கொண்டிருக்கிறார்.

அப்போது எனக்கு வயது மூன்று. அப்பா மடியில் நான். நன்றாக ஞாபகம் இருக்கிறது. அப்பா, என் வலது கையைப் பிடித்துக் கொண்டு எதிரே தரையில் பரப்பியுள்ள அட்சதையில் என் வலது கை ஆட் காட்டி விரலால் எழுதுகிறார். ''சொல்லு நீயும்... ஓம் நமோ நாராயணாயா.''

என் கை எழுதுகிறது, அப்பா அசைவுக்குத் தக்கபடி மடியில் ஒரு ஓலைச் சுவடி, மஞ்சள் குங்குமம் தடவியது. அதிலும் அதே வாக்கியம். 'ஜம்'னு கருநீல வெல்வெட்டில் நிஜார், கோட்டு, அதில் ஜரிகை வேலைப்பாடு. இப்பொழுது நினைக்கும் போது பாண்டு வாத்தியக்காரன்



மாதிரி இருந்திருப்பேன். ஆனால் அப்பொழுது மகாகுஷி. வெல்வெட் கோட்டு, சட்டை எனக்கு! எனக்கே எனக்கு!

அன்று விஜயதசமி நாள். எனக்கு அட்சராப்பியாசம் செய்து பள்ளிக் கூடம் அனுப்பப் போகிறார்கள். அதற்கான விசேட நாள். சுற்றம் பூரா வும், அம்மா, அத்தை, அண்ணா, அக்கா, பாட்டி, புரோகிதர் முதலானோர்.

''ஓம் நமோ நாராயணாயா'' ''ஓம் நமோ நாராயணாயா'' என்று மூணு தரம் எழுதினேன். எழுதினேன் என்பதை விட வரைந்தேன் என்பது சரியானது. ஏனெனில், மனிதன், சித்திரத்திலிருந்துதான் எழுத்தை உரு வாக்கினான் என்று சொல்லுவார் கள். ஆனால், எனக்கு அன்று எழுத் திலிருந்து சித்திரம் உருவாகியது. அட்சராப்யாசம் சித்திராப்யாசமாகி யது. ஏனெனில், எனக்கு மற்ற எழுத் துக்களைக் காட்டிலும், அந்த 'நமோ' விலும் 'நாராயணாயா' விலும் உள்ள 'ந' ரொம்பப் பிடித்து விட்டது. மனத் தைக் கவர்ந்த எழுத்து அது. சித்திரக் காரன் பிறந்து விட்டான் என் உள்ளே! ஆமாம், அந்த மூணு வயதில்!

பள்ளிக் கூடத்துக்கு அழைத்துச் சென்று தரையில் உள்ள நீண்ட பலகையில் உட்கார வைத்தார்கள். (அந்தக் காலத்து ஆரம்ப பள்ளியில் உள்ளபடி)

அங்கு ஒரு டர்பன் கட்டி கோட் டுப் போட்ட ஆசிரியர் இருந்தார். அவரும் என்னை மீண்டும் சிலேட்டில் 'ஓம் நமோ நாராயணாயா' எழுதச் சொன்னார். அந்த 'ந' எழுத்து சுலப மாக வந்து விட்டது. ஏன் தெரியுமா? அந்த 'ந' எழுத்து, என் கற்பனையில் ரயில் தந்திக் கம்பி மேல் உட்கார்ந் திருக்கும் வால் குருவி மாதிரி தலை, மூக்கு, வயிறு, வாலோடு இருந்தது!

பள்ளிக் கூடத்திலிருந்து வீடு திரும்பி வந்தேன். ''என்னடா பள்ளிக் கூடத்திலே கத்துண்டே'' என்று அம்மா கேட்டாள்.

சிலேட்டில் 'ந' எழுதினேன். அதுக்கு கண், இரண்டு கால்கள் போட்டு ''இதப் பாரும்மா 'ந'னா குருவி'' என்று காட்டினேன்!

''நன்னா இருக்கே அட்சராப்யாச ஆரம்பம்'' என்று பாட்டி கூறினாள்.

இதுதான் என் ஞாபகத்தில் இருக் கும் என் முதல் கலை உணர்வு.

ஒருநாள், என் அண்ணனுடன் அவன் படிக்கும் எட்டாவது வகுப்புக் குச் சென்று உட்கார்ந்தேன். அன்று டிராயிங் பீரியட் அவனுக்கு. 'டிராங்கி' மாஸ்டர் கரும்பலகையில் சாக்கட்டி யால் சரசரவென்று ஒரு கோழி முட்டை போல் கோடு போட்டார்.



அவர் வரையும் லாகவத்தைப் பார்த்து வியந்தேன். என் கையும் காற்றில் கோடு போட்டது.

அந்த டிராங்கி மாஸ்டர் அதோடு விடவில்லை. எல்லாப் பையன்களை யும் அது மாதிரி 'முட்டை' போடச் சொன்னார். அடுத்தபடியாக அவர் அப்படியும், இப்படியுமாகக் கோடு கள் போட்டார். என்ன ஆச்சரியம்! அந்த முட்டைக்குள்ளேயிருந்து ஒரு யானை வெளி வந்தது!

''சே! என்ன மாஜிக்டா இது! முட்டையிலேருந்து கோழிக் குஞ்சு வரும்; ஆனால், இப்போ யானைக் குஞ்சே வருதே!'' ஒரே வியப்பு!

என் அண்ணா, டிராங்கி நோட் டில் அந்த முட்டையை வரைந்தான். அது சுரைக்காய் மாதிரி உருவாகியது.

''அண்ணா, நீ சரியாப் போடல்லே முட்டையை''

''சும்மா இருடா மண்டு'' — இது என் அண்ணா எரிச்சலுடன்.

என் கை துறுதுறுத்தது.

அந்தப் பக்கத்துப் பையன் வரை வதை எட்டிப் பார்த்தேன். கோழி

முட்டை சதுரமாக இருந்தது.

ஏன் நாமும் முயற்சி செய்யக் கூடாது?

வீடு திரும்பியதும் சிலேட்டில் முட்டையிலிருந்து யானை வரவழைக்கும் மாஜிக் செய்து பார்த்தேன். முதல் தடவையிலேயே யானை வெளிவந்தது! ஒரே சந்தோஷம்! 'பேஷ்!' என் கலையுணர்வு வளருகிறது. என் அண்ணாவிடம் காட்டினேன்.

''போடா மேதாவி!'' — வசவு கிடைத்தது.

அன்று முதல் எங்கள் வீட்டுச் சுவரெல்லாம் முட்டை, யானைக் குஞ்சு, முட்டைகள், யானைக் குட்டிகள் தான்!

கைக்கு எது கிடைத்தாலும் சரி. கரி, சாக்கட்டி, பென்சில், காவிக் கட்டி எதுவானாலும் சரி, முட்டை, யானைக்குட்டி...

ஒருநாள் சுவரில் முட்டை வரைந்தேன். கற்பனை ஊற்று கொஞ்சம் அதிகமாகப் பெருகியது. முட்டைக்குக் கால்கள், காதுகள், மீசை போட்டேன். வாலும் போட்டேன். ஹைடா! பூனைக் குட்டி உருவாகியது. அதற்கு எதிரே சின்ன முட்டை போட்டேன். நீள மூஞ்சி, காது, வாலு, சின்ன கால்கள் எலிக்குட்டி வந்தது!

எல்லாரிடமும் காட்டினேன், என் அஜந்தா சுவர் ஓவியத்தை.

''நல்லா சுவத்தைப் பாழ் பண்ணிக் கிறுக்கி இருக்கியேடா... அப்பா வந்ததும் சொல்லி அடிவாங்கி வைக்கிறேன்....''

கலைக்குப் பரிசு அடி!

நானும் விடவில்லை, என் ஏகலைவ சிட்சையை. அது தொடர்ந்தது தினமும்.

அடுத்த ஞாபகம்...

எனது மூத்த அக்கா ரொம்ப அழகாக வலை அட்டையில் எம்ப்ராய்டரி போடுவாள். (வலை அட்டை என்பது ஒரு வெள்ளை அட்டையில் புள்ளி புள்ளியாகச் சல்லடைத் துவாரம் போல் ஓட்டைகள் இருக்கும். அதில் கலர் நூல் கோத்துத் தைக்க வேண்டும்)


படத்துக்குக் கீழே அவள் பெயரைக் கூட இங்கிலீஷில் போட்டிருப்பாள். முடிவுற்ற படத்தை எங்கப்பா பிரேம் போட்டு மாட்டி இருப்பார்.

என் தந்தை, என்னையும், மற்றொரு கையில் வலை அட்டையையும் எடுத்துக் கொண்டு, தஞ்சை தெற்கு வீதிக் கோடியிலுள்ள அவருக்குத் தெரிந்த வர்ணக்காரரிடம் போனார். வர்ணக்காரர் என்றால் என்ன தெரியுமா? தஞ்சாவூர்ப் படம் வரையும் ஓவியர்களுக்கு அந்தப் பெயர்!

அவர் பெயர் பட்டாபி என்று ஞாபகம்.

அவர் வீடு பூராவும், வெண்ணெய் தாழி கிருஷ்ணன், புல்லாங்குழல் ஊதும் கண்ணன், பட்டாபிஷேகத்துக்குத் தயாராக இருக்கும் இராம லக்ஷ்மண, சீதை, ஹனுமான் சூழ்புற மனிதர்கள். காலை மடக்கி, கட்டை விரலை வாயில் சப்பும் ஆலிலைக் கண்ணன். அப்பப்பா! எத்தனை படங்கள். எல்லாம் பலகையில் எழுதிய தஞ்சைச் சித்திரங்கள். பட்டாபி குனிந்து உட்கார்ந்து காவிக் கலரினால் ஹனுமான் படம் போடக் கோடுகள் போட்டுக் கொண்டிருக்கிறார். அப்பாவும் மிகுந்த உரிமையுடன், ''பட்டாபி, இந்த வலையட்டையிலே ஓர் அன்னபட்சியை வர்ணத்திலே போட்டுக்கொடு. என் பெண் அதிலே அதே மாதிரி எம்ப்ராய்டரி செய்யப் போறா. இப்பவே வேணும்'' என்றார்.

பட்டாபியும் உடனே தன் வல்லம்





ஸ்படி மூக்குக்கண்ணாடியைத்துடைத்துப் போட்டுக் கொண்டு, வலையட்டையில் அதே காவிக் கலரில் 'ஆசு' போட ஆரம்பித்தார். அப்படியும் இப்படியுமாகபிரஷ்ஆடியது. அன்னப் பட்சி பெருமையா வயத்தை வளைச்சுண்டு மூக்கை விடைச்சுண்டு குட்டைக் காலோடு நின்றது. மயில் தோகை மாதிரி நீலம் பச்சையிலே வால் தோகை. அன்னப்பட்சி கழுத்துப் பூரா அட்டிகைகள் செயின்கள் போட்டுக்கொண்டது. அது ஹைன்னு திமிரா நின்னுது. சிவப்பு மூக்கிலே ஒரு கொடி தொங்கியது. பட்டாபியின் கை வர்ணக் கிண்ணங்களில் டான்ஸ் ஆடியது. ஜலதரங்கம் வாசித்தது. படம் ரெடி. வலையட்டையில் அன்னப்பட்சி. எனக்கு ஒரே பிரமிப்பு!

'எத்தனை பெரிய சித்திரக்காரர் இந்தப் பட்டாபி! பெரியவனாகி நானும் இவர் மாதிரிச் சித்திரக்காரனாக ஆகணும்.'

அடிக்கடி பட்டாபி வீட்டுக்குப் போக ஆசை. ஆனால், அப்பா தடுத்து விடுவார். ''படிடா. முதல்லே படி; படம் அப்புறம்!''

அடுத்த ஞாபகம்......

எனக்கு வயது எட்டு என்று நினைக்கிறேன். எப்போதும் படம் கிறுக்கிக் கொண்டே இருப்பேன்.


எனக்கு 'தாஸ்'னு ஒரு கிளாஸ் மேட்; பத்து வயது. அவன் தஞ்சை மகாராஷ்டிர ராஜா பரம்பரையின் தூரத்து உறவினன். அவன் அடிக்கடி தஞ்சாவூர் அரண்மனைக்குப் போய் வருவான், சொந்தக்காரர்களைப் பார்க்க. அவனோடு சில சமயம் நானும் போவேன்.

தஞ்சை அரண்மனைக்குள்ளே இடுக்கும்முடுக்குமாக இருக்கிற பல வழிகள் வழியாகப் போவோம். சில இடங்களிலே வௌவால் பறக்கும். இருட்டாக இருக்கும். அது மாதிரி உள்ளே போகும் போது அங்குள்ள சுவரிலே ரொம்பப் பெரிய சைஸில் ராமர் பட்டாபிஷேகப் படம் எழுதி இருக்கும். பழைய காலப் படம்-பளபளன்னு தங்க ரேக்கு சில இடங்களிலே ஜொலிக்கும். பலவித நவரத்தினக் கற்கள் வச்சு புதைச்சிருக்கும் பட்த்திலே. சில இடங்களிலே கற்கள் போயிருக்கும், பல்லுப் போன தாத்தா மாதிரி! இருந்தாலும் அந்தக் களையுள்ள ராமர் முகம், சீதை முகம் இன்னும் என் மனசிலே இருக்கு. என்ன புன்னகை முகம்! பார்த்துக் கொண்டே நிற்பேன். அந்த இருட்டு மஹாலிலே கூட பளீர்னு படம் தெரியும். நானும் பெரிய சித்திரக்காரனாக ஆகி இதுமாதிரி பெரிய பெரிய படம் வரையணும்னு ஆசை கொழுந்து விட்டு வளர்ந்தது.

என் தகப்பனார் தஞ்சாவூரிலே ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தார்.

அடிக்கடி அவருடன் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போவேன். இன்ஜின்கள், ரயில்கள், பிளாட்பாரம், மக்கள் கூட்டம், முந்திரிப் பருப்பு, ரோஜாப் பூ வியாபாரிகள் எல்லாம் கண்கொள்ளாக் காட்சி எனக்கு. ரயிலடிப் பிள்ளையார் கோவில் விசேஷக் காட்சி.

தஞ்சை ரயில்வே பிளாட்பாரத்தின் உயரே சங்கிலியில், கட்டப்பட்ட பெரிய விளம்பரப் பென்சிலின் 'கட் அவுட்' ஒன்று தொங்கும். அதில் 'பெருமாள் செட்டி காப்பியிங் பென்சில்' என்று எழுதி இருக்கும். அதை வியப்புடன் பார்த்துக் கொண்டே இருப்பேன். இதை வைத்துக் கொண்டு படம் போட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்? ஒருக்கால் இந்த மாதிரி பென்சிலை வைத்துக் கொண்டுதான் ராஜாக்கள் கையெழுத்துப் போடுவார்களோ...? என் சிறிய மனக் கற்பனை......



ஒரு நாள் அந்தப் பென்சிலைக் காணோம்! அதே சமயம் வைசிராய் தஞ்சை வந்து இறங்கினார். ஒருக் கால் இந்தப் பென்சிலைக் கையெழுத்துப் போட அவர்தான் எடுத்துச் சென்று விட்டாரோ என்று கூட நினைத்தேன்.

தஞ்சை ரயில் ஸ்டேஷன் அருகில் புத்தகக் கடையில் 'ஆனந்த விகடன்' பத்திரிகை வெங்காயத் தோல் கலரில் அட்டையுடன் தொங்கும். அதில் பிரபல கார்ட்டூனிஸ்ட் 'மாலி' வரைந்துள்ள படங்கள் இருக்கும். (பிற்காலத்தில் அவர்தான் எனக்கு குருவாய் – வழிகாட்டியாய் ஆனார்.) கடை வாசலில் ஆனந்த விகடனைப் பார்த்துக் கொண்டே நிற்பேன். யாராவது விகடனை வாங்கிப் பிரித்துப் படித்தால், அவர் பின்புறம் போய் நின்று நானும் அதன் உள் இருக்கும் கலைச் செல்வங்களைப் பார்த்து ரசிப்பேன்.

எனக்கும் சொந்தமாக ஒரு விகடன் வாங்க ஆசை. விலை ரெண்டு அணா. அப்பாவிடம் அழுது அடம்பிடித்து ஒரு விகடன் வாங்கினேன். என்ன இனிய அனுபவம். வீட்டுக்கு ஓடி வந்து அந்த இதழைப் பிரித்தேன்.

அமரர் 'மாலி' வரைந்துள்ள மாங்குடி சிதம்பர பாகவதர் படம். சித்தானைக் குட்டி போல உடம்பு. பிறகு ஒரு மடிசார் மாமி, குடுமி மாமா. காந்திஜி மூக்கில் விரலை வைத்து ஜெயிலில் உட்கார்ந்திருப்பது போல். ஒரு வாண்டுப் பயல் வளைந்த பின்னலுடன் பட்டாசு வெடிக்கிறான். இன்னும் எத்தனை எத்தனையோ விநோதப் படங்கள் என்னைக் கவர்ந்தன. அந்தப் படங்களைப் போல் நானும் வரைய ஆரம்பித்தேன்.

(அடுத்த இதழில் முடியும்)



டாக்டர் ராதாகிருஷ்ணன்

தோற்றம்-5.9.1888 மறைவு-17.4.1975



சரபோஜி மகாராஜா

தோற்றம். 24.9.1777 மறைவு. 7.3.1832

மின்மினிக் கதைகள்



இத்தாலியச் சிறுவன்

முன்னொரு சமயம், அதாவது ஒன்பதாவது பயஸ் என்பவர் போப்பாண்டவராக இருந்த சமயம், ரோம் நகரில் ஓர் ஏழைப் பையன் இருந்தான். திடீரென்று ஒரு நாள் அவன் தாயார் வியாதியாக விழவே, அவளுக்கு மருந்து வாங்கிக் கொடுக்கச் சிறுவனிடம் பணம் இல்லை. மருந்துக்கு 37 லீரா வேண்டியிருந்தது. லீரா என்பது இத்தாலிய நாணயம்.

யாரிடம் பணம் கேட்பது என்று பையனுக்குத் தெரியவில்லை. திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று.

"போப்பாண்டவருக்கே எழுதிக் கேட்டால் என்ன?" என்று நினைத்தான். இது விஷயத்தைத் தாயாரிடமும் சொன்னான்.

இதைக் கேட்டுத் தாயார் நடுங்கினாள்.

"ஐயையோ! போப்பாண்டவரா! அவருக்குப் போய் நீ எழுதலாமா?" என்று கேட்டாள்.

"எழுதினால் என்ன! கத்தோலிக்கர்களாகிய நமக்கு அவர்தானே மதகுரு! நம்மைக் காப்பாற்ற வேண்டியது அவர் கடமைதானே! ஆகவே எழுதத்தான் போகிறேன்" என்றான் பையன் தைரியமாக.

உடனேயே சிறுவன் போப்பாண்டவருக்கு ஒரு கடிதம் எழுதி அதைத் தபாலில் போட்டான்.

அவன் கடிதத்தில் எழுத்துப் பிழைகள் நிறைய இருந்தன. பேனா நல்ல பேனா இல்லை. அங்கங்கே கடிதத்தில் மை சிதறிக் கிடந்தது.

இருந்தும் பையனின் தைரியத்தை மெச்சி, தம்மை வந்து பார்க்கும்படி போப்பாண்டவர், அடுத்த நாளே அவனுக்குப் பதில் அனுப்பினார்.

கடிதத்தை எடுத்துக்கொண்டு சிறுவன் போப்பாண்டவரின் வாசஸ் தலம் சென்றான். அங்கிருந்த அதிகாரிகள் போப்பாண்டவரின் கடிதத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். ஆகவே வேறு வழியின்றி அவனை உள்ளே செல்ல அனுமதித்தனர்.

அவனைக் கண்டதுமே, போப்பாண்டவர், தம் ஜேபியிலிருந்து ஒரு தங்க நாணயத்தை எடுத்து அவனிடம் கொடுத்தார். அது 20 லீரா நாணயம்.

அதை வாங்கிக்கொண்ட பையன், தைரியமாக, ''நான் கேட்டது 37 லீரா. தாங்கள் கொடுத்திருப்பது 20 லீராதானே! இது மருந்து வாங்கப் போதாதே!'' என்றான்.

''பார்த்தாயா! மறந்தே விட்டேன்!'' என்று சொல்லி, போப்பாண்டவர் இன்னொரு 20 லீரா தங்க நாணயத்தைத் தம் ஜேபியிலிருந்து எடுத்து அவனுக்குக் கொடுத்தார்.

அதை வாங்கிக் கொண்ட சிறுவன், ''மொத்தம் 40 லீரா ஆகிறது. ஆனால் எனக்கு வேண்டியது 37 லீராதான், ஆகவே மீதிச் சில்லறையை நாளைக்குக் கொண்டுவந்து கொடுக்கிறேன்'' என்று சொன்னான்.

''சரி, நாளைக்கு வா'' என்று சொன்னார் போப்பாண்டவர்.

அடுத்த நாளே சிறுவன் மூன்று லீரா சில்லறையை எடுத்துக்கொண்டு போப்பாண்டவரைப் பார்க்க வந்தான்.

சிறுவனின் தைரியத்தைக் கண்டு மெச்சிய போப்பாண்டவர் அந்தப் பையனைத் தம் செலவில் படிக்க வைத்து, அவனை முன்னுக்குக் கொண்டு வந்தார்.



தப்பியோடிய சிறுவன்

முன்னொரு சமயம் ஒரு சிறுவனை ஒரு அற்பக் குற்றத்திற்காகச் சிறையில் அடைத்து விட்டார்கள்.

ஒரு நாள் சிறுவன் சிறையிலிருந்து தப்பி வெளியே ஓடி வந்தான். வெகு தூரம் அலைந்தபின் அவனுக்குப் பசி அதிகரிக்கவே அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கடைசியில் ஒரு குடிசை தென்படவே, அங்கு சென்று, ''ஐயா, மிகவும் பசியாக இருக்கிறது. ஏதாவது சாப்பிடக் கொடுங்கள்'' என்றான். ஆனால் அந்த வீட்டுக் குடியானவன் மிகவும் ஏழை.

அவனும் அவன் குடும்பத்தாருமே சாப்பிட்டு இரண்டு நாளாயிற்று.

சிறுவனைப் பார்த்துக் குடியானவன், "அப்பா, நான் என்ன பண்ணுவேன்! இரண்டு நாளாக நாங்கள் எல்லோரும் பட்டினி. அதோடு நிலவரி வேறு நாற்பது ரூபாய் கட்டியாகவில்லை. அதற்காக நாளைக்கே இந்தக் குடிசையை ஜப்தி செய்யப் போகிறார்கள்" என்றான்.

அதைக் கேட்ட சிறுவனுக்கு அவர்கள் மீது தயை பிறந்தது. "அப்படியானால் ஒன்று செய்யுங்கள். உங்களுக்கு ஐம்பது ரூபாய் கிடைக்க ஒரு வழி சொல்லித் தருகிறேன், அதன்படி செய்யுங்கள்" என்றான்.

அது என்ன வழி?" என்றான் குடியானவன்.

"நான் சிறையிலிருந்து தப்பி ஓடி வந்தவன். என்னைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஐம்பது ரூபாய் வெகுமதி கொடுப்பார்கள். நீங்கள் என்னைப் பிடித்துக் கொண்டு போய் போலீஸில் ஒப்படையுங்கள். உங்களுக்கு ஐம்பது ரூபாய் கிடைக்கும். அதைக்கொண்டு நீங்கள் நிலவரியைக் கட்டிவிடலாம்" என்றான் சிறுவன்.

ஆனால் குடியானவனுக்கு அந்த வழியில் பணம் பண்ண மனமில்லை. "நீ இத்தனை நல்ல பையனாக இருக்கிறாயே! உன்னைப் பிடித்துக் கொடுக்க எனக்கு எப்படி மனம் வரும்! ஆகவே நான் உன்னைப் பிடித்துக் கொடுக்க மாட்டேன்" என்று கண்டிப்பாக மறுத்துவிட்டான்.

ஆனால் சிறுவன் குடியானவனைத் திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கடைசியில் இணங்கும்படி செய்தான்.

பையன் தன் கைகளை நீட்ட, குடியானவன் அவன் கைகளை ஒரு கயிற்றைக் கொண்டு கட்டினான். பிறகு பையனை அழைத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷன் சென்றான். அவர்கள் கொடுத்த ஐம்பது ரூபாய் வெகுமதியை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான்.

இரண்டு நாட்களுக்கு பிறகு, பையன் மீது வழக்குத் தொடரப்பட்டது. குடியானவன் சாட்சியாக அழைக்கப் பட்டான்.

"சிறையிலிருந்து தப்பிய பையனை எப்படிப் பிடித்தாய்?" என்று அவனை மாஜிஸ்திரேட் கேட்டார்.

குடியானவன் நடந்த உண்மையைச் சொன்னதும், பையனின் தயாள குணத்தைக் கண்டு மாஜிஸ்திரேட் ஆச்சரியப்பட்டார். பிறகு, அவன் என்ன குற்றத்திற்காகச் சிறையில் அடைக்கப்பட்டான் என்று அவர் விசாரித்த போது, ஓர் அற்ப விஷயத்திற்காக ஒரு நல்ல பையனைச் சிறையில் அடைத்துவிட்டார்கள் என்று தெரிந்து, அவர் பையனை விடுதலை செய்தார்.

இரண்டு அரசர்கள்

முன்னொரு காலத்தில் இரண்டு அரசர்கள் இருந்தார்கள். இருவரும் நெருங்கிய நண்பர்கள். அடிக்கடி ஒருவருக்கொருவர் வெகுமதிகள் அனுப்பிக் கொள்வது அவர்களுடைய வழக்கம்.

ஒரு தடவை முதல் அரசர் இரண்டாவது அரசருக்கு ஒரு கடிதம் அனுப்பி வைத்தார்.

"கறுப்பு நிற வால்கொண்ட ஒரு நீல நிறக் குதிரை அனுப்பி வையுங்கள். இல்லையோ..." என்று கடிதத்தை முடிக்காமல் விட்டிருந்தார்.

அதற்கு இரண்டாவது அரசர், தாமும் கடிதத்தை முடிக்காமல் பின்வருமாறு எழுதி அனுப்பினார்.

"என்னிடம் கறுப்பு நிற வால்கொண்ட நீல நிறக் குதிரையும் இல்லை, வேறு நிறக் குதிரையும் இல்லை. அப்படி இருந்தாலும்......"

இந்தக் கடிதம் கிடைத்ததும் முதல் அரசருக்கு இரண்டாவது அரசர்மீது மிகுந்த கோபம் வந்துவிட்டது. "இருந்தாலும் அனுப்ப மாட்டேன் என்றா



பதில் அனுப்புகிறாய்? இதோ உன்னை என்ன செய்கிறேன் பார்?'' என்று இரண்டாவது அரசர் மீது போர் தொடுத்தார்.

இரண்டு அரசர்களுக்குமிடையே பல மாதங்கள் போர் நடந்தது. கடைசியில் இரண்டு பேரும் சந்தித்தார்கள்.

இரண்டாவது அரசர் முதல் அரசரைப் பாா்த்து, ''நீங்கள் என் நண்பராக இருந்து கொண்டு, 'இல்லையோ உன்னோடு சண்டைக்கு வருவேன்' என்கிற அர்த்தத்தில் கடிதத்தை முடிக்காமல் அனுப்பலாமா?'' என்று கேட்டார்.

அதற்கு முதல் அரசர், ''ஐயையோ! நான் முடிக்காமல் விட்ட வாக்கியத்திற்கு இப்படியா விபரீத வியாக்கியானம் செய்துகொண்டீர்கள்! 'இல்லையோ, வேறு எந்த நிறக் குதிரையாக இருந்தாலும் பரவாயில்லை, அனுப்பி வையுங்கள்' என்கிற அர்த்தத்தில் அல்லவா நான் எழுதினேன்?'' என்றார்.


''அப்படியா?'' என்று வியந்தார் இரண்டாவது அரசர்.

''அது இருக்கட்டும், 'இருந்தாலும் அனுப்பி வைக்க மாட்டேன்' என்கிற அர்த்தத்தில் நீங்கள் மட்டும் கடிதம் எழுதி அனுப்பலாமா?'' என்று கேட்டார் முதல் அரசர்.

''கடவுளே! அதற்கு நீங்கள் அப்படியா அர்த்தம் செய்து கொண்டீர்கள்? இருந்தாலும் உங்களுக்கு அனுப்பி வைக்காமல் வேறு யாருக்கு அனுப்பி வைக்கப் போகிறேன்' என்கிற அர்த்தத்தில் அல்லவா எழுதி அனுப்பினேன்'' என்றார்.

இரண்டு அரசர்களும் தங்கள் தவற்றை உணர்ந்து மீண்டும் நண்பரானார்கள்.

— காமதேனு பப்ளிகேஷன்ஸ், சென்னை — 17 வெளியிட்டுள்ள 'நாடோடியின் ஆயிரம் நீதிக்கதைகள் 4 — ஆம் பாக'த்திலிருந்து எடுத்தவை.



பிருந்தாவனக் கவியரங்கம்



சின்னக் குழந்தை

சின்னச் சின்னக் குழந்தையம்மா.
சிரிக்க வைக்கும் குழந்தை யம்மா.

கள்ளமில்லாக் குழந்தை யம்மா.
கடவுள் தந்த குழந்தை யம்மா.

பொம்மை விரும்பும் குழந்தை யம்மா.
பொறுமை யான குழந்தை யம்மா.

மழலை பேசும் குழந்தை யம்மா.
மனத்தை மயக்கும் குழந்தை யம்மா.

பாட்டை விரும்பும் குழந்தை யம்மா.
பார்க்க அழகுக் குழந்தை யம்மா.

— பா. சாந்தபாபு (20,143), பம்மல்.

முதியோர் கல்வி

'முத்துப் போல எழுத்துக்கள்
முற்றும் தெரிய வில்லையே!
நித்தம் இந்தக் கவலையே
நின்று மனத்தில் வாட்டுதே!

எங்குச் சென்று அறியலாம்
என்று நாங்கள் நினைக்கையில்
'இங்கு நானும் இருக்கிறேன்'
என்றே அழைக்கும் கல்வியே!

முதியோர் கல்வித் திட்டமே
வழிகள் திறக்கச் செய்யுமே!
கடிதம் படிக்க வைக்குமே!
கவலை யாவும் தீர்க்குமே!



கற்றோர் முன்னால் நிற்கவே
கலக்கம் கொண்டோம் முன்பெலாம்.
கற்கக் கற்க எங்களின்
கண்ணைத் திறந்த கல்வியே!

— பி. கோவிந்தசாமி (5703),
பேதாதம்பட்டி புதூர்.

என்ன வேணும் பாப்பா?

என்ன வேணும் பாப்பா?
என்னைக் கேளு பாப்பா!
அன்னப் பறவை வேணுமா?
அழகு முயல் வேணுமா?

பாடும் குயில் வேணுமா?
பறக்கும் கப்பல் வேணுமா?
ஆடும் மயில்தான் வேணுமா?
அழகுப் பொம்மை வேணுமா?

சிங்கம், கரடி வேணுமா?
சிறுத்தைப் புலிதான் வேணுமா?

அங்கு மிங்கும் தாவிடும்
அனுமார் உனக்கு வேணுமா?



ஊது குழல் வேணுமா?
ஊதாப் பலூன் வேணுமா?
எல்லாம் இங்கே இருக்குது.
இந்தப் புத்த கத்திலே!

— க. கோகிலவாணி (3789),
பழையனூர்.

பூனை இது

பாட்டி விட்டுப்பூனை இது,
பாப்பா விரும்பும் பூனை இது!

பாலை நன்றாய்க் குடித்துவிட்டுப்
படுத்துத் தூங்கும் பூனை இது!

பாய்ந்து எலியைப் பிடிக்குமே!
பானைகளை உருட்டுமே!

பாட்டி கோபம் கொள்ளவே
பரணின் மீது ஏறுமே!

பகலிலெல்லாம் தூங்குமே
இரவில் வேட்டை யாடுமே.

குரைக்கும் நாயைப் பார்த்ததும்
மிரண்டு மிரண்டு ஓடுமே.



குண்டெலியைக் கண்டதும்
குதித்து ஓடித் துரத்துமே.

பாட்டி விட்டுப் பூனை இது.
பாப்பா விரும்பும் பூனை இது!

— எஸ். ராஜகுணசேகரன் (20,479),
பெரிய அய்யம்பாளையம்.

சிறுவரே, எழுவீர்!

ஏடு தூக்கும் சிறுவரே
நாடு காக்க எழுவீரே!
பாடுபட்டு உழைத்திடில்
பலன் பெறுவோம் உறுதியே!

தோல்வி அடைய நேரிடில்
துவண்டு போக லாகுமோ?
தோல்வி தானே வெற்றியின்
தொடக்கப் படிகள் ஆகுமே!



அறிஞர் கூறும் வார்த்தைகள்
ஆரம் பத்தில் கசப்பினும்,
புரிந்து கொண்டு நடக்கையில்
அரிய தேனாய் இனிக்குமே!

ஏடு கூறும் உண்மைகள்
ஏற்று நாமும் நடந்திடின்
நாடு உயரும்; அத்துடன்
நாமும் உயர்வோம் நிச்சயம்!

— க. ஸ்ரீராம் (8477), நெய்வேலி — 1.





பள்ளிக்கூட ஆசிரியராயிருந்து, படிப் படியாக உயர்ந்து, பாரத தேசத்தின் ஜனாதிபதியாகத் திகழ்ந்தவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்.

இவரது முன்னோர்கள் சர்வ பள்ளி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

இவரது தந்தை பெயர் வீராசாமி. புரோகிதராயிருந்த அவர் சம்ஸ்கிருதத்தில் மிகுந்த புலமை உடையவர். இராதாகிருஷ்ணன் தம் தந்தை யாரிடம்தான் ஆரம்பக் கல்வியைக் கற்றார்.

சிறுவராயிருந்த போதே, இவர் நிறையப் புத்தகங்களைப் படிப்பார். படித்தவற்றைப் பற்றித் தனியாக உட்கார்ந்து சிந்திப்பார்.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்த பின்னர், இவர் வேலூரிலும் சென்னையிலும் கிறிஸ்தவக் கல்லூரிகளில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்றார். அப்போது, கிறிஸ்தவ மத போதகர்கள், தங்கள் மதத்தை வளர்க்க எவ்வளவு தூரம் பாடுபடுகிறார்கள் என்பதை உணர்ந்தார். நாமும் இந்து மதம் வளரப் பாடுபட வேண்டும்' என்று உறுதி எடுத்துக் கொண்டார்.

பல கல்லூரிகளில் இவர் பணியாற்றிய பின், காசி இந்து பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றினார். பல நாடுகளுக்கும் சென்று இந்து மதத்தின் பெருமைகளை எடுத்துக் கூறிப் பலரையும் வியப்பில் ஆழ்த்தினார். சுவாமி விவேகானந்தருக்கு அடுத்தபடியாக இவரை உலகம் மதித்தது. 'தத்துவ மேதை' எனப் போற்றிப் புகழ்ந்தது.

நம் நாடு விடுதலை பெற்ற பிறகு இவரை ரஷ்யாவுக்கு இந்தியத் தூதராக அரசாங்கம் அனுப்பி வைத்தது. பின்னர் இவர், நம் நாட்டின் துணை ஜனாதிபதியாகி, பிறகு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

நம் தேசத்தின் மிகப் பெரிய விருதான 'பாரத ரத்னா' இவருக்கு வழங்கப்பட்டது.

தஞ்சையிலுள்ள 'சரஸ்வதி மகால்' நூல் நிலையம் உலகப் புகழ்பெற்றது. அதை நிறுவியவர் தஞ்சையை அரசாண்ட சரபோஜி மன்னராவார்.

இவர் பிறந்தது மகாராஷ்டிரத்திலுள்ள 'சந்தாரர்' என்ற நகரத்தில். இவருக்குப் பல மொழிகள் தெரியும். தாய்மொழியான மராத்தியுடன், தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம், ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு முதலிய மொழிகளையும் கற்றார். இவருக்கு ஐரோப்பிய மொழிகளைக் கற்றுக் கொடுத்தவர், சுவார்ட்ஸ் என்னும் கிறிஸ்தவப் பாதிரியார்.

தஞ்சை நகரில் கழிவு நீர் அகற்றும் முறையை முதன் முதலாக ஏற்படுத்தியவர் இவரே. குடிநீர் வசதிக்கும் தக்க ஏற்பாடுகள் செய்தார்.

இவர் பல நூல்கள் எழுதினார். அவற்றை அச்சிடச் சொந்தமாக ஓர் அச்சகத்தையும் அமைத்தார்.

'தஞ்சாவூர் பாண்ட்' என்று சொல்கிறோமே, அது இவர் காலத்தில் ஏற்பட்டது தான்.

பல இடங்களுக்கும் சென்று நூல்களைச் சேகரிப்பது, இசையை வளர்ப்பது, ஓவியக் கலையை உயர்த்துவது, ஏழைகளுக்கு இலவச உணவளித்து இலவசக் கல்வி அளிப்பது — இவையே இவரது குறிக்கோளாக இருந்தன.

இவர் நூல்கள் எழுதியதோடு வர்ண ஓவியங்கள் தீட்டுவதிலும் வல்லவராக விளங்கினார்.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்குப் பல நகைகளையும் வெள்ளிப் பாத்திரங்களையும் வழங்கினார். பல திருப்பணிகள் செய்தார். அன்ன சத்திரங்கள் அமைத்தார்.

சிவக்கொழுந்து தேசிகர் என்பவர் இவரது பெருமையை விளக்கும் 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சி' என்ற நூலை இயற்றியுள்ளார்.

புதிய புத்தகங்கள்



- சிரிக்கும் இளம்பிறை
- தேன் பூக்கள்
- முத்தமிழ்ச் சோலை
- பகைமையின் கண்ணீர்
- பயிற்சிப் பாடல்கள்
- திருக்குறள் பூங்கா

இந்த ஆறு புத்தகங்களையும் சிறுவர் உலகுக்கு அளித்திருப்பவர் கவிஞர் துரை மாலிறையன். புதுவையிலுள்ள வீரமாமுனிவர் அரசு உயர் பள்ளியில் முதனிலைத் தமிழாசிரியராகப் பணியாற்றும் இக்கவிஞர் பெரியவர்களுக்காகப் பல பாடல்கள் எழுதிப் புகழ் பெற்றவர். சிறுவருக்கும் பாடல்கள் எழுதுவதில் மிகவும் திறமையுடையவர் என்பதை இந்த ஆறு புத்தகங்களும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. எளிய நடையில் இனிய சந்தங்களில், சிறுவர் விரும்பும் வகையில் சிறந்த முறையில் பாடல்களைப் படைத்துள்ளார். ஒவ்வொரு புத்தகமும் ஏராளமான படங்களுடனும் அழகிய முகப்புடனும் உயர்ந்த தாளில் அச்சிடப்பட்டிருப்பதனால், சிறுவர் உள்ளத்தைப் பெரிதும் கவரும் என்பதில் ஐயமில்லை. இப் புத்தகங்களின் வருவாயத்தில் 50 விழுக்காடு, பெற்றோரை இழந்த சிறுவர் நலனுக்காகவும், வளர்ச்சி குன்றிய சிறுவர் நலனுக்காகவும், தொழு நோயாளர் நலனுக்காகவும் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பதிப்பகத்தாரின் இப்படிப்பட்ட தொண்டு உள்ளத்தை மனமாரப் பாராட்ட வேண்டும். பாராட்டுவதோடு, நாமும் இப் புத்தகங்களை வாங்கி, பதிப்பகத்தாரின் அறப்பணி சிறக்க உதவ வேண்டும்.

வெளியிட்டோர்: மலரொளி பதிப்பகம், 22, வாணிதாசன் தெரு, குயவர் பாளையம், புதுவை — 13. ஒவ்வொரு புத்தகத்தின் விலை: ரூ. 8/—.

கடலும் மனித குலமும்

"உலகைச் சூழ்ந்திருப்பது ஒரே பெருங் கடல்தான். ஆனால், வசதிக்காகப் பல் வேறு பகுதிகளாகத் தனித்தனிப் பெயரிட்டு அழைக்கிறோம்."

டில்லியிலுள்ள இந்திய வேளாண்மை ஆய்வியல் கழகத்தின் இணை இயக்குநரான டாக்டர் ஜி. எஸ். வெங்கட்ராமன் அவர்கள், "இந் நூல் வாசகர்களைப் பயனுள்ள கடற் பயணத்திற்கு அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை" எனத் தமது அணிந்துரையில் கூறி ஆசிரியரைப் பாராட்டியிருக்கிறார்.

ஏற்கெனவே தி. பட்சிராஜன் எழுதிய 'சூரியன் உதிக்கும் நாடு', 'பாதாள நாடு பணம் கொழிக்கும் நாடு' என்ற இரண்டு சிறுவர் நூல்கள் இந்திய அரசினரின் பரிசுகளைப் பெற்றுள்ளன. இந்த நூலும் 1981—ஆம் ஆண்டு குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய அறிவியல் போட்டியில் ஏ.வி.எம். வெள்ளிப் பதக்கம் பெற்றது.

நிறைய விளக்கப் படங்களையும் பல விஞ்ஞானிகளின் படங்களையும் இந் நூலில் காண முடிகிறது. பக்கங்கள்: 74, விலை ரூ. 12/=.

வெளியிட்டோர்: அமுத நிலையம் லிமிடெட், 46, இராயப் பேட்டை ஹைரோடு, சென்னை — 14.




நாடெங்கும் பிள்ளையார்
சதுர்த்தி! கோகுலத்திலும்
கொண்டாட வேண்டுமென
இந்த வாண்டுகள் எண்ணினர்.
கோகுலம் வாசகர்களும்,
உறுப்பினர்களும் கலந்து
கொண்டு விநாயகப் -
பெருமான் திருவுருவுக்குப்
பாத்திரர்களாக
வாசக நேயர்களை
அன்போடு அழைக்கிறோம்!


பழக்கடைக்காரர் மகன்
விதவிதமான பழவகைகளை
ஏராளமாக கொண்டுவந்து
குவித்தான்!!!

கோகுலத்தில்...


தோட்டக்காரர் மகன்
மாவிலைக் கொத்துகள்,
மகர தோரணங்கள்,
வாழைக்கன்றுகள்,
மலர் வகைகள்,
யாவற்றையும்
கொண்டு
வந்தான்!


பொம்மைக் கடைக்காரர்
மகன், ஆற்றில் போய்
குளித்துவிட்டு மடியோடு
கொண்டுவந்த களிமண்ணால்
அழகாக, பிள்ளையாரைச்
செய்து முடித்தான்!


நைவேத்யத்திற்கான
கொழுக்கட்டை, இட்டிலி,
சர்க்கரைப்பொங்கல்,
வடை, பாயசம் எல்லாம்
சமையல், சாம்பு மாமா
மகன் கொண்டுவந்து
சேர்த்தான்
பூஜைக்கான எல்லாவித
ஏற்பாடுகளும் அழகான
முறையில் தயார்
செய்யப்பட்டன!
பிள்ளையார்!!!
தஞ்சை மாலா
குருக்கள்மாமா பையன்
முறைப்படி கணபதி ஹோமம்
சகஸ்ரநாம அர்ச்சனை
எல்லாம் செய்து பூஜையை
முடித்துக் கொடுத்தான்!
தீபாராதனை ஆகிறது! நேயர்கள்
எல்லாம், தரிசனம் செய்து
கொண்டு, கையில் உள்ள
இந்த கோகுலத்தையே
பிள்ளையார் பிரசாதமாக
எண்ணி மகிழ்வு கொள்ள
வேண்டுகிறோம்!!!

நல்ல

நாடே கீழ்ப்படியும் சிறுவன்




தெமிஸ்டோக்லஸ் என்ற ஏதென்ஸ் அறிஞர் தம் ஆறு வயது மகனைக் காட்டி, ''இவன் என்ன சொன்னாலும் இந்தக் கிரேக்க நாடு கீழ்ப்படிந்து நடக்கும்'' என்று சீடர்களிடம் சொன்னார்.

உடனே ஒரு சீடன், ''இந்தச் சிறுவனின் சொற்களுக்கா கிரேக்க நாடே கீழ்ப்படியும்? நம்ப முடியவில்லையே?'' என்றான்.

அதற்கு தெமிஸ்டோக்லஸ், ''இவன் சொல்படி இவன் அம்மா நடப்பாள். இவன் அம்மா சொல்படி நான் நடப்பேன். என் சொல்படி ஏதென்ஸ் நடக்கும். ஏதென்ஸ் சொல்படி கிரேக்க நாடே நடக்கும். ஆகவே தான் இவன் சொல்படி கிரேக்க நாடே நடக்கும் என்றேன்'' என்று விளக்கம் தந்தார்.

நீக்ரோவும் வெள்ளைக்காரனும்



தியோடர் ரூஸ்வெல்ட் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார். வழியில் அவரைச் சந்தித்த நீக்ரோ ஒருவன் தன் தொப்பியைத் தலையிலிருந்து எடுத்து அவருக்கு மரியாதை செய்தான்.

பதிலுக்கு ரூஸ்வெல்ட்டும் தம் தொப்பியைத் தூக்கி அவனுக்கு மரியாதை செய்தார்.

இதைப் பார்த்த அவருடைய நண்பர் ஒருவர், ''எதற்காக நீக்ரோ ஒருவனுக்கு மரியாதை செய்தீர்?'' என்று கேட்டார்.

அதற்கு ரூஸ்வெல்ட், ''ஒரு நீக்ரோவுக்குத் தெரிந்த மரியாதை ஒரு வெள்ளைக்காரனுக்கும் தெரியும் என்பதை நான் அவனுக்குக் காட்ட வேண்டாமா? அதனால்தான் அப்படிச் செய்தேன்'' என்று பதில் தந்தார்.

கேள்வி

நல்ல பங்கு!

உலகத்திலேயே பெருஞ் செல்வரான அமெரிக்க நாட்டுப் பணக்காரர் ராக்பெல்லரிடம் வந்தான் ஒருவன். ''இவ்வளவு பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்? மக்களுக்குப் பிரித்துக் கொடுத்தால் அவர்களுக்காவது பயன்படுமே! அதே சமயத்தில் ஏழையான எனக்கும் உதவி செய்ததாகுமே?'' என்றான்.

இதைக் கேட்ட ராக்பெல்லர் தம் உதவியாளரை அழைத்து, ''எனக்குள்ள சொத்து எவ்வளவு என்று கணக்கிட்டு, உலக மக்கள் தொகையால் அதை வகுத்துப் பார்த்து, ஆளுக்கு எவ்வளவு வருகிறதென்று சொல்'' என்றார்.

''உதவியாளன் சிறிது நேரம் கணக்கிட்டு, ''ஆளுக்கு 25 சென்டு வருகிறது!'' என்றான். அப்படியானால், ''இவனுக்குரிய 25 சென்டை இவனிடம் கொடுத்தனுப்பு'' என்றார்.



ஏன் பூக்கிண்ணம் இல்லை?

பெர்னார்டுஷாவின் வீட்டிற்கு நண்பர் ஒருவர் வந்தார். ஷாவின் வீட்டில் அலங்காரத்திற்காகப் பூ வைக்கின்ற பூக்கிண்ணங்கள் எங்குமே இல்லாததைக் கண்டார்.

உடனே அவர் ஷாவைப் பார்த்து, ''உங்களுக்குப் பூக்கள் என்றால் மிகவும் பிடிக்கும் என்று சொன்னார்கள். ஆனால் உங்கள் வீட்டில் பூக்கிண்ணங்களையே பார்க்க முடியவில்லையே?'' என்று கேட்டார்.

அதற்கு ஷா, ''எனக்குக் குழந்தைகள் என்றாலும் உயிர்தான். அதற்காக அவர்களின் தலையை வெட்டி இங்கு அழகிற்காக வைக்க முடியுமா?'' என்று கேட்டார்.





கால்களின் நீளம்

டக்ளஸ் என்ற அறிஞர் மிகவும் குள்ளமான தோற்றம் உடையவர். ஒரு முறை அவர் ஆபிரகாம் லிங்கனிடம் உரையாடிவிட்டுச் சென்றார்.

அப்பொழுது அங்கு வந்த லிங்கனின் நண்பர்கள் டக்ளசைக் கிண்டல் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் லிங்கனைப் பார்த்து, "மனிதனின் கால்கள் பொதுவாக எவ்வளவு நீளம் இருக்க வேண்டும்?" என்று கேட்டார்கள்.

உடலிலிருந்து தரையைத் தொடுமளவு நீளம் இருக்க வேண்டுமென்று பதில் தந்தார் லிங்கன்.

நூலும் முட்டையும்




வால்டர் ஹென்ஸ் என்பவர் புகழ் பெற்ற இதழ் ஒன்றின் ஆசிரியராக இருந்தார். ஒருமுறை அவர், 'வெளியிட இயலாது வருந்துகிறோம்' என்ற குறிப்புடன் ஒரு பெரிய நூலை எழுதியவருக்கே திருப்பி அனுப்பினார்.

அந்நூலை எழுதிய பெண்மணி, "நீங்கள் ஒரு ஏமாற்றுக்காரர். என் நூல் முழுமையும் படிக்காமலேயே திருப்பி அனுப்பி உள்ளீர்கள். நீங்கள் படித்தீர்களா இல்லையா என்பதை அறிவதற்காக நான் 18, 19, பக்கங்களை ஒட்டி அனுப்பியிருந்தேன். அவை பிரிக்கப்படாமலேயே புத்தகம் என்னிடம் திரும்பி வந்துள்ளது இதற்கு என்ன சொல்கிறீர்கள்?" என்று எழுதியிருந்தாள்.

அதற்கு வால்டர், "அம்மணி! காலை உணவிற்கு நான் சாப்பிடும் முட்டையில் ஒரு துண்டை எடுத்து வாயில் போட்டால் போதும், கெட்டுப் போனது என்று கண்டுபிடிக்க முழு முட்டையும் சாப்பிட வேண்டாம்" என்று பதில் எழுதினார்.

— பேராசிரியா எ. சோதி தொகுத்த 'நல்ல கேள்வி' என்ற புத்தகத்திலிருந்து. வெளியிட்டோர்: நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி — 1.



பூதலூர் முத்து

1

"டாண்... டாண்... டாண்!" பாரதி மேல்நிலைப் பள்ளியின் மணி ஒலித்தது.

காலை 'அசெம்பிளி'க்காக மாணவர்களும் மாணவிகளும் வரிசை வரிசையாக அணிவகுத்து அமைதி காத்துச் சென்று கொண்டிருந்தார்கள். நீலமும் வெள்ளையும் இணைந்த சீருடையில் அவர்கள் அழகுப் பறவைகளாகக் காட்சியளித்தனர்.

பள்ளியின் நுழைவாயிலில்,

"ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் சிறுவரே,
நாடு காக்கும் தலைவராய்
நாளை விளங்கப் போகிறார்"

என்ற பாடலை அவர்கள் ஒவ்வொருவரும் பார்த்துக் கொண்டும் பாடிக் கொண்டும் முகப் பொலிவுடன் திடலை நோக்கிச் சென்றனர். திடலில் அவர்கள் நின்ற தோற்றம் இராணுவ வீரர்களின் ஒழுங்கை நினைவுபடுத்தியது.

அவர்களுடைய பார்வை தலைமை ஆசிரியருக்கு அருகில் நின்று கொண்டிருந்த இருவர் மீது சென்றது. ஒருவர், பஞ்சாப்பிலிருந்து வந்திருந்த உதவி கலெக்டர் பல்பீர்சிங்! அடுத்து நின்றது அவருடைய மகன் பகத்சிங்!

இருவருமே நல்ல சிவப்பு. பல்பீர்சிங் தலைப்பாகை அணிந்திருந்தார். மீசையும் பின்னப்பட்ட தாடியுமாகக் கம்பீரமாகக் காட்சியளித்தார். பகத்சிங் செம்பட்டை நிறத் தலைமுடியை உச்சியில் அள்ளி முடிந்து சிறிய துணியால் கட்டியிருந்தான். கையில் கங்கணம் காட்சியளித்தது. முகத்தில் அழகு தவழ்ந்தது; விழிகளில் ஆர்வம் மின்னியது.

இறை வணக்கம் முடிந்ததும் மாணவர் தலைவன் தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழியைக் கூறினான்:

நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன் என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

ஒரு போதும் வன்முறையை நாடேன் என்றும் சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு



காண்பேன் என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.''

தலைவன் சொல்லச் சொல்ல மாணவர்கள் அதைத் திருப்பிச் சொன்னார்கள்.

தலைமை ஆசிரியர் தமிழன்பன் பல்பீர்சிங், பகத்சிங் இருவரையும் இருக்கையில் அமரச் செய்த பின் மாணவர்களை நோக்கி, ''மாணவச் செல்வங்களே! இப்போது உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைக் கூறப் போகிறேன். பாரதியின் பெயரால் அமைந்த நம் பள்ளியின் பெருமை மேலும் கூடப் போகிறது. பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த பகத்சிங் என்ற மாணவன் இன்று நம் பள்ளியில் சேர்ந்திருக்கின்றான். அவனை நாம் எல்லாரும் நல்வரவு கூறி வரவேற்போம். நம் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்போம்'' என்றார். மாணவர்கள் மகிழ்ச்சியோடு கையொலி எழுப்பினார்கள்.

அவனுடைய தந்தை பல்பீர்சிங் புதுவைப் பகுதியின் உதவி கலெக்டராகப் பொறுப்பேற்றுள்ள செய்தியையும் தலைமை ஆசிரியர் குறிப்பிட்டார்.

பகத்சிங்கின் அழகிய தோற்றத்தையும் சிரித்த முகத்தையும் பார்த்தவாறு மாணவர்கள் வகுப்புகளுக்குச் சென்றனர்.

''பகத்தை நாங்கள் நல்ல முறையில் கவனித்துக் கொள்கிறோம். அவனைப் பற்றி உங்களுக்கு எந்தக் கவலையும் வேண்டாம்.''

தமிழன்பன் சொன்னதைக் கேட்டுப் பல்பீர் சிங்கிற்கு மிகுந்த மனநிறைவு ஏற்பட்டது.

தலைமை ஆசிரியரின் அறையில் பாரதியின் படத்துக்குக் கீழே,

''நன்மையும் அறிவும் எத்திசைத் தெனினும் யாவரே காட்டினும் மற்றவை தழுவி வாழ்வீராயின் அச்சமொன்றில்லை'' என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. அதன் பொருள் என்னவென்று பல்பீர்சிங் வினவினார். தமிழன்பன் ஆங்கிலத்தில் விளக்கிச் சொன்னார். அந்தக் கருத்து அவருக்கு மிகவும் பிடித்துப் போகவே, தம்முடைய டைரியில் குறித்துக் கொண்டார்.

அந்த அறையை ஒட்டி அமைந்திருந்த நூலகத்தின் சுவரில் 'வெள்ளிப் பனி மலையின் மீதுலாவுவோம்' என்ற பாரதியின் பாடல் வண்ண ஓவியமாகக் காட்சியளித்தது. ஒவ்வொரு காட்சியையும் தமிழன்பன் விவரித்துச் சொல்லச் சொல்லப் பல்பீர்சிங் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். காட்சிகளை வரைந்துள்ள முறையைப் பாராட்டினார்.

சற்று நேரத்தில் தமிழன்பனிடமும் ஆசிரியர்களிடமும் விடைபெற்றுக் கொண்டு அவர் புறப்பட்டார்.

★ ★ ★ ★

ஆறாம் வகுப்பு மாணவர்கள் பகத்தைச் சூழ்ந்து கொண்டு நின்றார்கள். பஞ்சாப்பில் அவனுடைய கிராமம், வீடு, அவன் படித்த பள்ளிக்கூடம், அவனுடைய ஆசிரியர்கள், தோழர்கள் — அவர்களுடைய விளையாட்டுக்கள் இப்படிப் பல கேள்விகளை அவர்கள் கேட்டார்கள்.

பள்ளியில் சேர்ந்த இரண்டாம் நாளே அவன் சிறிய வாளி ஒன்றை எடுத்துக் கொண்டு மற்ற மாணவர்களோடு சேர்ந்து பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றத் தொடங்கி விட்டான். பூஞ்செடிகளை நட்டுத் தண்ணீர் ஊற்றுவது என்றால் அவனுக்கு மிகுந்த ஆசை. அங்கு வளர்ந்திருந்த செம்பருத்தியும், சாமந்தியும் ரோஜாக்களும் அவனுடைய நெஞ்சத்தைக் கவர்ந்தன. அடர்ந்து கிளை பரப்பி நின்ற வேப்ப மரங்களும் வாகை மரங்களும் புன்னை மரங்களும் பரவசமூட்டின. அந்தப் பள்ளி மாணவர்களின் மொழி புரியா விட்டாலும் அவர்களுடைய அன்பு அவனை ஈர்த்தது.

★

பகத் பள்ளியில் சேர்ந்த மூன்றாம் நாள் காலை. இறை வணக்கப் பாடல் ஒலித்தபின் தமிழன்பன் மாணவர்களை நோக்கி,

''இப்போது நம் பஞ்சாப் நண்பன் பகத் இனிமையான ஒரு பாடலைப் பாடுவான்'' என்று அறிவித்ததும் மாணவர்கள் மகிழ்ச்சியோடு ஆரவாரம் செய்தார்கள்.



பகத் சிரித்துக் கொண்டே மான் குட்டியாகத் துள்ளி வந்து 'மைக்' முன்னால் நின்றான். 'என்ன பாடலைப் பாடப் போகிறானோ தெரியவில்லை. பங்க்ரா நடனத்துக்குரிய பாடலைப் பாடினாலும் பாடுவான். பொருள் புரியாவிட்டாலும் ராகத்தையாவது ரசிப்போம்' என்று மாணவர்கள் நினைத்தார்கள். அவர்களுக்கு ஒரு வியப்புக் காத்திருந்தது.

அவன் 'ஓடி விளையாடு பாப்பா" என்ற பாடலைத் தொடங்கியதுமே, அதைச் சற்றும் எதிர்பாராத மாணவர் கூட்டம் கடல் அலையென முழக்கம் செய்தது. அந்த ஒலி பள்ளி முழுதும் எதிரொலித்தது.

அவன் படித்த பஞ்சாபிப் பள்ளியில் ஒருமைப்பாட்டை வளர்க்கும் நோக்கில் அந்தப் பாடலை மிக நன்றாகக் கற்றுக் கொடுத்தார்கள் என்று அவன் சொன்னான்.

'வேற்றுமொழிக்காரர்கள் நம் தாய்மொழியைப் பேசும் போதும், தாய்மொழிப் பாடலைப் பாடும் போதும் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது! என்று ஒவ்வொருவரும் உணர்ந்தார்கள்.

அசெம்பிளி முடிந்து பகத் அவனுடைய வகுப்பை நோக்கிச் சென்றபோது பத்தாம் வகுப்பைச் சேர்ந்த அரவிந்தன் என்ற மாணவன் ஓடி வந்தான்.

பகத்தைப் போலவே செக்கச் செவேல் என்று சிவந்த உடம்பு. அன்பு நிறைந்த விழிகள்; நீண்ட கூரிய மூக்கு; தூய்மையான உடை; தோளில் ஓர் அழகிய புத்தகப் பை!

அவன் பகத்தின் கைகளைப் பற்றி அன்போடு குலுக்கினான்.

''பகத், பாரதியின் பாடலை நீ பாடியது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருந்தது.''

''நன்றி'' — பகத்தின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

''பகத், இன்னொரு மகிழ்ச்சியான செய்தி!'' என்று அறிவித்தான் அரவிந்தன்.

''என்ன அந்தச் செய்தி?'' — அவன் விழிகளில் ஆர்வம் துள்ளியது.

''உன்னுடைய தந்தை பல்பீர்சிங் நாங்கள் வசிக்கிற நேரு நகர்ப் பகுதியில்தான் வீடு பார்த்திருக்கிறார். என்னுடைய தந்தை தியாகராஜன் தான் இதைச் சொன்னார். இருவரும் போய்த்தான் வீட்டைப் பார்த்தார்களாம். இனிமேல் நாம் அடிக்கடி சந்தித்துக் கொள்ளலாம்; சேர்ந்து படிக்கலாம்; அருகில் இருக்கிற அழகிய பூங்காவுக்குப் போகலாம்.''

அரவிந்தனின் அன்பு மொழியைக் கேட்டுப் பகத்தின் உள்ளம் ஆனந்தப் பண் பாடியது.

''அரவிந்தன்! நீ பெரிய வகுப்புப் படிக்கும் மாணவன். இருந்தும் நீ என்னிடம் காட்டும் அன்பு உன் உயர்ந்த பண்பை வெளிப்படுத்துகிறது. நாம் நல்ல நண்பர்களாக விளங்குவோம்'' என்றான் அவன்.

* * *

நேரு நகரில் பிரபல மில் அதிபர் தியாகராஜன் வசித்து வந்தார். அவர் முகத்தில் எப்போதும் புன்னகை தவழும். உள்ளத்தில் அன்பு நிறைந்திருக்கும். அயராத உழைப்பு, தன்னம்பிக்கை இவற்றின் இருப்பிடமாகத் திகழ்ந்தார் அவர்.

இரண்டாம் உலகப் போர் மூண்ட போது பர்மாவில் செல்வத்தை விட்டு விட்டு அகதியாகத் தாய்நாட்டுக்குத் திரும்பி வந்தவர் அவர்.

வறுமை அவரைப் பயமுறுத்தியது. தோல்விகள் தொடர்ந்து வந்தன. தியாகராஜன் விடாமுயற்சியுடன் அவற்றோடு போரிட்டார். நெசவுத் தொழிலாளியாக வாழ்க்கையைத் தொடங்கிய அவர், படிப்படியாக முன்னேறி ஆலை அதிபராகி விட்டார்.

செல்வம் குவிந்த போதும் செருக்கு அடையாமல் தாம் நடந்து வந்த பாதையை நினைத்துப் பார்த்து, எல்லாருக்கும் உதவி செய்து வாழும் பண்பாளராக விளங்கினார் அவர்.

பல்பீர்சிங் புதுவைக்கு மாற்றுதல் ஆகி வந்த மறுநாளே தியாகராஜனின் அறிமுகம் அவருக்குக் கிடைத்தது. உடல் ஊனமுற்றவர்களுக்குக் கருவிகள் வழங்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த தியாகராஜன் பல்பீர் சிங்கைச் சிறப்பு விருந்தினராக



அழைத்திருந்தார்.

பாரதி மேல்நிலைப் பள்ளியைப் பற்றித் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு அப்போதுதான் அவருக்கு ஏற்பட்டது.

அந்தப் பள்ளியில் உழைப்பும் சுறுசுறுப்பும் கட்டுப்பாடும் மேலோங்கியிருப்பதைப் பார்த்து மகிழ்ந்தார் பல்பீர் சிங். அன்பும் பண்பும் பூத்து மணம் பரப்பும் அந்தப் பள்ளி அவருக்கு மிகவும் பிடித்து விட்டது. எந்தத் தயக்கமும் இல்லாமல் பகத்தை அங்கு சேர்த்து விட்டார்.

* * *

தியாகராஜனின் அம்பாசிடர் கார் பல்பீர் சிங் வீட்டு முன்னால் வந்து நின்றது.

பல்பீர், பல்பீரின் மனைவி ஹர்ஜித் கௌர். மகள் பலீந்தர் கௌர், பகத் அவரையும் அவருடைய மனைவி வேதாம்பாளையும் வரவேற்றனர்.

ஒரு பெரிய அலுவலரின் வீடு மிக எளிமையாக விளங்கிய அதிசயத்தைத் தியாகராஜன் கண்டு மிகவும் வியந்தார்

''உங்களுக்கு தேவையானது எதுவாக இருந்தாலும் எங்களிடம் சொல்லுங்கள். நாங்கள் ஏற்பாடு செய்கி

றோம்'' என்றார் தியாகராஜன்.

''எங்கள் பகத்துக்கு ஒரு நல்ல பள்ளியில் இடம் கிடைக்க உதவி செய்தீர்களே அதுவே போதும்! மிக்க நன்றி!'' என்றார் பல்பீர்சிங்.

''பல்பீர்! விலங்குகளும் தாவரங்களும் மக்களுக்கு எவ்வளவு உதவியாக இருக்கின்றன! எவ்வளவு நன்மைகள் செய்கின்றன! மனிதர்களாகப் பிறந்து விட்டோம். நம்மால் இயன்ற நன்மையை அடுத்தவர்க்குச் செய்வோமே!

''நாட்டின் பல பகுதிகளில் இருந்து அரசுப் பணியின் காரணமாக எவ்வளவோ பேர் மாற்றுதல் பெற்று இங்கு வருகிறார்கள். அவர்களுடைய எல்லாக் கவலைகளையும் விட 'நம் பிள்ளைகளுக்குப் பள்ளிகளில் இடம் கிடைக்குமா... சேரும் பள்ளி நல்ல பள்ளியாக இருக்குமா என்றுதான் கவலைப்படுவார்கள். அவர்களுடைய அந்தக் கவலையை நீக்குவது தான் என் முதல் வேலை!'' என்றார் தியாகராஜன்.

''ஒவ்வொரு ஊரிலும் உங்களைப் போல் பத்துப் பேர் இருந்தால் போதும்; நம் நாடு விரைவில் மகிழ்ச்சி மிகுந்த ஒரு நாடாக மாறிவிடும்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார் பல்பீர் சிங்.

''அரவிந்தன் பள்ளிக்குப் போகும் போது பகத்தையும் அழைத்துக் கொண்டு போகச் சொல்கிறேன். கொஞ்ச நாளில் இந்தப் பகுதியெல்லாம் பகத்துக்குப் பழக்கமாகிவிடும்.''

''அவனுக்கென்று ஒரு சைக்கிள் இருக்கிறது. ஒரு வாரமாக அதை எடுக்க முடியாமல் இருப்பதற்காக அவன் மிகவும் வருத்தப்படுகிறான்.''

''பகத்! வருத்தப்படாதே.... அரவிந்தனோடு நான்கைந்து நாள் போய் வா... பிறகு உன் சைக்கிளில் நீ போகலாம்'' என்றார் தியாகராஜன்.

''அங்கிள், மிகுந்த நன்றி!'' என்றான் பகத்.

அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு தியாகராஜன் புறப்பட்டார். அப்போது நினைவாக சிலப்பதிகாரம், மூவேந்தர் கதைகள், புலவர் கதைகள் என்று சில ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களைப் பகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்.

அவனுடைய இதயம் ஆனந்தத்தில் மிதந்தது.

அன்று பள்ளி விடுமுறை. அரவிந்தன், ராமு, பீட்டர், முகம்மது அலி ஆகியோர் ஒன்றாக அமர்ந்து படிக்க வேண்டிய பாடங்கள், வீட்டுப் பயிற்சிகள் எல்லாவற்றையும் படித்து, எழுதி முடித்தனர். அதன்பின் அரவிந்தன் தன் காமிராவை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டான். பின்பு அவர்கள் பகத் வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

பகத் அவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்று மாடிக்கு அழைத்துச் சென்றான்.

அரவிந்தன் பகத்தைத் தன் நண்பர்களுடன் நிற்க வைத்துப் படம் எடுத்தான். அதன் பின் காமிராவைத் தயார் நிலையில் வைத்து விட்டு அவனும் வந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டான். 'கிளிக்' என்று ஒலியெழுப்பிக் கொண்டு அந்தக் காமிரா தானாக இயங்கியது: படம் பிடித்தது!

பகத் அந்தக் காமிராவை வாங்கி ஆர்வத்தோடு கவனித்தான். 'வியூ பைண்டர்' வழியாகப் பார்வையைச் செலுத்தினான். படம் பிடிப்பது பற்றி அரவிந்தனிடம் பல கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தான். அவனும் சளைக்காமல் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

அப்போது அரவிந்தனின் தங்கை விமலா பதற்றத்தோடு ஓடி வந்தாள்.

''அண்ணா அண்ணா... பள்ளிக் கூடத்தில் ஏதோ விரும்பத்தகாத நிகழ்ச்சி நடந்திருக்கிறதாம். தலைமை ஆசிரியர் உன்னை உடனே வரச் சொல்லி ஆள் அனுப்பியிருக்கிறார்'' என்றாள்.

அரவிந்தனுக்குத் திகைப்பும் அதிர்ச்சியுமாக இருந்தது. பகத்திடம் அவசரமாக விடைபெற்றுக் கொண்டான். உள்ளத்தில் குழப்பம் சூழ்ந்திருந்தது. சைக்கிளை எடுத்தான்; மிதித்துக் கொண்டு வியர்க்க விறுவிறுக்கப் பள்ளியை நோக்கிப் பறந்தான்.

(தொடரும்)

உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்

ஷர்து எஸ். ராஜ்

மோலகிரி மலை தர்மபுரி மாவட்டத்தின் எல்லையில் உள்ளது. அதன் அடிவாரத்தில் பல கிராமங்கள் உள்ளன. அவைகளில் சில தமிழ்நாட்டைச் சேர்ந்தவை. அக் கிராமங்களில் ஒன்றைச் சேர்ந்தவன் கண்ணன் என்ற சிறுவன்.

கண்ணன், மிருகங்கள் பறவைகள் மீது மிகுந்த அன்புடையவன். அவ்வுயிரினங்களை யாரேனும், துன்புறுத்துவதைக் கண்டால் அவன் மனம் மிகவும் வருந்தும். இதற்காகச் சில சமயங்களில் அவன் பிற சிறுவர்களிடம், அவர்கள் செய்யும் தவற்றை எடுத்துக் கூறுவான். சிலர் அவனை 'சித்தார்த்தன்' என கேலி செய்தனர். எனினும் அவன் பிராணிகளிடம் கொண்ட அன்பு ஒருபோதும் குறைய வில்லை.

அப்போது கோடை காலம். அப்பகுதியிலுள்ள தமிழ்நாடு, கர்நாடகம் இரு மாநிலங்களையும் சேர்ந்த பல கிராமங்கள் கொடிய வறட்சியால் வாடின. வெயில் அனலாய் விழுந்தது. மரம் செடி கொடிகள் பட்டுப் போயின. புற்செடிகள் நெருப்புப் பட்டது போல் தீய்ந்து போயின. குடிப்பதற்குத் தண்ணீர் கூடக் கிடைக்காமல் அப்பகுதி மக்கள் துன்புற்று வருந்தினர்.

கண்ணனின் கிராமத்திலிருந்து சிறிது தொலைவில் ஒரு கிணறு இருந்தது. அதில்தான் ஓரளவு தண்ணீர் ஊறியது. மக்கள் அனைவரும் அதையே பயன்படுத்தி வந்தனர்.

ஒருநாள் பகல் பதினொரு மணியளவில் கண்ணன் அக்கிணற்றுக்குக் குளிக்கச் சென்றான். சிறிய வாளி ஒன்றினால் நீரைச் சேந்தி ஒரு பெரிய வாளியில் ஊற்றிக்கொண்டிருந்தான். அப்போது தாகத்தால் வாடி வதங்கிப் போயிருந்த ஒரு பசு அவ்வழியாக வந்தது. அது அவனது வாளியினுள், தலையை விட்டுத் தண்ணீர் குடிக்கத் தொடங்கியது. இதைக் கண்ட கண்ணனுக்கு அதன் மேல் மிகுந்த இரக்கம் உண்டாயிற்று. 'ஐயோ பாவம்! எவ்வளவு கொடிய தாகமிருந்தால் இப் பசு துணிந்து வந்து இந் நீரை அருந்தும்' என்று எண்ணினான்.

அக் கிணற்றின் அருகே நின்று கொண்டிருந்த சில சிறுவர்கள் அப் பசுவை விரட்ட முயன்றனர். கண்ணன் அவர்களைத் தடுத்தான். பசு தாகம் தீரத் தண்ணீர் குடித்தது.

"இவர் கலியுகக் கண்ணன், பசுக்களைக் காப்பாற்றும் காவலன்" என சிறுவர்கள் கிண்டல் செய்தனர்: கண்ணனோ பதிலுரைக்கவில்லை.

சில பசுக்கள் சிறிது தூரத்தில் இருந்து இதைக் கண்டன. அவைகளும் அக் கிணற்றை நோக்கி வந்தன. கண்ணன் தண்ணீரால் வாளியை

நிரப்பினான். அப் பசுக்களும் தாகம் தீர்த்துச் சென்றன.

பின்னர் ஒவ்வொரு நாளும் அதே வேளையில் கண்ணன் அக் கிணற்றுக்கு வந்தான். பசுக்களும் சரியாக அதே சமயத்தில் அங்கு வந்தன. அவன் நீரை இறைத்து வாளியில் நிரப்பினான். நீண்ட நேரம் நீர் இறைத்து அவன் கை வலித்தது. இருந்த போதிலும் பசுக்கள் எல்லாம் நீர் அருந்தும் வரை அவன் இறைத்து ஊற்றினான். பசுக்கள் நீரருந்தி மகிழ்ந்தன. கண்ணனும் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.


கோடையில் கொடுமை குறைய வில்லை. பல உழவர்கள் தங்கள் பசுக்களை விலைபேசி விற்றனர். இன்னும் சிலர் பிற ஊர்களிலிருந்த தங்களின் உறவினர்களின் வீட்டில் அவற்றை ஒப்படைத்தனர். இவ்வாறு அவ்வூரில் பசுக்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து போயிற்று. எனினும் தன்னால் இயன்ற நாட்களில் எல்லாம் கண்ணன் அங்கிருந்த ஒருசில பசுக்களுக்குத் தண்ணீர் வழங்கினான்.

கோடை விடுமுறை முடிந்தது; பள்ளிக் கூடங்கள் திறந்தன. கண்ணனும் பள்ளிக்கூடம் சென்றான். பள்ளி வேலை நாட்களில் அவனால் நீர் இறைத்து ஊற்ற முடியவில்லை. ஆனால், விடுமுறை நாட்களில் பசுக்களுக்கு அவன் தண்ணீர் இறைத்து ஊற்றினான்.

கண்ணன் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு ஒரு சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிவசமுத்திரம் வழியாக மைசூர் சென்று அங்கிருந்து மாண்டியா, கனகபுரம் வழியாக பெங்களூரையடைந்து, பின்னர் தங்கள் கிராமத்துக்குத் திரும்புவது என்ற ஏற்பாடு. கண்ணனும் தன் பெயரை அக் குழுவில் பதிவு செய்து கொண்டான்.

மாணவர்கள் கல்விப் பயணம் தொடங்கியது. முதன் முதலாகச் சிவசமுத்திரம் செல்லும் வழியில் அக் குழு ஒரு கோசாலையைப் பார்க்கச் சென்றது.

அரசு பொறுப்பேற்று நடத்தும் மாடுகளின் காப்பகத்துக்குச்



'கோசாலை' என்று பெயர். கோடையின் போதும், வறட்சியின் போதும் தங்கள் மாடுகளை வளர்க்க இயலாத உழவர்கள் அவைகளைக் கோசாலையில் ஒப்படைத்து விடுவர். அங்கு அலுவலர்கள், கால்நடை மருத்துவர்கள், உதவியாளர்கள் என பலர் இருப்பர். அவர்கள் அம்மாடுகளைக் கவனமாக வளர்த்து வருவர். மாடுகளைக் குளிப்பாட்டுவது, சத்தான தீவனங்களை அளிப்பது, மருத்துவ சிகிச்சை அளிப்பது, தொழுவங்களைச் சுத்தம் செய்வது, உரக்கிடங்குகள் அமைப்பது, பால் கறப்பது போன்ற எல்லாப் பணிகளும் அங்கு சிறப்பாக நடைபெறும்.


கோடை காலம் முடிந்ததும் உழவர்கள் அங்கு சென்று தங்கள் மாடுகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கு உழவர்கள் பணம் செலுத்த வேண்டியதில்லை. மாநில அரசே கோசாலைப் பராமரிப்புச் செலவு முழுவதையும் ஏற்றுக் கொள்கிறது.

கோசாலை மேலாளரின் அனுமதி பெற்று ஆசிரியர்களும் மாணவர்களும் உள்ளே நுழைந்தனர். மேலாளர் அவர்களை ஒவ்வொரு பிரிவுக்கும் அழைத்துச் சென்று மாடுகள் பேணி வளர்க்கப்படும் முறையைத் தமிழில் விளக்கினார். அவருடைய பேச்சில் ஒரு சில கன்னடச் சொற்கள் கலந்திருந்த போதிலும் மாணவர்கள் நன்றாகப் புரிந்து கொண்டனர்.

இப்போது மாணவர்கள் வேறொரு பிரிவினுள் நுழைந்தனர். அங்கு நாட்டுப் பசுக்கள் அடைக்கப்பட்டிருந்தன. கண்ணனைக் கண்ட ஒரு பசு 'ம்மா' என்று கத்தியது. பின்னர் இன்னும் சில பசுக்கள் கத்தின. ஐந்து பசுக்கள் கண்ணனை நெருங்கி வந்தன. பார்வையாளர்களுக்கும் மாடுகளுக்கும் இடையே மூங்கில் தட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. மாடுகள் அவ்விடைவெளிகளில் தலைகளை நுழைத்தன. கண்ணன் அவற்றை இனம் கண்டு கொண்டான். அவைகளின் தலைகளில் ஆதரவாகத் தடவிக் கொடுத்தான். இதைப் பார்த்த மேலாளரும் ஆசிரியர்களும் ஆச்சரியமடைந்தனர். அப் பசுக்கள் ஏற்கெனவே கண்ணனுக்குப் பழக்கமானவைகள். அவைகளின் சொந்தக்காரர்களால் அவை கோசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

கோசாலை மேலாளர் கண்ணனிடம், "தம்பி, இந்த மாடுகளை எல்லாம் உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

கடந்த கோடைகாலத்தில் அவ்வட்டாரத்தில் நிலவிய வறட்சி பற்றியும் அம்மாடுகளுக்கு அவன் தண்ணீர்





இறைத்து வழங்கியதைப் பற்றியும் கண்ணன் கூறினான். மேலாளர் அவனைப் பாராட்டினார்.

''தம்பி, மாடுகளும் நம் நாட்டின் செல்வம்தான். பாலும், பால் பொருட்களும் உணவு பற்றாக் குறையைத் தீர்ப்பதில் கணிசமான பங்கு வகிக்கின்றன. மாடுகளின் சாணமும் சிறுநீரும் சிறந்த இயற்கை உரங்களாகும். கால்நடைப் பாதுகாப்பில், பசுக்களைப் பேணுவதில் ஒரு நாடு சிறந்த கவனம் செலுத்துமானால் அந் நாடு 'வெண்மைப் புரட்சி'யில் மாபெரும் சாதனையை நிறுவும்'' என்றார் அவர்.

மேலும் தொடர்ந்து மேலாளர் பேசினார். ''இவ்வாறான ஒரு சாதனையை ஏற்படுத்த வேண்டுமென்றால் மாடுகளின் மேல் கரிசனத்தோடு மிகுந்த அன்பு செலுத்துகின்ற உன் போன்ற பலர் முன்வர வேண்டும். நீ மாடுகளின் மீது கொண்டுள்ள அன்பு மிகமிகப் பாராட்டத்தக்கது.'' என்று கூறினார்.

கண்ணன் மாடுகளை ஆதரவாகக் தடவினான். தன் அன்பைத் தெரிவித்தான். இப்போது மாணவர்களும் ஆசிரியர்களும் 'மருத்துவப் பிரிவை நோக்கிச் சென்றனர். மேலாள நம் கண்ணனும் அதன் உள்ளே நுழைந்தனர். கண்ணனுக்குப் பழக்கமான அப் பசுக்கள் மீண்டும் 'ம்மா' என்று கத்தின.

கோசாலை மேலாளரின் வார்த்தைகள் கண்ணனின் உள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்தன. 'பசுக்களின் இன வளர்ச்சியில் நான் மிகுந்த அக்கறை செலுத்துவேன்; அதன் மூலம் மனித சமுதாயம் நலம்பெற உழைப்பேன்; இதுவே என் வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்கும்.' என கண்ணன் உறுதி எடுத்துக் கொண்டான். இப்போது அம் மாடுகள் 'ம்மா' என்று மீண்டும் கத்தின.

அக் கல்விப் பயணத்திலே பல இடங்களைக் கண்ணன் பார்த்தான். ஆனால், எந்த இடங்களும் அவன் நினைவில் நிற்கவில்லை. மாடுகள் அவனிடம் காட்டிய நன்றியுணர்வே அவன் நினைவை ஆக்கிரமித்துக் கொண்டது.



பள்ளியும் படிப்பும்

த.கி.இராமசாமி

அப்பாவின் வருகையை மிக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள் சாந்தி.

காலையிலே போனவர். மத்தியானம் ஆயிற்று. சாயங்காலமும் வந்துவிட்டது. இன்னமும் வரக் காணவில்லையே என்ற கவலை அந்தப் பிஞ்சுள்ளத்தைக் கவ்விக் கொண்டிருந்தது.

அம்மாவுக்கு இன்றைக்கு ஆபீஸில் ஏதோ இன்ஸ்பெக்ஷனாம். கண்டிப்பாகப்போகணும்என்றுசொல்லி, காலையில் சாப்பிட்டதும் சாப்பிடாததுமாக — கைப்பையைத் தூக்கிக் கொண்டு கிளம்பி விட்டாள். சாந்திக்கு அப்போது அழுகையே வந்து விட்டது! மனம் பின்னோக்கிச் சென்றது.

"எல்லாம் உனக்காகத்தானே இவ்வளவு பாடுபடுகிறோம். நீ மட்டும் இன்னும் கொஞ்சம் நன்றாக மார்க் வாங்கியிருந்தால், அந்தப் பெரிய ஸ்கூலிலேயே இடம் கிடைச்சிருக்குமே!" என்றாள் சாந்தியின் தாய். அதில் வெறுப்பும் கலந்திருந்தது.

ஏற்கெனவே நொந்து போயிருந்த சாந்திக்கு இந்த வார்த்தை 'சுரீர்' என்று உறைத்தது. இயல்பாகவே சாந்திக்கு ரோஷம் உண்டு. இப்பொழுது இன்னும் அதிகமாயிற்று.

'அம்மா சொல்வதிலேயும் ஓர் உண்மை இருக்கிறது. நம்முடன் படித்த உஷாவும், பிரேமாவும் கல்யாணியும் ஆங்கிலத்திலும் கணக்கிலும் அதிக மார்க் வாங்கியிருப்பது உண்மைதான். ஆனால், அவர்களைவிட, தமிழில் நான் முப்பத்தொரு மார்க் கூட வாங்கிப் பள்ளிக்கே பெருமை சேர்த்துக் கொடுத்ததை அம்மாவும், மற்றவர்களும் ஏன் உணர மாட்டேனென்கிறார்கள்?' என்று பன்னிரண்டு வயதுச் சாந்தி மனம் குமுறினாள். ஆனால், அவள் பெற்றோரும், மற்றவர்களும், அவள் தமிழில் அதிக மார்க் வாங்கியதைப் பற்றிக் கவலைப்படவே இல்லை.

"நானும் யார் யாரையோ கேட்டுப் பார்த்துவிட்டேன். சாந்திக்கு அந்த ஸ்கூலிலே இடம் கிடைக்கிறது கஷ்டம் தானாம். டொனேஷன்கூட ஐயாயிரம் ரூபாய் கொடுக்கிறேன்னு சொல்லியும் பார்த்தேன். பிரயோஜனப்படற மாதிரி இல்லை. எதுக்கும் நாளைக்குக் காலையிலே போய்ப் பார்க்கிறேன்" — இது சாந்தியின் தந்தையின் வார்த்தை.

சற்று தள்ளி உட்கார்ந்து கொண்டிருந்த சாந்திக்குக் கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் போய்விடவே, துக்கம்



ஆசிரியர்: எந்தக் கேள்வி கேட்டாலும் பதில் தெரியாது. தெரியாதுன்னு சொல்றியே. அமாவாசை அன்னிக்கு நிலவு தெரியுமா? என்கிற கேள்விக்காவது ஒழுங்காப் பதில் சொல்!

பையன்: தெரியாது!

— கடலூர் கன்னியப்பன்.

தொண்டையை அடைத்தது. பேசாமல் எழுந்து போய்ப் படுக்கையின் மீது விழுந்தாள்.

சாந்தியைத் தேடி உஷாவும் கல்யாணியும் வந்தார்கள்.

"எனக்கு அந்த ஸ்கூலிலே இடம் கிடைச்சிடுத்துடி. யூனிஃபார்ம் தைக்க இன்னிக்கு சாயங்காலம் போறோம்" என்றாள் உஷா சாக்லேட்டை நீட்டிக் கொண்டு.

"ஆமாம் சாந்தி, எனக்கும் கண்டிப்பா இடம் தர்றேன்னு சொல்லிட்டாங்க. நானும்உஷாவும்அதிலேசேர்ந்திட்டோம். நீ என்னடி பண்ணப் போறே?" கல்யாணி சாக்லேட்டை மென்றுகொண்டே கேட்டாள்.

"மார்க் குறைவாக இருக்கிறதாகச் சொல்றாங்களாம். எங்க அப்பாவும் அம்மாவும் என்னைத் திட்டுறாங்க. நான் என்னடி செய்யறது? அப்போ உடம்பு சரியில்லாமே பரீட்சையை நல்லபடியா எழுத முடியல்லே. ம்...ம், பிள்ளையாரைத்தான் வேண்டிக் கொண்டு இருக்கேன். பாவம், அப்பா மூணு நாளா எனக்காக நேரம் காலம் பார்க்காமல் அலைகிறார். இன்னும் ஒரு முடிவும் தெரியல்லே" — சோகம், சாந்தியைப் பேச விடாமல் தடுத்தது.

உஷா, சாந்தி, கல்யாணி மூவரும் கடந்த நான்கு ஆண்டுகளாக ஒரே பள்ளியில் படித்தவர்கள். இந்த ஆண்டு அவர்கள் தேர்வில் வெற்றி பெற்று விட்டார்கள். என்றாலும் மேற்கொண்டு அதே பள்ளியில் படிக்க வழியில்லை.

சாந்தி தமிழில் கெட்டிக்காரி. நன்றாகக் கவிதை எழுதுவாள். சரளமாகப் பாரதியார் கவிதைகளை, திருக்குறளை, நாலடியாரை ஒப்பிப்பாள். ஆனால், மற்ற பாடங்களில் சுமார் தான்!

உஷாவும், கல்யாணியும், பிரேமாவும் 'ஆங்கில மீடியத்தில்' கெட்டிக்காரிகள். நன்றாகப் படிப்பார்கள். பரீட்சையில்நல்லமார்க்வாங்கியிருந்ததால், அந்த ஊரிலே மிகவும் பிரபலமாக இருந்த பெரிய பள்ளியில், தடையின்றி இடம் கிடைத்துவிட்டது!

தோழிகளை விட்டுப் பிரிகிறோமே என்ற கவலை சாந்தியை அதிகம் வாட்டிற்று. எப்படியும் தன் பெற்றோர் தனக்கும் அந்தப் பள்ளியில் இடம் வாங்கித் தருவார்கள் என்று நம்பியிருந்தாள்.

அந்த நம்பிக்கையும் இன்று வீண் போயிற்று.

எப்படித் தோழிகள் முகத்தில் விழிப்பேன்' என்ற அவமானம் சாந்தியைப் பிடுங்கித் தின்றதால், தனியே உட்கார்ந்து அழுது தீர்த்தாள்.

அப்படியே அடிக்கடி பிள்ளையாரையும் மனப்பூர்வமாக வேண்டிக் கொண்டாள். சாந்தியின் இந்த மன உறுத்தல்லை, அதன் காரணமாக ஏற்பட்ட பரிதவிப்பைச் சாந்திக்குத் தெரியாமல், அவளது தந்தை நன்கு புரிந்து கொண்டார். சாந்தியை நினைக்கும் பொழுதே அவருக்கு மனம் நெகிழ்ந்து போனது. தனக்கிருக்கும் ஒரே மகள் சாந்தியை நன்கு படிக்க வைப்பதைத் தானே நம் வாழ்க்கையில் முக்கியமாக நினைத்தோம்? எதற்காகச் சம்பாதிக்கிறோம்? நம் சாந்திக்குத்தானே! — என்றுஎண்ணியவர்,சாந்தியைத்தட்டியெழுப்பி, "கவலைப்படாதே, உனக்கு எப்பாடு பட்டேனும் அதே ஸ்கூலிலே இடம் வாங்கித் தர்றேன். நாளைக்குக் காலையிலேயே கிளம்பிடறேன். பாரேன், வரும்பொழுது, உனக்கு 'சீட்' வாங்கிக் கொண்டு தான் வருவேன்" — என்று அவளைத் தேற்றினார்.

சாந்திக்கு இந்த வார்த்தை இதமாக இருந்தது. அதற்கப்புறம்தான் சாப்பிடவே போனாள்.

'அதிகாலையில் போன தந்தை இன்னும் வரவில்லையே!' என்ற கவலையால் சாந்தி தவித்துக் கொண்டிருந்தாள். பாட்டியோடு வாசற்படியில் காத்துக் கொண்டிருந்த சாந்திக்கு, அம்மா மட்டும் அவசர அவசரமாக ஆட்டோவில்வந்து இறங்குவதுதெரிந்தது. 'எதற்காக அம்மா இப்படி ஓடி வருகிறாள்? அம்மா முகத்திலே ஏன் சிரிப்பே இல்லை? தலை, பொட்டு எல்லாம் கலைந்திருக்கே?'

''என்னம்மா, ஏன் இப்படி இருக்கிறாய்?'' என்று கேட்டுக் கொண்டே அம்மாவின் அருகில் ஓடிவந்தாள் சாந்தி.

''போடீ அதிர்ஷ்டம் கெட்டவளே!'' — என்று கடுமையான வார்த்தைகளைக் கூறியதோடு, அருகில் வந்த சாந்தியைப் பிடித்து ஒருபுறம் தள்ளிவிட்டுக் கூடத்திற்கு ஓடினாள் அம்மா.

சாந்திக்கு ஒரே—அதிர்ச்சி. மேலும் பேச முடியாமல் தவித்தாள்.

இதற்குள் பாட்டி மெள்ள எழுந்து வந்தாள்.

''என்னடி ஆச்சு?'' — என்று பதற்றத்துடன் கேட்டாள்.

''எல்லாம்இவளாலேவந்தவினை! அவர் ஸ்கூலுக்குப் போனாரோ இல்லையோ, அந்த ஸ்கூல் பிரின்சிபால், இவர் எவ்வளவோ மன்றாடியும் சாந்திக்கு இடம் தர மாட்டேன்னு சொல்லிட்டாராம். அந்த அதிர்ச்சியைத் தாங்காமே அவர் அப்படியே மயக்கம் போட்டு விழுந்துட்டார். இப்போ ஆஸ்பத்திரியிலே இருக்கிறார்.''

ஆத்திரத்தோடு சாந்தியைப் பார்த்து அவளை அடிக்காத குறையாகச் சொன்னாள், சாந்தியின் தாய்! ஆத்திரம் முகத்தில் வெடிப்பதைக் கண்டு பயந்து, ''அப்பா!'' — என்று கதறிவிட்டாள் சாந்தி. அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருக ஆரம்பித்தது.

''இப்போ எப்படி இருக்கான்?'' — தன் பிள்ளையைப் பற்றிக் கவலைப்பட்டாள் சாந்தியின் பாட்டி.

''பரவாயில்லை. லேசான மயக்கம் தான். இதயம் பலமான அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இனிமேல், ரொம்ப ஜாக்கிரதையாக இருக்



கணும்னு டாக்டர் சொல்லியிருக்கார்...'' என்று சாந்தியின் தாயார் சமாதானமாகச் சொன்னாள்.

''இரண்டு நாட்கள் ரெஸ்ட் வேணும்னு ஆஸ்பத்திரியிலே சொன்னாங்க. ஃப்ளாஸ்க், போர்வையெல்லாம் எடுத்துக் கொண்டு ராத்திரிக்கு நான் போகணும். அதற்குள்ளே வீட்டை ஓரளவு ஒழுங்குபடுத்தணும்'' என்றுசொல்லிப்பரபரப்பாகவேலைகளைக் கவனித்தாள்.

''அம்மா, நானும் உன்கூட ஆஸ்பத்திரிக்கு வர்றேம்மா. எனக்கு அப்பாவைப் பார்க்கணும் போல இருக்கு. எனக்கு அந்த ஸ்கூலிலே இடம்கிடைக்காட்டி பரவாயில்லை. எந்த ஸ்கூலிலே வேணுமானாலும் படிக்கிறேன். அப்பாவைப் பார்க்கணும் போல இருக்கு அம்மா. என்னையும் உன்கூட அழைச்சுக்கிட்டுப் போம்மா...''

ஒரேமூச்சில்துடிதுடித்துச்சொல்லிவிட்டாள் சாந்தி!

இதைப் பார்க்கும்போது, சாந்தியின் மீது அவள் தாய்க்கே பரிதாபமாக இருந்தது.

சாந்தியின் தந்தை படிப்படியாகக் குணம் அடைந்தார். சாந்திக்கு வேறு ஒரு பள்ளியில் இடம் கிடைத்தது.

''படிப்பு என்பது பள்ளியைப் பொறுத்தது அல்ல. படிக்கின்ற மாணவர்களைப் பொறுத்ததுதான்'' — என்று ஒருநாள் டெலிவிஷனில் பாரதப் பிரதமர் சொன்ன வார்த்தை சாந்தியின் மனத்தில் ஆழமாகப் பதியவே, அதனையே தாரக மந்திரமாகக் கொண்டு முன்பைவிட அதிகமாகப் பாடங்களில் கவனம்செலுத்திப் படித்தாள்! படித்தாள்! ஓராண்டு கழிந்தது!

அன்றைக்குத் தேர்வு முடிவு வெளிவந்தது. சாந்தி வெற்றி பெற்றதோடல்ல; எல்லாப் பாடங்களிலும் தொண்ணூறுக்கு மேல் வாங்கியிருந்த சாந்தியைப் புகைப்படம் எடுத்து, எல்லாச் செய்தித் தாள்களிலும் வெளியிட்டிருந்தார்கள். இதைக் கண்டு சாந்தியின் தந்தைக்கு மிகவும் மகிழ்ச்சி. சாந்தியை அருகில் அழைத்து முதுகில் தட்டிக் கொடுத்துப் பாராட்டினார். கடுகடுவென்று இருந்த சாந்தியின் தாய்கூட கலகலப்பாகக் காணப்பட்டாள். பல்லில்லாத பாட்டியோ, ''சாந்தி, உடனே திருஷ்டி சுற்றிப் போடணும்'' என்றாள்.

நேராகப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று கற்பூரம் ஏற்றி மனப்பூர்வமாகப் பிரார்த்தனை செய்த சாந்தி —

தன் தோழிகளான உஷாவையும், கல்யாணியையும் பார்க்க 'சாக்லெட்' வாங்கிக் கொண்டு அவர்கள் வீட்டிற்குச் சென்றாள்.

அங்கே —

உஷாவும், கல்யாணியும் 'உம்' என்று மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

சாந்தியைக் கண்டதும் 'வாழ்த்துக்கள்' — என்று சொன்னார்கள். ஆனால் சுறுசுறுப்பே இல்லை.


''என்னடி இரண்டு பேரும் உம்மணா மூஞ்சியா இருக்கீங்க?'' என்று சாந்தி கேட்ட பொழுது, உஷா சொன்னாள்:

''சாந்தி, என்ன இருந்தாலும் நீ அதிர்ஷ்டசாலிடி. அந்த ஸ்கூல் ரொம்ப மட்டம்னு நாங்க நெனைச்சோம். ஆனால் நீதான் முதல் மாணவியா நல்ல மார்க் எடுத்து பாஸ் பண்ணியிருக்கே. இங்கே எங்களைப் பாரு. பெரிய ஸ்கூல்னு ஆசைப்பட்டுப் போய்ச் சேர்ந்தோம். அங்கே பணத்தைத்தான் நல்லாப் பிடுங்கினாங்க. படிப்பிலே ஒண்ணும் தேறவே இல்லை. நான் 39—வது ரேங்க். இவ 40—வது ரேங்க். பெயிலாகிட்டோம்டி'' என்று திக்கித் திக்கி, வார்த்தைகளை விழுங்கி விழுங்கிச் சொன்ன போது, சாந்திக்கு ஒரு புறம் வருத்தம்தான்.

'படிப்பு என்பது பள்ளியைப் பொறுத்தது அல்ல; படிக்கின்ற மாணவர்களைப் பொறுத்ததுதான்'' என்ற சொற்கள் அவள் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன. தன் தோழிகள் இருவரையும் சாந்தி சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள்!



மூன்று தும்மல்கள்



எஸ். பாலகிருஷ்ணன்

தன் வீட்டிற்குத் தேவையான விறகைச் சேகரிப்பதற்காக மரத்தின் மீதேறினான் நானா. அவன் ஒரு நுனிக் கிளையில் அமர்ந்து கொண்டு அடிக் கிளையை ரம்பத்தால் அறுக்கத் துவங்கினான். அவனைச் சுமந்து வந்த கழுதை மரத்தின் கீழே நின்றவாறு தூங்கத் துவங்கியது.

அப்போது அவ்வழியே குதிரையில் வந்த ஒருவன், ''ஏய், நீ முன்னப் பின்னே மரம் அறுத்திருக்கியா...?'' என்றான்.

''ஏன், உனக்குச் சந்தேகமாக இருக்கா....? நான் இதுவரைக்கும் அறுத்த மரங்களைக் கணக்கில் எடுத்தா ஒரு காடு அளவு இருக்கும்!'' மீசையை முறுக்கியவாறே சொன்னான் நானா.

''உன்னைப் பார்த்தா அப்படித் தெரியலையே....!''

''எப்படிச் சொல்றே...?''

''மரத்தோட நுனிக் கிளையிலே உட்கார்ந்துக்கிட்டு அடிக் கிளையை ரம்பத்தை வைச்சு அறுக்கிறியே...! அந்தக் கிளை கீழே விழறப்போ, கண்டிப்பா நீயும் கீழே விழத்தான் போறே!'' என்றான் குதிரை ஆசாமி.

''உன் ஜோலியைப் பார்த்துக்கிட்டுப் போய்யா.... எல்லாம் எனக்குத் தெரியும். உனக்குத்தான் மரம் அறுக்கிறதைப் பத்தி ஒண்ணுமே தெரியாது போலிருக்கு!'' என்றவாறே மரம் அறுக்கும் தன் பணியைத் தொடர்ந்தான் நானா.

திடீரென்று கிளை முறிந்து, கிளையுடன் கீழே விழுந்தான் முட்டாளான நானா.

கீழே விழுந்ததால், உடலில் சிராய்ப்புக்கள் ஏற்பட்டாலும், முதுகெலும்பு உடையாததால் அவனால் எழ முடிந்தது. அப்படி அவன் எழுந்ததும் அவனுக்குத் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. ''நிச்சயமாய் அந்தக் குதிரை ஆசாமி ஒரு தீர்க்க



தரிசிதான். எத்தகைய தீர்க்க தரிசனம் இருந்தால் கிளையுடன் நான் கீழே விழுவேன் என்பதை முன்கூட்டியே கணித்துச் சொல்ல முடிந்தது அவனால்!'' என்று குதிரை ஆசாமியைப் பற்றிப் பெருமையாக எண்ணிய நானா, ''அக்குதிரை ஆசாமிக்கு நிச்சயம் எதிர்காலத்தைப் பற்றிச் சொல்ல முடியும். அவனை எப்படியும் கண்டுபிடித்து ஓரிரண்டு கேள்விகள் கேட்க வேண்டும்!'' என்று முடிவெடுத்தான்.

தன் முடிவைச் செயல்படுத்த கழுதை மீது தாவி ஏறிக் குதிரை ஆசாமியைத் தேடிப் பயணமானான் நானா.

சில நிமிடப் பயணத்திற்குப் பின் ஓரிடத்தில் குதிரை ஆசாமியைக் கண்ட நானா மகிழ்ச்சியுடன் அவனை நெருங்கி, ''ஐயா! நீங்க முக்காலமும் உணர்ந்த மகா புருஷர். எனக்குக் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் உங்க பெருமை புரிஞ்சது. உங்ககிட்டே எதிர்காலத்தைப் பற்றி ஒண்ணு இல்லாட்டி ரெண்டு கேள்வி கேக்கணும்!'' என்றான்.

''எதிர்காலத்தைப் பற்றி என்னாலே சொல்ல முடியும்னு எப்படிக் கணிச்சே....?'' என்றான் குதிரை ஆசாமி.

''மரக்கிளையிலே அமர்ந்து நான் அறுத்துக்கிட்டிருந்தேனே, அப்போ மரக்கிளையோட நான் கீழே விழுவேன்னு எவ்வளவு துல்லியமாக் கணிச்சுச் சொன்னீங்க. நீங்க சொன்ன மாதிரியே நடந்திருச்சே...!'' வெகுளித்தனமாய்ச் சொன்னான் நானா.

''ஓஹோ...!'' என்று சிரித்துக் கொண்ட குதிரை ஆசாமி, ''உன்னோட கேள்விகளைக் கேளு. ஆனால் ஒரு நிபந்தனை. நான் ஒண்ணே ஒண்ணுக்குத்தான் பதில் சொல்வேன்!'' என்றான்.

''அது போதுமய்யா!'' என்ற நானா, ''இதுக்கு மாத்திரம் நீங்க பதில் சொல்லிட்டாப் போதும்... நான் எப்பச் சாவேன்?'' என்றான்.

''ஓ, அதுவா....'' என்ற குதிரை ஆசாமி, ''உன்னோட கழுதை மூணு தடவை தும்மிட்டா உன்னோட உயிர் பிரியும்!'' என்றவாறே குதிரையில் தாவி ஏறித் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.

'என் கழுதை தும்மவே தும்மாது. ரொம்ப காலம் மகிழ்ச்சியுடன் வாழப் போறேன் நான்!' என்றெண்ணியவாறே வீட்டை நோக்கிக் கழுதையுடன் பயணமானான் நானா.

சில நிமிடங்களில் நானாவின் நினைப்பில் மண் விழத்துவங்கியது.

ஆம். முதல் முறையாக,

"அக்ச்சூ.....!" என்று பெரிய தும்மலாய்ப் போட்டது கழுதை.

அதுவரை இருந்த மகிழ்ச்சி மாறி நானாவின் உள்ளத்தை பயம் கவ்வியது முதல் முறையாக. உடனே துள்ளிக் கீழே குதித்துக் கழுதையருகே வந்தவன், இரண்டு கைகளாலும் அதனுடைய நாசித் துவாரங்களை அடைத்து விட்டான். பொதுவாக ஒருமுறை தும்முபவர்கள் தொடர்ந்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தும்மல்களை வெளிப்படுத்துவார்களே என்ற பயமே அவனது அந்தச் செயலுக்குக் காரணம்.

'இனி கழுதை தும்மாது' என்ற நம்பிக்கை வந்தபின் கைகளை எடுத்தவன் தன் பயணத்தைத் தொடர்ந்தான். இதுவரை கழுதையின் மீதேறிப் பயணம் செய்தவன் இப்போது திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே கழுதைக்கு முன்னே நடக்கத் துவங்கினான் — கழுதை தும்ம முயற்சி செய்யும் போது அதைத் தடுத்து விடலாம் என்ற நம்பிக்கையுடன்.

சில நிமிடங்களுக்குப் பின் நானாவும், கழுதையும் ஒரு கோதுமை விளை நிலத்தைக் கடக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கோதுமைப் பயிர்களின் அழகில் மெய்மறந்து அவற்றை ரசிக்கத் துவங்கினான் நானா.

தும்மலைப் பற்றிய சிந்தனையை விட்டவன் இப்போது கீழே குனிந்து, கோதுமைப் பயிரொன்றைக் கைகளால் தொட்டு ரசிக்க முனைந்த போது....

"அக்ச்சூ.....!" இரண்டாவது தும்மலை வெளிப்படுத்தியது கழுதை.

உடனே பதறிக் கொண்டு தன் தலையிலிருந்த தொப்பியை எடுத்து அதைக் கழுதையின் மூக்கின் மீது வைத்து அழுத்தினான்.

'இரண்டு தும்மல்கள் முடிந்து விட்டன. இக் கழுதை இனிமேலும் தும்மக் கூடாது... இதைத் தும்ம நான் விட மாட்டேன். எனக்கும் சாவுக்கும் இடைவெளி இன்னும் ஒரேயொரு தும்மல்.... ஒரேயொரு கழுதைத் தும்மல்... நான் மிகப் பெரிய துரதிருஷ்டசாலி. அந்தக் குதிரை ஆசாமி மிகவும் கெட்டவன். அவன் எதிர்காலத்தைக் கணித்துச் சொன்னதுடன் மட்டும் நில்லாமல் தும்மாதிருந்த என் கழுதையைத் தும்ம வைத்து விட்டான்... அவன் எனது கழுதைக்குச் சூன்யம் வைத்திருக்க வேண்டும்!' இவ்வாறெல்லாம் எண்ணியவாறே கழுதையின் நாசியைத் தொப்பியால் அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தான் நானா.

மூச்சுவிடத் திணறிய கழுதை இப்போது ஓர் உறுமல் உறுமியவாறே நானாவை ஓங்கி ஓர் உதை கொடுத்தது.

"அய்யோ.... அம்மா....!" அலறிக் கொண்டு கீழே விழுந்தவன், 'வேறு ஒரு மாற்று வழி கண்டுபிடிக்க வேண்டும். இன்னொரு முறை கழுதை தும்மினால் நான் அம்பேல்...!' என்றெண்ணியவாறே மீண்டும் எழுந்த போது....

ஒரு 'ஐடியா' உதித்தது நானாவுக்கு.

உடனே கீழே குனிந்து இரண்டு உருளைக் கற்களை எடுத்துக் கழுதையின் நாசித் துவாரங்கள் இரண்டையும், பாட்டிலின் வாயைக் கார்க் கொண்டு அடைப்பது போல் அடைத்து விட்டான். கழுதையின் உண்மை சொரூபம் தெரியாமல் 'இனி இக்கழுதை தும்மவே முடியாது!' என்று அவன் முடிவெடுத்த போது....

"அக்ச்சூ...!" துப்பாக்கியிலிருந்து கிளம்பிய ரவைகள் போன்று கழுதையின் நாசித் துவாரங்களிலிருந்து கிளம்பிய கற்கள் இரண்டும் நானாவைப் படு பயங்கரமாக முகத்தில் தாக்கின.

"ஆ.... ஆ.... மூன்றாவது தும்மல்... நான் செத்தேன்!" தரையில் சரிந்து கண்களை மூடியவாறே, "செத்தேன்... நிஜமாகவே நான் செத்தேன்!" என்று முணுமுணுத்தான் நானா.

— **ROGER DUVOISIN** எழுதி **The Three Sneezes'** கதையைத் தழுவியது.



GOKULAM

Children's monthly in English


'Gokulam offers delightful fare which kids will love........ well-written features....... pleasant style........ beautifully illustrated'
says THE HINDU — national daily (12.7.88)

Now available nationally.
96 pages Price Rs.3.00 only


Annual Subscription	: Rs 36.00	(India)	For agency and subscription contact : Gokulam,
Overseas	: Rs 270.00	(Air Mail)	Guindy, Madras 600 032. Phone : 434157
	: Rs 120.00	(Sea Mail)	434190




Colour Transparency: A. V. Bhaskar.





கடற்கரையோரமாக உத்தானபாதன் என்ற பெயருடைய குருவி வசித்தது. அதற்கு ஒரு காதலி...
விநதை! நாம் கல்யாணம் செய்து கொள்வோம்!
சரி!
திருமணம் முடிந்தது...
நான் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து, வளர்க்க வேண்டும்!
ஆகா! அப்படியே செய்!
கடலரசனை வென்ற கரையோரக் குருவி!
கதை: ஆனந்தி
படம்: விநு
வேறு பத்திரமான இடத்தில் கூடு கட்டுவோம்!
ஏன், இந்த இடத்துக்கு என்ன?
இது கடற்கரையோரம். பெரிய அலை வந்தால் கூடு, முட்டைகள் எல்லாவற்றையும் அடித்துக் கொண்டு போய்விடும்!
ஹூம்! என் பலம் உனக்குத் தெரியாவிட்டாலும் கடலுக்குத் தெரியும்! என்னை எதிர்க்காது!



விநதை சிரித்தாள்...
...சம்புக்கிரீவன் என்ற ஆமைக்கு இரு நண்பர்கள்...
சம்புக்கிரீவா! நலமா?
தன் பலம் தெரியாதவன் வீணில் கஷ்டப் படுவான்!.... ஒருகதை கேளுங்கள்... ஒரு ஏரியில்...
வாருங்கள்! எங்கே போய்த்திரும்புகிறீர்கள்?
பனிச்சிகரமெல்லாம் கடந்து போனோம்
புதுப்புது நாடுகளைப் பார்த்தோம்!
சங்கடகா! விகடா! விவரமாகச் சொல்லுங்கள்!
மூன்று நண்பர்களும் பலநாட்கள் கதை பேசிக் கழித்தனர்...
அதிசயமான அனுபவங்கள்! நான் எங்கே அதையெல்லாம் பார்ப்பது? கேட்கவாவது முடிந்ததே!


அந்த ஆண்டு மழை பெய்யாமல்...
ஐயோ! ஏரி வற்றி விட்டதே!
நண்பா! உணவின்றி இங்கு நாங்கள் மடிவோம்...
வேறு ஏரி தேடிப் போகிறோம்...
மறுபடி மழை பெய்யும் போது திரும்பி வருகிறோம்!
என்னை விட்டு விட்டுப் போகாதீர்கள்! நானும் வருகிறேனே!
எப்படி? உனக்குச் சிறகுகள் இல்லையே!
சம்புக்கிரீவன் யோசித்து...
ஒரு கொம்பு கொண்டு வாருங்கள்!
விகடன் கொம்புடன் வந்தது...
நான் கொம்பின் மத்தியை வாயினால் கௌவிக் கொள்கிறேன். நீங்கள் இரு பக்கமும் பிடித்துக் கொண்டு பறந்து செல்லுங்கள்!



சங்கடகனும் விகடனும் அவ்வாறே செய்தன...
நண்பா! எங்களுக்குச் சிரமம் இல்லை. ஆனால் நீ வாய் திறக்காதே!
ஆமாம்; உனக்குப் பேசுவதில் பிரியம் அதிகம்..... .. ஜாக்கிரதை!
ஒரு ஊர் மீதாகப் பறந்த போது....
அடே! ஆமைக் காவடி டோய்!
நல்ல வேடிக்கை!
பெருங் கூட்டம் கூடி விட...
அதோ! அதோ!
ஹோய்! ஹோய்!
ஜனங்களின் ஆரவாரம் ஆமை காதுகளுக்கு எட்ட...
என்ன சத்தம்?



விருதை கதை கூறி முடித்தது.
சிரீயவனின் ஆயுள் முடிந்தது. அந்த ஆமைக்குத் தன் பலம் எது; பலவீனம் எது என்று தெரியவில்லை...!
தொலை வருமுன் காப்பவன் சுகமாக இருப்பான்...
அது எப்படி? அதற்கு ஒரு கதை வைத்திருக்கிறாயா?
ஓ!
விருதை மீண்டும் கதை கூறியது. ... ஒரு ஏரியில் மூன்று மீன்கள் வசித்தன...
நான் வருமுன் காப்பவன்!
நான் வந்தபின் காப்பவன்!
நான் விதியை நொந்து கொள்பவன்......
ஒரு நாள்...
மகனே நாளை இங்கு மீன் பிடிக்க வருவோம்.
இன்றைக்கே வலையைப் பழுது பார்த்து விடுவோம்.


செம்படவன் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தன, மீன்கள்.....
.. வருமுன் காப்போன்...
வடிகால் ஓடை வழியாகத் தப்பி வேறு குளத்துக்குப் போய் விடுகிறேன்!
மற்ற இரு மீன்களும்...
செம்படவன் வரட்டும், பிறகு பார்த்துக் கொள்ளலாம்.
அவன் இங்கேதான் வருவான் என்பது என்ன நிச்சயம்?
மறு நாள் செம்படவன் வலை வீச....
இரு மீன்களும் சிக்கின. வந்தபின் காப்போன் அசைவற்றிருந்தது. மற்றது துள்ளியது.
மகனே அது செத்த மீன். அதை உண்ணக் கூடாது.
வந்தபின் காப்போனைக் கரையில் எறிந்தான் சிறுவன்.




அவர்கள் தலை திரும்பியதும் அது துள்ளிக்குதித்துத் தண்ணீரில் விழுந்து தப்பியது!
செத்ததுபோல் நடித்தேனோ, பிழைத்தேனோ!
விதியை நொந்துகொள்வோன் செம்படவன் கூடையில் சிறைப்பட்டது.
ஏதோ ஒரு மீனாவது அகப்பட்டதே, இராப்போதுக்கு உணவுக்கு ஆயிற்று...
விந்தை கதை கூறி முடித்தது...
விதியை நொந்து கொள்வோனுக்கு முன்யோசனையுமில்லை; சமயோசித அறிவும் பூஜ்யம்! நாசமடைந்தது!
உத்தானபாதன், மனைவிக்கு ஆறுதல் கூறியது...
கண்ணே! நீ கடலுக்குப் பயப்பட வேண்டாம்; நான் பறக்கத் தெரிந்தவன், மீன் அல்ல! உன்னைக் காப்பேன்!
கணவனை நம்பி விந்தை அங்கேயே முட்டைகள் இட்டது.
நாலு முட்டைகள்!
நம்ம குடும்பம் பெரிசு!



சமுத்திர ராஜனிடம் நீர்க்குதிரை வந்து...
உத்தானபாதன் மகா கர்வக்காரன்! அவனுக்குப் பறக்கத் தெரியுமாம்! உங்களைவிட உயர்ந்தவனும்! பெருமையடித்துக் கொள்கிறன்...
சமுத்திர ராஜன் சிரித்து...
எதற்கு இப்படி படுத்திருக்கிறாய்?
வானம் கீழே விழுந்து விடாமல் தாங்குகிறேன்!
நானும் கவனித்திருக்கிறேன்... ஒரு நாள் உத்தான பாதன் மல்லாக்கப் படுத்துக் கால்களை உயர்த்திக் கொண்டிருந்தது...
இப்படிப் பட்ட கர்வக் காரக் குருவிக்குப் பாடம் கற்பிக்க வேண்டாமா?
உண்மைதான்! அலைகளை ஏவுகிறேன்!
சிந்தையும் உத்தான பாதனும் இரை தேடச் சென்றிருந்த போது அலைச் சேவகர்கள் பொங்கி வந்து...
கூட்டோடு கொண்டு போகணும்!
ஒரு முட்டை கூட உடையக் கூடாது! மன்னன் உத்தரவு!




உத்தானபாதனும் விநதையும் திரும்பி வந்ததும்....
ஐயோ! நம் கூட்டைக் காணோமே?
இது எப்படி நேர்ந்தது?
எத்தனையோ எடுத்துக் கூறியும் நீங்கள் கேட்க வில்லை... கூட்டைக் கடலலைகள் தாம் அடித்துப் போயிருக்க வேண்டும்!
கண்ணே! பயப்படாதே! சூரியனைக் கூட மேகம் மறைக்க முடியும்! நான் கடலையே வற்றச் செய்வேன்!
உங்கள் பெருமை இருக்கட்டும்; மற்ற பறவைகளையும் உதவும்படி கேட்போம். நாலு நண்பர்கள் சேர்ந்தால் யானையைக் கூட ஜெயிக்கலாம்!
அது என்ன கதை?
ஒரு காட்டில் ஒரு ஜோடி தூக்கணாங் குருவிகள் ஒரு மரத்தில் வசித்து வந்தன...




விநதை கதையைத் தொடர்ந்தது... ஒரு நாள் ஒரு காட்டு யானை அம்மரத்தடியில் வந்து நின்றது...
உணவுக்காகக் குருவிக்கூடு இருந்த கிளையை ஒடித்தது...
ஐயோ! என் முட்டைகள்! எல்லாம் போச்சே!
இரை தேடிச் சென்றிருந்த ஆண்குருவி திரும்பி வந்தது...
என் அருமைக் குஞ்சுகள்...
யானை நம் வாழ்க்கையைப் பாழடித்து விட்டதே!
புலம்பலைக் கேட்டுவந்த மரம் கொத்தி...
நடந்து போனதை எண்ணி, துக்கம் கொண்டாடுவது விவேகமல்ல...
அநியாயமாக என் குழந்தைகளைக் கொன்ற யானையைத் தண்டிக்க வேண்டும்!
வீணாரவனை யோசனை கேட்போம்!



வீணாரவன் ஒரு ஈ... அதனிடம் மரங்கொத்தி...
யானையை விரட்ட யோசனை சொல்!
என் தோழன் தவளையையும் சேர்த்துக் கொள்வோம்....
எல்லாமாகக் கூடி யோசனை செய்தன...
நான் பாட, தவளை தாளம் போட, நீ யானையைக் கொத்து!
அவ்வாறே ஈ பாட, தவளை தாளம் போட, யானை அந்தச் சுகத்தில் கண்களை மூடிக்கொள்ள, மரங்கொத்தி அதன் முதுகில் உட்கார்ந்து பலமாகக் கொத்தியது.
வலி தாங்க முடியாத யானை ஓட்டம் பிடித்தது.....
அடுத்த காட்டுக்கே ஓடி விடுகிறேன்!
விந்தை கதை கூறி முடித்தது...
எனவே, நண்பர்கள் உதவி அவசியம்.
சரி, எல்லாப் பறவைகளையும் அழைத்துப் பேசுவோம்.



பறவைகள் மாநாட்டில் உத்தான பாதன்...
திமிர் பிடித்த கடல், எங்களுடைய முட்டைகளை அடித்துக் கொண்டு போய் விட்டது. நண்பர்களே கடலுக்குப் பாடம் கற்பிப்போம்!
கடல் புறா யோசனை கூறியது...
என்ன பிரமாதம்! கரையில் உள்ள மணலை எல்லாம் கடலில் போட்டால் கடல் வற்றி விடும். முட்டைகளை மீட்கலாம்!
கிழிஞ்சல்களில் மணல் சுமந்து எல்லாப் பறவைகளும் கடலை வற்றச் செய்ய முயன்றன...
... தோற்றுப் போயின...
என்ன செய்தாலும் கடல் வற்றாது. ஆலமரத்துக் கிழ நாரையிடம் யோசனை கேட்போம்...
உத்தான பாதன், கிழட்டு நாரையை அணுகி...
அறிவும் அனுபவமும் உள்ள நீங்கள் தான் என் முட்டைகளைத் திரும்பப் பெற வழி கூற வேண்டும்.


கிழட்டு நாரை யோசனை கூறியது...
எல்லாப் பறவைகளுக்கும் அரசன் கருடன். நாம் அத்தனை பேரும் அழுது ஆரவாரம் செய்தால் கருடன் நமக்கு உதவ வருவார்.
பறவைகள் அவ்வாறே செய்தன.
கா கா-ஆ! ஐயோ!
அக்கா-கடவுளுக்குக் கண்ணில்லையா!
கீ கீ-அம்மா! போச்சே!
தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம் நடந்து கொண்டிருந்தது.
சீக்கிரம் கவசம் அணிந்து கிளம்பணும்.. ஆ! இது என்ன ஓலம்! பூமியிலிருந்து கேட்கிறதே...
தம் இனத்தவரின் அலறலைக் கேட்டுப் பறந்து வந்தார் கருடன்......
வாகனம் எங்கே என்று மகாவிஷ்ணு தேடுவார்... ஆனால் அவரும் சற்று காத்திருக்க வேண்டியது தான்...
கடற்கரையை அடைந்த கருடன்......
என்ன நடந்தது?
தங்கள் பிரஜைகளான எங்களுக்குப் பெரிய அநீதி....


அப்போது கிழநாரை...
தலைக்குத்தலை கத்தாதீர்கள்... விநதை! நீ சொல்லும்மா...
என் முட்டைகளைக் கர்வம் பிடித்த சமுத்திரம் கொண்டு போய் விட்டது!
அப்போது வந்த தேவ லோக தூதன்....
கருட பகவானே! மகா விஷ்ணு உங்களை உடனே வரச் சொல்கிறார்!
என் பிரஜைக்கு ஒரு கஷ்டம் நேர்ந்திருக்கிறது... அதைப் போக்குவது தான் என் முதல் கடமை.
ஹூம்! ஒரு குருவிக்காக பகவானின் கட்டளையைப் புறக்கணிப்பதா?
அவர் பள்ளிகொண்டிருக்கும் கடல்தான் விநதையின் முட்டைகளைத் திருடியிருக்கிறது!...
கடலரசனைத் தண்டிக்கா விட்டால் நான் பகவானின் தாசனாக இருந்து என்ன பயன்?
அசுரர்களுடன் போரிடத் தயாராக இருந்தார் விஷ்ணு. தூதன் திரும்பி வந்து....
இது தான் நடந்தது...
அப்படியா! நானே நேரில் போகிறேன்!



பகவானும் கடற் கரைக்கு வந்து...
கருடா! இப்படி தாமதிக்கலாமா? இது யுத்த காலம்!
சுவாமி! நீங்கள் பள்ளி கொண்டிருப்பதால் கடலரசனுக்கு அகந்தை! என் பிரஜைக்கு அவனால் ஏற்பட்ட அவமானம் எனக்கு ஏற்பட்ட அவமானம்!
கடலரசனைக் கண்டிக்கத் தீர்மானித்தார் மகாவிஷ்ணு.
கடலரசனே! விநதையின் முட்டைகளைக் கொண்டுவந்து கொடு!
அலைகள் ஆர்ப்பரித்தன. முட்டைகள் வரவில்லை...
உடனே முட்டைகள் வராவிட்டால் அக்னியாஸ்திரம் பிரயோகிப்பேன், நீ வறண்டு போவாய்!
சமுத்திர ராஜனிடம் அமைச்சர்கள்...
நீர் வற்றினால் கடல் வாழ் ஜந்துக்கள் அனைவரும் மடிந்து போவோம்!...


ஒரு குருவியின் தற்பெருமையை இவ்வளவு பெரிது படுத்தாதீர்கள்...
முட்டைகளைத் திருப்பிக் கொடுத்து விடுவதுதான் விவேகம்.
அடுத்த அலை குருவிக் கூட்டையும் முட்டைகளையும் ஏந்தி வந்தது.
கருடா! முட்டைகளை விநதையிடம் ஒப்படைத்து விட்டுக் கிளம்பு!
உத்தானபாதா! அடக்கத்துடன் வாழ வேண்டும்!
பறவைகள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன...
நாராயணன் நாமம் வாழ்க.
பறவைகள் அரசன் வாழ்க!
கருடன் மகிழ்ச்சியோடு பகவானைச் சுமந்து சென்றார்.

அப்பா வராதது ஏன்?

க.இராமலிங்கம்



"அப்பா, நிச்சயம் நீங்க என் டான்ஸ் அரங்கேற்றத்துக்கு வரணும். அவசர கேஸ், அது இதுன்னு எதுவும் சாக்குப் போக்குச் சொல்லக் கூடாது" — வித்யா கண்டிப்பாகக் கூறினாள்.

"நீ அம்மாவுடன் சீக்கிரம் போம்மா. நான் பின்னாடியே வந்து விடுகிறேன். எனக்கு மட்டும் உன் நடனத்தைப் பார்க்க வேண்டுமென்று ஆசையிருக்காதா?"

"நீங்க எப்பவும் இப்படித்தான் சொல்லுவீங்க. ஆனா எதுக்குமே வர மாட்டீங்க. அப்புறம், என்னிடம் ஏதாவது சாக்குப் போக்கு சொல்லுவீங்க. உங்களப் பத்தி எனக்குத் தெரியாதா? இந்தத் தடவை மட்டும் என் அரங்கேற்றத்துக்கு நீங்க வரலேன்னா, அப்புறம் உங்ககிட்ட எப்பவுமே பேச மாட்டேன்."

"நான் கட்டாயம் வர்றேன். நீ நல்லா செய்யணும். டாக்டரோட மகள்னு எல்லாரும் உன்னைப் பாராட்டுகிற மாதிரி செய்."

"டாக்டரோட மகள்னு ஸ்கூல்ல எல்லாருக்குமே தெரியும். ஸ்கூல்ல நடக்கற எல்லா விழாக்களுக்குமே என் சிநேகிதிகளுடைய அப்பா, அம்மா வருவாங்க. நீங்க மட்டும் தான் இதுவரைக்கும் வந்ததே யில்லை. அப்படி வராத ஒருத்தர் டாக்டர்தான்னு எங்க ஸ்கூலிலே எல்லாருக்குமே தெரியும்."

"வருத்தப்படாதேம்மா. என் தொழில் அப்படி. ஆனால் இன்று நிச்சயம் வந்துடுவேன்."

"எல்லாத்தையும் அப்படி விட்டுட்டு எங்க கூடவே வாங்க. உங்க மகளுக்காக இதைக் கூடச் செய்யக் கூடாதா?"

"செய்யலாம். நான் அங்கே வந்து 2 மணி நேரம் காத்துக்கிட்டு இருக்கணும். அந்த நேரத்தை இங்கே மத்தவங்களுக்குப் பயன்படுத்தலாமே. நீ எதுக்கும் கவலைப்படாமல் போ. நான் சரியா 6 மணிக்கு வந்து சேர்ந்து விடுவேன்."

வித்யா தன் அம்மாவுடன் வீட்டை விட்டுப் புறப்பட்டாள். 6 மணி அடிக்க இன்னும் 15 நிமிஷங்களே இருந்தன. டாக்டர் தம் மகளின் டான்ஸைப் பார்க்கும் ஆவலில் புறப்படப் போனார். அப்போது அவருக்கு ஒரு போன் கால் வந்தது.

"டாக்டர். ஆளில்லாத ரயில்வே கேட்டைக் கடக்க முயன்ற பஸ்ஸை, ரயில் வேகமா இடித்துத் தள்ளியதில் பஸ் பயணிகள் ரொம்பப் பேருக்குப்

பலத்த அடி. உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கிறார்கள். உடனே வாங்க. சீக்கிரம் வாங்க டாக்டர்."

டாக்டர் வித்யாவை மறந்தார் — டான்ஸ் புரொகிராமை மறந்தார். விரைந்து செயல்பட்டார்.

விபத்து நடந்த இடத்திற்குத் தம் காரிலே சென்றார். அடிபட்ட ஒவ்வொருவரின் கூக்குரலையும் கேட்கக் கேட்க அவர் நெஞ்சே உருகியது. முதல் உதவி அளித்து மருத்துவமனைக்கு உடனே அவர்களை அனுப்பி வைத்தார். பிறகு, மருத்துவமனை சென்று உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த பலருக்குச் சிகிச்சை அளித்தார். தம்மை முழுவதுமாக, அந்தப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டதில், அவர் தம்மையே மறந்தார்.

இரவு 12 மணி வரை அவர் மருத்துவ உதவி அளித்து விட்டு வீடு திரும்பினார். களைத்துப் போன டாக்டருக்கு வீட்டு வாசலிலேயே அவருடைய மனைவியும் மகளும் பலத்த வரவேற்புத் தந்தார்கள்.

"விபத்து எப்படி நடந்தது? எத்தனை பேருக்குப் பலத்த காயம்? சாதாரண அடி எத்தனை பேருக்கு?" என்ற விவரங்களை டாக்டரிடம் கேட்டனர். விபத்தைப்பற்றித்தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் கேட்கிறார்களா அல்லது டாக்டர் டான்ஸ் புரொகிரா்முக்கு வராத காரணத்தால் கிண்டலும் வேதனையும் கலந்து கேட்கிறார்களா என்று டாக்டருக்குப் புரியவில்லை.

"சாரி வித்யா! என்னால் உன் அரங்கேற்றத்துக்கு வர முடியாமல் போய் விட்டது. எனக்கு ரொம்ப ரொம்ப வருத்தம்தான். ஆனாலும், என் நிலைமை ..."

அதைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை வித்யா.

"அது கிடக்கட்டும், அப்பா நான் கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க? நான் என்னத்தை ஆடி விடப் போகிறேன். உங்களுக்கு ஆசையிருந்தால் இதோ இப்போதேகூட உங்க முன்னாலே இன்னொரு முறை என்னால் ஆட முடியும். முதலில் விபத்துப் பற்றி நான் கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க."

அவள் கேட்டதிலிருந்து கிண்டல் அல்ல; உண்மையில் விபத்துப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆவலில்தான் கேட்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டதால், விபத்துப் பற்றி அவளிடம் எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறினார்.

"உண்மையிலேயே உனக்கு என் மீது கோபமா, இல்லையா, வித்யா?"

"உங்க மேலே எனக்குக் கொஞ்சம் கூடக் கோபம் இல்லே, அப்பா. நான் இங்கிருந்து புறப்பட்ட போது உங்க மேலே கோபம்தான், நீங்க என்னோடு வரலியேன்னு. நடனம் ஆரம்



ராமு: தேர்த்திருவிழா அன்று எல்லோரும் சங்கிலியைப் பிடித்து இழுத்தார்கள். நானும் சங்கிலியைப் பிடிச்சு இழுத்தேன். அதைப் பார்த்த இரண்டு போலீஸ்காரர் என்னைப் பிடித்து ஆறு மாசம் உள்ளே தள்ளி விட்டனர். இன்று தான் வெளியிலே வந்தேன்.

சோமு: சங்கிலியைப் பிடித்து இழுத்ததற்காக ஏன் உன்னை உள்ளே தள்ளினார்கள்?

ராமு: நான் பிடித்தது ஒரு குழந்தையின் கழுத்துச் சங்கிலி ஆச்சே!

சோமு: ம்... ?...?...?

— பூ. வேல்முருகன்.




பிக்கும் முன் உங்களுக்குன்னு ஒதுக்கிய சீட்டைப் பார்த்தேன். நீங்க இல்லே. அப்பவும் கோபம்தான். ஆடும் போதும் அடிக்கடி உங்க சீட்டைப் பார்த்துக் கோபப்பட்டேன். முடிந்து வரும்போதும் கோபம்தான். கோபத்தில் என்னால் சரியாக்கூடச் செய்ய முடியல்லே.

''எங்க மிஸ்கூட ரிகர்சல்லே செய்தமாதிரி கூடச்செய்யலியேன்னு கேட்டாங்க. வீட்டுக்கு வரும் வழியிலேதான் ஒரு ஆக்ஸிடெண்டை எங்க கண் முன்னாலே பாத்தோம். அடிபட்டவர்கள் துடித்ததைப் பார்த்து எங்க மனசு துடிச்சுது. அவ்வளவு பரிதாபமா இருந்தது. அவர்களின் கதறல் நெஞ்சையே உருக்கியது. இந்த நேரத்தில் நான் ஒரு டாக்டரா இல்லியேன்னு என் மனசு ஏங்கியது. உடனே அவங்களுக்கு முதல் உதவி செய்து, அவங்க உயிரைக் காப்பாற்ற முடியாதா என்ற ஏக்கம் ஏற்பட்டது. அந்த நிமிஷமே நான் டாக்டருக்குப் படிக்க முடிவு செய்து விட்டேன்.

''அடிபட்டவங்களுக்கு முதல் உதவி அளித்து அவங்களை ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அனுப்பச் சொல்லிட்டு, நீங்க மருத்துவமனைக்குப் போனதாகக் கேள்விப்பட்டேன். நீங்க இல்லாத போனால், பல பேரு அங்கேயே செத்துப் போயிருப்பாங்கன்னு அங்கே நின்னவங்க சொன்னதையும் கேட்டோம். அப்போதுதான் இந்தப் புனிதமான பணிக்கு அர்த்தம் புரிந்தது. அப்போதே என் கோபமெல்லாம் பறந்துவிட்டது. உங்க மேலே நான் அநாவசியமாக் கோபிச்சுக்கிட்டேன். என்னை மன்னிச்சுடுங்க அப்பா.''

''இதுக்காகத்தான் நீங்க ரெண்டு பேரும் இவ்வளவு நேரமாத் தூங்காமே இருந்தீங்களா? நடந்து போன விபத்துக்காக நான் வருந்தினாலும், உங்களின் எண்ணத்தில் மாற்றம் ஏற்பட்டதேன்னு கொஞ்சம் சந்தோஷம்தான். நீ ரொம்பக் களைச்சுப் போய் வந்திருப்பே. போய் தூங்கு''

மூவரும் தூங்கப் போனார்கள்.



அன்று பள்ளி ஆண்டு விழா.

ஒரு சிட்டுக் குருவியைப் போல நந்த கோபாலின் உள்ளம் மகிழ்ச்சியில் துள்ளிக் கொண்டிருந்தது.

ஒன்பதாம் வகுப்பில் படிப்பில் முதலிடம், ஒழுங்கான வருகை, விளையாட்டில் ஈடுபாடு, அறிவியலில் ஆர்வம், கவிதை எழுதும் திறமை இப்படி எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கும் அவனுக்குப் பள்ளிக் கூடத்தின் சிறந்த பரிசான 'திருவள்ளுவர் கோப்பை'யை விழாவில் வழங்குகிறார்கள்.

அவன் என்னதான் மகிழ்ச்சி அடைந்தாலும் உள்ளுக்குள் ஓரளவு வருத்தமும் இருந்தது. 'பரிசளிப்பு நிகழ்ச்சிக்கு வருவதாகச் சொன்ன அம்மா இதுவரை வரவில்லையே'

பரிசு தரப்போகும் விஷயத்தை இரண்டு நாளுக்கு முன்பே அவன் அவனுடைய தாய் வேலம்மாவிடம் கூறியிருந்தான். பக்கத்தில் இருக்கிற கருப்பூரில் அவனுடைய பெரியம்மா பையனுக்குக் கல்யாணம் பேசுவதற்காக அவளும் போயிருந்தாள். உடனே வந்து விடுவதாகச் சொல்லிப் போன அவள் இன்னும் வரவில்லை.

விழா நிகழ்ச்சிகள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருந்தன.

உதவித் தலைமை ஆசிரியர் 'மைக்'கில் அறிவித்தார். ''இப்போது மாணவி நிர்மலாவின் பரத நாட்டியம் நிகழ உள்ளது. அதன்பின் சிறந்த மாணவருக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி நடைபெறும்.''

நந்த கோபாலுக்கு இருப்புக் கொள்ளவில்லை. பள்ளியின் வாயில் பகுதியையே திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான். 'இந்த நடனம் முடிவதற்குள் வந்து விட்டால் நன்றாக இருக்கும்.'

நிமிடங்கள் நகர்ந்தன.

''இப்போது பரிசளிப்பு நிகழ்ச்சி.. பரிசு பெறும் மாணவன் செல்வன் நந்த கோபால்...'' என்று சொல்லி அவனை மேடைக்கு அழைத்தார்கள்.

தலைமை ஆசிரியர் அன்பு நாதன் அவனுடைய சிறப்புக்களை விளக்கிச் சொல்லிப் பாராட்டிக் கொண்டிருந்

தார். அவனுடைய கவனம் அங்கு இல்லை.

சிறப்பு விருந்தினராக வந்தவர், கோப்பையை அவனுக்கு வழங்கினார். கரவொலி காதைப் பிளந்தது.

நிகழ்ச்சி முடிந்து வெளியே வந்து கொண்டிருந்தான்.

"பாவம்டா இந்த நந்தகோபால்! அவனோட அப்பா குடிச்சிட்டு எங்கேயாவது விழுந்து கிடப்பார்; அவனோட அம்மாவும் பரிசளிப்பு நிகழ்ச்சிக்கு வரலே.... எவ்வளவு கஷ்டப்பட்டுப் படிச்சு இந்தப் பரிசை வாங்கியிருக்கான் தெரியுமா?"

"அவன் கொடுத்து வைச்சது அவ்வளவுதான்டா"

மாணவர்கள் இருவர் இரக்கத்தோடு பேசிக் கொண்டு சென்றது அவன் காதில் விழுந்தது.

வீட்டுக்குத் திரும்பி, திண்ணையில் சோர்வாக அமர்ந்திருந்தான் நந்தகோபால்.

தூரத்தில் டவுன் பஸ் ஒலியெழுப்பிக் கொண்டு ஓடியது.

வேலம்மா வந்தாள்.

"கோபாலு! கோவிச்சுக்காதப்பா.. போன இடத்திலே உறவுக்கார சனங்க லேசில விடலே... கல்யாணப் பேச்சைப் பேசி முடிச்சிட்டுத்தான் போகணும்னு சொல்லிட்டாங்க.. அப்புறம் சாப்பாடு.. இப்போதான் வந்தேன்" என்றாள் அவள்.

நந்தகோபாலின் கண்களில் கண்ணீர் திரண்டு வந்திருந்தது. அந்த அரை இருளில் அதைத் துடைத்துக் கொண்டான். உள்ளம் துயரத்தில் ஆழ்ந்திருந்தது. இருந்தாலும், கோப்பையை அவளிடம் கொண்டு போய்க் காட்டினான்.

"கோபாலு! இந்த வெளிச்சத்திலே எதைப் பாக்கிறது? வைச்சிருப்பா... காலையிலே பாக்கிறேன்.." என்றாள் அவள்.

சொல்லி விட்டுக் காலை நீட்டியவாறு அமர்ந்து வெற்றிலையை மெல்லத் தொடங்கினாள்; தூக்கம் வந்து கண்ணைச் சுழற்றியது; படுப்பதற்குப் பாயை விரித்தாள்.

தாய் மீது அவனுக்கு எரிச்சலாக இருந்தது. 'பரிசளிப்பு நிகழ்ச்சிக்கும் வரவில்லை... பார்க்கவும் மாட்டேன் என்கிறாளே'

கோப்பையைக் கொண்டு போய் அவனுடைய சிறு தகரப் பெட்டியில் வைத்தான்.

பள்ளியெல்லாம் பாராட்டு. வீட்டிலோ? படுத்து வெகு நேரமாகியும் நந்த கோபாலுக்குத் தூக்கம் வரவில்லை. கொசுக்கள் ஒரு பக்கம் அவனைப் பிடுங்கி எடுத்தன.

பொழுது விடிந்ததும் முதல் வேலையாகத் தன்னுடைய பெட்டியைப் போய்த் திறந்தான் நந்த கோபால். 'பரிசுக் கோப்பையை எடுத்துக் காட்டினால் வெளிச்சத்தில் பார்த்து அம்மா சந்தோஷப்படுவாளே' என்று நினைத்தான் அவன். அவள் மீது இப்போது அவனுக்குக் கோபமில்லை.

அவள் அவனுக்குத் தேநீர் போட்டுக் கொண்டு வந்தாள்.

"கோபாலு, இதைக் குடிப்பா!"

அவன் அதைக் காதில் வாங்கவில்லை.

பெட்டியைத் திறந்தவன் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானான்.

"என்னப்பா கோபாலு?"

"ராத்திரி அப்பா வந்தாராம்மா?"

"ஆமாப்பா... ராத்திரி வெகுநேரத்துக்கு அப்புறம் வந்தாரு... ஆடிக்கிட்டே வந்தாரு... எழுப்பி, சாப்பிட என்ன இருக்குன்னு சத்தம் போட்டாரு... இருந்ததைப் போட்டேன்.. சாப்பிட்ட பின்னாலை கொஞ்சம் சாந்தமா இருந்தாரு..' நீ பள்ளிக்

என்ன ஆச்சு?

"பரீட்சைக்குக் கண் விழிச்சுப் படிச்சியே, என்ன ஆச்சு...?"

"எலக்ட்ரிக் சார்ஜ்தான் அதிகம் ஆச்சு...!"

— மயிலாடுதுறை 'ஸ்வாமி.



கூடத்திலே கோப்பை வாங்கிட்டு வந்த விஷயத்தைச் சொன்னேன்.. 'என்ன கோப்பை'ன்னு கேட்டாரு.. 'வெள்ளிக் கோப்பையாம்'னு சொன்னேன்... ரொம்ப சந்தோஷப்பட்டாரு...''

கள்ளங்கபடமில்லாமல் பேசினாள்.

''அம்மா... அவரோட சந்தோஷம் இருக்கட்டும்.. என் கோப்பையைக் காணோம்மா...''

வேலம்மாவுக்கும் அதிர்ச்சியாக இருந்தது.

''அந்த மனுஷன் வந்திட்டு உடனே போயிட்டாரே.. யாரு எடுத்திருப்பா? பெட்டியைத் திறந்திருந்தா சத்தம் கேட்டிருக்குமே'' என்று தனக்குத் தானே பேசினாள் அவள். அவளுடைய அறியாமையை எண்ணி வருந்தினான் நந்த கோபால்.

குடிகாரத் தந்தையைப் பற்றிய நினைப்பு அவனைத் துன்பத்தில் ஆழ்த்தியது. அவர்தான் கோப்பையை எடுத்திருப்பார் என்று அவனுடைய அறிவுக்குத் தெரிந்தாலும்,அதை வெளியே சொல்லாமல் மனத்திற்குள் மௌனமாக அழுதான் அவன்.

இரண்டு நாள் கழித்துத் தலைமை ஆசிரியர் அன்பு நாதன் நந்த கோபாலைக் கூப்பிட்டு அனுப்பினார். மாலை வீட்டிற்கு வந்து தம்மைச் சந்திக்குமாறு கூறினார்.

'என்ன விஷயம் என்று தெரியவில்லை... திறமை உள்ளவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டே இருப்பவர் அவர். 'இதுதான் இவன் வாங்கிய கோப்பை' என்று நாலு பேரிடம் காட்டி அவனை அறிமுகம் செய்யக் கூட நினைக்கலாம். அவர் கோப்பையைக் கொண்டு வரச் சொன்னால் நான் என்ன செய்வது? விஷயம் தெரிந்து, 'கொடுத்த கோப்பையைப் பாதுகாக்கக் கூட உனக்குத் துப்பில்லையா?' என்று கோபப்பட்டால் என்ன செய்வது?' என்று மனம் குழம்பினான் அவன்.

மனத்தைத் தேற்றிக் கொண்டு, தலைமை ஆசிரியர் வீட்டுக்குச் சென்றான் நந்த கோபால்.

''நந்த கோபால், உனக்குப் பள்ளிக் கூடத்தில் கொடுத்தோமே 'திருவள்ளுவர் கோப்பை'....'' என்று அவர் தொடங்கியதுமே அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''கோப்பை என்றதும் ஏன் உன் முகம் இப்படி ஆகிவிட்டது. ஏன்? என்ன விஷயம்?'' என்று கேட்டார்.

அவன் நடந்ததைச் சொன்னான்; கண்களில் கண்ணீர் 'பொல பொல'வென்று கொட்டியது.

''நந்த கோபால்! என் பையன் ஆனந்தன், வட்டிக்கடை வைத்திருக்கும் காந்திலாவின் பையன் மோகனைப் பார்க்கக் கடைக்குப் போயிருக்கிறான். அப்போது உன் தந்தை வந்து இந்தக் கோப்பையைக் காந்திலாலிடம் விற்றுப் பணத்தை வாங்கிக் கொண்டு போயிருக்கிறார். ஆனந்தன் வந்து சொன்னான். எனக்கு மிகவும் அதிர்ச்சியாகி விட்டது. உடனே போய் உரிய பணத்தைக் கொடுத்து அதை வாங்கி வந்து விட்டேன்.''

அன்பு நாதனின் அன்பு உள்ளம் அவனை வியப்பில் ஆழ்த்தியது.

''உன்னுடைய வீட்டு நிலையைக் கண்டு என்னுடைய மனம் மிகவும் வேதனைப்படுகிறது. கோப்பையை நானே பத்திரமாக வைத்திருக்கிறேன். நீ விரும்பும் போது வந்து வாங்கிக் கொண்டு போ. உன் தந்தையையும் கூப்பிட்டுக் கண்டித்திருக்கிறேன்.


கடியும் உதையும்


''நாய் விற்ற கணக்குப் போட்டதில் பத்துரூபா கையைக் கடிச்சுது. அதனாலே கழுதை விற்ற கணக்குப் போட்டேன்!''

''அது என்ன ஆச்சு?''

''அஞ்சு ரூபா உதைக்குது!''

— கடலூர் கன்னியப்பன்.





பள்ளிக் கூடத்துக்கு வெளியேயும் உனக்கு எந்த விதத்தில் உதவலாம் என்று யோசித்துக் கொண்டு இருக்கிறேன் நந்த கோபால்! நமக்கு வருகிற சோதனைகளைக் கண்டு கலங்கி நாம் பின்வாங்கி விடக் கூடாது. போராடிப் போராடித்தான் மேலே வர வேண்டும். வேதனைகளை வென்று அதிலும் நீ முதல் மாணவனாக விளங்க வேண்டும்.''

அந்தச் சொற்கள், எரிக்கும் வெயிலின் கொடுமையினூடே குளிர்ச்சியாகத் தவழ்ந்து வரும் தென்றல் காற்றைப் போல அவனுக்குத் தெரிந்தன; நம்பிக்கையூட்டின.

வீட்டுக்குத் திரும்பிய அவனுடைய நடையில் ஒரு புதுத் தெம்பு தெரிந்தது.

ஒரு வாரம் சென்றது.

நந்த கோபால் தலைமை ஆசிரியரின் வீட்டுக்கு ஓடி வந்தான். அவரும் வீட்டில் இருந்தவர்களும், தோட்டத்தில் இருந்த செடி கொடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தார்கள். ஆனந்தை மட்டும் காணோம்.

''நந்த கோபால், என்ன விஷயம்?"

''சார், அந்தக் கோப்பை இப்போது எனக்குத் தேவைப்படுகிறது.. தருகிறீர்களா...?''

தயக்கத்தோடு கேட்டான் அவன்.

'உறவினர் யாராவது வந்திருப்பார்கள் அல்லது நண்பர்களுக்குக் காட்ட விரும்புகிறான் போலிருக்கிறது. அவனே கூட அதை நன்றாகப் பார்த்திருக்க மாட்டான்.. கொண்டு போகட்டும்' என்று நினைத்தார் அன்புநாதன்.

''அது உனக்கு உரிமையான கோப்பை.. தாராளமாக வாங்கிக் கொண்டு போகலாம்.. இதோ எடுத்து வருகிறேன்..'' என்றார்.

சற்று நேரத்தில் வந்தார். அழகிய பாலிதீன் உறைக்குள் காட்சியளித்தது அந்தக் கோப்பை. அவனிடம் கொடுத்தார். 'எதற்கு ஏன்' என்றெல்லாம் கேட்காமல் அதைக் கொடுத்த அவருடைய உயர்ந்த பண்பைக் கண்டு அவனுடைய உள்ளம் மகிழ்ந்தது.

''நந்த கோபால், தேநீர் கொண்டு வரச் சொல்கிறேன்... குடித்து விட்டுப் போ...'' என்றார் அவர்.

"நான் அப்புறம் வருகிறேன் சார்" என்று கூறிவிட்டு,கோப்பையை எடுத்துக் கொண்டு வேகமாக ஓடினான் அவன்.

அவனுடைய செயல் அவரைச் சிந்திக்க வைத்தது.

ஆனந்தன் ஓடி வந்தான்.

வந்ததும் வராததுமாக "அப்பா, இந்த நந்த கோபால் என்ன செய்தான் தெரியுமா?" என்றான்.

"விஷயத்தைச் சொல்" என்றார் அன்பு நாதன்.

"அவனுடைய பரிசுக் கோப்பையைக் கொண்டு போய் காந்திலால் கடையில் அடகு வைத்து விட்டான்..."

மூச்சுத்திணறியவாறு செய்தியைச் சொன்னான்.

"ஏன், நந்த கோபாலுக்கு அப்படி என்ன அவசரம்? ஒன்றும் புரியவில்லையே..." என்ற அன்பு நாதன் சட்டையைப் போட்டுக் கொண்டு உடனே புறப்பட்டார்.

அவருடைய ஸ்கூட்டர் நந்த கோபாலின் வீட்டை நோக்கி விரைந்தது.

வீட்டு முன்னால் நிறுத்தி விசாரித்தார். "நந்த கோபாலோட அப்பா ராமலிங்கம் குடிச்சிட்டு ரோட்டில வந்தப்போ ஒரு ஆட்டோ அவரை மோதிட்டுப் போயிடுச்சு.. மண்டையில காயம்... எல்லாரும் ஆஸ்பத்திரிக்குப் போயிருக்காங்க..."

பக்கத்து வீட்டுச் சிறுவன் சொன்னான்.

அன்பு நாதன் வார்டு எண்ணை விசாரித்துக் கொண்டு அங்கு போய்ச் சேர்ந்தார்.

அவரைக் கண்டதும் நந்த கோபாலுக்கு ஒன்றும் புரியவில்லை. குழம்பிப் போய் நின்று கொண்டிருந்தான்.

கட்டிலில் படுத்திருந்த இராமலிங்கம் அன்பு நாதனைக் கண்டதும் எழுந்து உட்கார்ந்தார்.

"ஐயா எழுந்திருக்க வேண்டாம், படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்றார் அவர்.

இராமலிங்கம் கேட்கவில்லை. அன்புநாதனிடம் பேசினால்தான் மனப்பாரம் குறையும் என்று நினைத்தார் அவர்.

"ஐயா, நான் நந்த கோபாலுக்குப் பரிசாக் கொடுத்த கோப்பையை அவனுக்குத் தெரியாம எடுத்து வித்துக் குடிச்சேன்.. நந்த கோபாலோ, நீங்க மீட்டுக் கொடுத்த அதே கோப்பையை அடகு வைச்சு என் உயிரைக் காப்பாத்தியிருக்கான். அவனோட அந்தச் செயல், மிருகமா இருந்த என்னை அடியோட மாத்திடிச்சு... அந்தப் பாழாப்போன குடிப்பழக்கத்தை நான் விட்டுட்டேனய்யா... என்னை மன்னிச்சிடுங்கய்யா..."

இராமலிங்கம் கையெடுத்துக் கும்பிட்டார். அவருடைய கண்களில் கண்ணீர் வழிந்தது. அது திருந்திவிட்ட அவருடைய உள்ளத்தைத் தெளிவாகக் காட்டியது.

அன்பு நாதன் உள்ளத்தில் இருந்த சுமையும் இறங்கியது.

நந்த கோபாலின் முதுகில் தட்டிக் கொடுத்தார் அவர்.

"நந்த கோபால்! நீ உன் தந்தையிடம் காட்டிய பாச உணர்ச்சி பெரிய விந்தையைச் செய்து விட்டதே! நீ எல்லாவிதத்திலும் முதல் மாணவன் தான் என்பதை நிரூபித்து விட்டாய்"


அந்த அன்பு மொழிகளைக் கேட்ட அவனுடைய இதயம் என்றுமில்லாத ஆனந்தத்தில் திளைத்தது.

காரணம்?


"என்ன.... பீரோ இப்படி வளைந்து நெளிஞ்சு இருக்கு...?"


"நாங்க சீட்டு கட்டினோம்... அங்கே இது குலுக்கலிலே 'விழுந்தது தான்... அதனாலே! நெளிஞ்சு இருக்கு...?"

— மயிலாடுதுறை ஸ்வாமி.



பழமொழிப் புதிர்





மேலே உள்ள இரண்டு படங்களும் இரண்டு பழமொழிகளை விளக்குகின்றன. எந்த எந்தப் பழமொழிகள்?

விடை 85 ஆம் பக்கம்.



அருமைத் தம்பி

வி.ர. வசந்தன்

மாலையில் தன் நண்பர்களோடு பொருட்காட்சி பார்க்கப் போவதாக அம்மாவிடம் கண்ணன் கேட்ட போது அவள் அதற்கு அனுமதியளித்து விட்டு, தம்பியையும் அவனுடன் அழைத்துச் செல்லுமாறு சொன்னார்கள்.

கண்ணன் சற்றுத் தயக்கத்தோடு தாயாரைப் பார்த்தான். ''என் நண்பர்கள் எல்லாம் வர்றாங்க அம்மா.... அவங்களோட தம்பியையும் கூட்டிக்கிட்டுப் போனால் எப்படிம்மா'' என்று இழுத்தான் அவன்.

அம்மாவின் முகத்தில் கோபம் படர்ந்தது. ''அதனாலென்ன... அவங்களுக்கு இப்படியொரு தம்பி இருந்தால் அழைச்சுக்கிட்டு வர மாட்டாங்களா....? நீ பேசறது அவனோட காதில் விழுந்தால், அவன் மனசு சங்கடப்படும்... தன்னோட உடல் ஊனத்தைப் பற்றி ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்படாமல் தன்னம்பிக்கையோடே உன் தம்பி வளரணும்னா அவனையும் சரிசமமா நீ நடத்தணும், தெரியுதா?'' என்றார்கள்.

கண்ணனால் மேற்கொண்டு மறுப்பெதுவும் சொல்ல முடியவில்லை. அரைகுறை மனத்துடன் சரியென்று தலையசைத்தான்.

சிறு வயதில் இளம்பிள்ளை வாதத்தால் கால்கள் ஊனமாகிப் போன தன் தம்பி ரவி மீது கண்ணனுக்கு மிகுந்த அன்பு உண்டு. எப்போதும் அவனிடம் பாசத்தோடும் பரிவோடும்தான் நடந்து கொள்வான். அவனைப் பொறுப்பாகப் பள்ளிக் கூடத்திற்கு அழைத்துச் செல்வதும், திரும்ப அழைத்து வருவதும் அவன்தான். ஆனாலும், இப்போது நண்பர்களுடன் சேர்ந்து செல்கையில் தம்பியும் தன்னுடன் வந்தால் அதைப் பற்றி நண்பர்கள் என்ன நினைப்பார்களோ என்று அவன் தயங்கினான்.

அன்று மாலை கண்ணனை எதிர்பார்த்துப் பொருட்காட்சி வாசலில் காத்திருந்த நண்பர்கள் அவன் ரவியையும் அழைத்து வருவதைப் பார்த்துக் கண்களில் கேள்விக் குறியுடன் அவனை நோக்கினர்.

கண்ணன் தயங்கியவாறு அவர்

களிடம் ''வந்து ரவியையும் கண்டிப்பா அழைச்சுட்டுப் போகணும்னு அம்மா சொல்லிட்டாங்க... அது தான்...'' என்று மென்று விழுங்கினான்.

பெரிதும் ஏமாற்றமடைந்த நண்பன் ஒருவன் அவன் காதில் மெதுவாக, ''ஏண்டா, இன்னைக்கு 'ஜயண்ட் வீல்'ல ஏறணும்னு திட்டம் போட்டிருந்தோமே ; உன் தம்பியால் அதிலே வர முடியுமா? அவனை வச்சுட்டு இப்ப என்ன செய்யறது...? இப்படிப் பண்ணிட்டியேடா'' என்று கிசுகிசுத்தான்.

நண்பன் பேசுவது ரவியின் காதில் விழுந்து விட்டால் அவன் மனம் சங்கடப்படுமே என்று கண்ணனின் மனம் துணுக்குற்றது. அவன் பரிதவிப்புடன் தன் தம்பியின் முகத்தைப் பார்த்தான். அவன் பொருட்காட்சி வாசலில் ஒளி ஜாலம் காட்டிக் கொண்டிருந்த வண்ண விளக்குகளை வேடிக்கை பார்ப்பதில் முனைந்திருந்தான்.

கண்ணன் வெளிறிய முகத்தோடு தன் நண்பனைப் பார்த்து, ''நீங்க எல்லாம் சக்கர ராட்டினத்திற்குப் போங்க, நான் ர்விக்குத் துணையாகக் கீழே நின்னுக்கிறேன்... மற்ற இடங்களை எல்லாம் எல்லோருமாகச் சேர்ந்து பார்க்கலாம்'' என்றான்.

அதைக் கேட்டதும் அந்த நண்பனுக்குக் கோபம் வந்து விட்டது. ''நல்ல ஆள் நீ. எல்லோருமாச் சேர்ந்து போறதை விட்டுட்டு நாங்க தனியா, நீ தனியாப் போனா என்ன அர்த்தம்?'' என்று கேட்டான்.

கண்ணன் இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவிக்க, அவர்களுக்குள் விவாதம் ஏற்படுவதைக் கவனித்து விட்ட ரவி, ''என்னண்ணே, என்ன பிரச்னை'' என்று கண்ணனைப் பார்த்தான்.

அவன் பதில் சொல்வதற்குள் முந்திக் கொண்ட நண்பன், ''ரவி, நீயே சொல்லு, இன்னைக்கு அந்தச் சக்கர ராட்டினத்தில் ஏறணும்னு நாங்க நினைச்சிருந்தோம். இப்ப நீயும் எங்க கூட இருக்கிறதாலே கண்ணன் வர மாட்டேன் என்கிறான்... முதலிலே வர்ரேன்னு சொல்லிட்டு இப்ப வர மாட்டேன்னா எப்படி?'' என்று கேட்டான்.

கண்ணன் ஏன் அவர்களோடு செல்ல மறுக்கிறான் என்பது ரவிக்குப் புரிந்தது. தன்னால் அவர்களுக்குள் மனவேற்றுமை ஏற்படுவதைத் தவிர்க்க முயன்றவனாக அவன் கண்ணனைப் பார்த்து, ''நீ அவங்க கூட சக்கர ராட்டினத்திற்குப் போயிட்டு வா அண்ணே, என்னைப் பற்றிக் கவலைப்படாதே. நான் கீழே நின்னுக்குவேன்'' என்றான்.

இந்தப் பொருட்காட்சி நெருக்கத்தில் ஊனமுற்ற தன் தம்பியைத் தனியாக விட்டுவிட்டு எப்படிப் போவது என்று கண்ணன் தவிக்க, அவன் நண்பர்களோ, ''கொஞ்ச நேரந்தானே, ரவி தைரியமா நிற்பான்... நாம போகலாம்'' என்று அவனை வற்புறுத்தினர். தான் ஏற்று வந்த பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாகக் கண்ணனின் மனச்சாட்சி அவனைக் குற்றப்படுத்தினாலும், நண்பர்களின் கோரிக்கையைத் தவிர்க்க முடியாமல் அவன் அதை ஏற்றுக் கொண்டான்.

எல்லோரும் நுழைவுச் சீட்டு வாங்கிக் கொண்டு பொருட்காட்சித் திடலுக்குள் நுழைந்தனர். அந்த இராட்சத சக்கரராட்டினம் இருந்த இடத்தை அணுகினர்.

கண்ணனின் நண்பன் அவசர அவசரமாகச் சென்று ரவியைத் தவிர மற்ற எல்லோருக்கும் கட்டணத்தைச் செலுத்தி விட்டு, ''வாங்க, வாங்க. போகலாம்'' என்று அவசரப்படுத்தினான்.

ரவியைப் பார்த்து ஒரு கணம் தயங்கினான் கண்ணன். அவனோ, ''நான் இங்கேயே நின்னுக்கறேன். நீ தைரியமாப் போயிட்டு வாண்ணே'' என்று சொல்லவும் அவன் சென்று தன் நண்பர்களோடு சேர்ந்து கொண்டான்.

சக்கரராட்டினத்தில் ஏறிக் கொண்ட நண்பர்கள் அது இயங்கி மேல் நோக்கிச் சுற்றத் தொடங்கியதும் உற்சாக ஆரவாரத்தோடு கீழே நின்ற ரவியைப் பார்த்துக் கையசைத்தனர். கண்ணனின் மனம், தம்பி கீழே



ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டிருக்க நாம் நண்பர்களோடு வந்து விட்டோமே என்று வருந்தியது. அதன் பிறகு அவர்கள் ரவியை மறந்து விட்டு ராட்டினத்தின் சுழற்சியில் மனம் ஒன்றிப் போயினர்.

கீழே நின்ற ரவி சற்று நேரம் பிரம்மாண்டமாகச் சுழல்கிற ராட்டினத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அங்கே தென்பட்ட ஒரு காட்சி அவன் கவனத்தை ஈர்த்தது.

பத்துப் பன்னிரண்டு பார்வையற்ற சிறுவர்கள் ஒருவா தோளை ஒருவர் பற்றிக் கொண்டு பொருட்காட்சித் திடலுக்குள் நுழைந்து கொண்டிருந்தனர். அவர்கள் எல்லோரும் அந்த ஊரிலுள்ள பார்வையற்றோர் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் என்பதை அவன் அறிவான். அவர்களை அழைத்து வந்திருந்த பொறுப்பாளர் முன்னே செல்ல, அவரைத் தொடர்ந்து அந்தச் சிறுவர்கள் சென்று கொண்டிருந்தனர். பார்வையற்ற அந்தச் சிறுவர்கள் இந்தப் பொருட்காட்சியில் என்ன பார்க்கப் போகிறார்கள்? ஒருவேளை இங்கு நிலவும் ஆரவாரத்தையும், உற்சாக அலைமோதலையும் கேட்டு அவர்கள் மகிழ்ச்சியடையட்டும் என்ற எண்ணத்தோடு அவர் அழைத்து வந்திருக்கலாம்.

அந்தப் பார்வையற்ற சிறுவர்கள் தன்னைக் கடந்து போவதையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் ரவி. யாரோ ஒருவன் காட்டிக் கொண்டிருந்த வேடிக்கையைப் பார்க்கக் கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. அந்தக் கூட்ட நெரிசலில் அந்தப் பார்வையற்ற சிறுவர்கள் சிக்கிக் கொண்டனர். கூட்டத்தால் அலைப்புண்டு அவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிக்கப்பட பொறுப்பேற்று வந்தவர் மீண்டும் அவர்களை வரிசைப்படுத்துவதில் முனைந்தார்.

அதில் ஒரு சிறுவன் மட்டும் தனியாகக் கூட்டத்தில் மாட்டிக் கொண்டான். அவனைக் கவனியாமல் மற்றவர்கள் அந்தக் கூட்டத்தை விட்டு நகரலாயினர். அவன் உதவி கோரிப்

போட்ட கூச்சல்கூட கூட்டத்தினர் எழுப்பிய ஆரவாரத்தில் அவர்கள் காதில் விழவில்லை போலிருக்கிறது.

இவ்வளவையும் பார்த்துக் கொண்டு நின்ற ரவி, அந்தச் சிறுவனுக்கு உதவும் நோக்கத்துடன் சட்டென்று தான் நின்று கொண்டிருந்த இடத்தை விட்டு அந்தக் கூட்டத்தை நோக்கி நகர்ந்தான். ஒரு சில வினாடிகளில் கூட்டத்தை நெருக்கியவன் அங்கு தனியாக அழுது கொண்டிருந்த அந்தப் பார்வையற்ற சிறுவனை அணுகி அவன் கையைப் பற்றினான்.


யார் தன் கையைப் பிடித்தது என்று புரியாமல் மிரண்டவனிடம், "தம்பி, உன் கூட வந்தவங்க அதோ அங்கேதான் போய்க் கொண்டு இருக்காங்க, என் கூட வா, நான் கொண்டு போய் அவங்களோட சேர்த்திடறேன்" என்றான்.

அதைக் கேட்டதும் அந்தச் சிறுவனின் முகத்தில் பெரும் நிம்மதி உண்டாயிற்று. ரவி அவனைக் கையைப் பிடித்துக் கொண்டு தன் ஊனமுற்ற கால்களால் முடிந்த மட்டும் விரைவாக நடந்து அவர்களை நெருங்க முயன்றான். கூட்டத்தால் ஏற்பட்ட தடங்கல் அவன் நினைத்தவாறு எளிதாக அவர்களை அடைய விடாமல் தடை செய்தது.

சக்கர ராட்டினத்திலிருந்து இறங்கி, ரவி நின்ற இடத்திற்கு விரைந்து வந்த கண்ணனும் நண்பர்களும் ரவியை அங்கே காணாமல் திகைத்தனர்.

கண்ணன் பதற்றம் அடைந்தவனாய் ரவியை இங்கும் அங்கும் தேட ஆரம்பித்தான். இங்கே நிற்பதாகச் சொன்னவன் எங்கே போயிருப்பான்? அவனது நண்பர்களும் பரபரப்புக்குள்ளாகிச் சுற்று முற்றும் தேடலாயினர்.

ரவி எங்கே? தனியாக நின்று கொண்டு இருந்த அவன் எதையாவது வேடிக்கை பார்க்கும் எண்ணத்தோடு எங்காவது சென்றிருப்பானோ? அல்லது கூட்ட நெரிசலில் சிக்கித் தவித்துக் கொண்டிருப்பானோ? ஒரு வேளை பிள்ளைகளைப் பிடித்துக் கடத்துகிற கொடியவர்கள் அவனை ஏமாற்றி அழைத்துச் சென்றிருப்பார்களோ? என்ற எண்ணங்கள்





எழுந்து கண்ணனை அலைக்கழித்தன.

அவனுக்கு அச்சத்தால் வியர்த்தது. 'அம்மாவுக்கு இப்போது என்ன பதில் சொல்வது?' 'தம்பியை எங்கேயும் தனியாக விடாமல் உன்னோடேயே வைத்துக் கொள்' என்று கிளம்பும் போதுகூட எச்சரித்து அனுப்பினார்களே. ஊனமுற்ற அவனைத் தனியாக விட்டு விட்டு இப்படி நடந்து கொண்டேனே!' என்று மனத்துக்குள் தவித்தான்.

தன் நண்பர்களைப் பார்த்து, ''அவனைத் தனியா விட்டுட்டு வர

மாட்டேன்னு எவ்வளவோ சொன்னேனே கேட்டீங்களா! இப்ப என்ன செய்யறது'' என்று பதறினான்.

அவனுக்குப் பதில் சொல்ல முடியாமல் நண்பர்கள் கலங்கினர்.

அப்போது ஒரு நண்பன் சட்டென்று, ''அதோ பாருங்க, ரவி ஒரு பையனை அழைச்சுக்கிட்டு அங்கே போயிட்டிருக்கான்'' என்று பொருட்காட்சித் திடலின் ஒரு மூலையைச் சுட்டிக் காட்டினான்.

எல்லோரும் ஆவலுடன் அங்கு நோக்க,ரவி விந்தி விந்தி நடந்தவாறு அந்தப் பார்வையற்ற சிறுவனின் கையைப் பற்றியவாறு வேகமாக நடந்து கொண்டிருந்தான்.

அவர்கள் ஒரே ஓட்டமாக ஓடி அவனை அடைந்தனர். கண்ணன், ''என்ன ரவி இது, அங்கேயே நிற்பேன்னு சொல்லிட்டு இப்படித் தனியா வந்துட்டியே! ஒரு நிமிஷம் எல்லோரும் எப்படிப் பதறிப் போயிட்டோம் தெரியுமா...? யார் இந்தப் பையன்...'' என்று மூச்சு வாங்கினான்.

ரவி அவசரமாக, ''இந்தப் பையனுக்கு கண் தெரியாது... இவனோடே வந்தவங்களிடமிருந்து பிரிஞ்சு கூட்டத்திலே மாட்டிக்கிட்டுத் தனியாத் தவிச்சுட்டு இருந்தான். அதுதான் அவனை அவங்ககிட்ட அழைச்சுட்டுப் போறேன்'' என்று மீண்டும் சற்று தொலைவில் வரிசையாகச் சென்று கொண்டிருந்த பார்வையற்ற சிறுவர்களைத் தொடர முற்பட்டான்.

அதற்குள் அந்தச் சிறுவன் கூட்டத்தில் தவறி விட்டதைக் கவனித்து விட்ட அந்தப் பொறுப்பாளர், அவனைத் தேடுவதற்காகத் திரும்பி அவசரமாக வந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்து, ''சார், இதோ இவனைத்தானே தேடறீங்க...., இப்படி வாங்க'' என்று சத்தமிட்டான் ரவி.

ஆவலுடன் அருகே வந்த பொறுப்பாளர், ''ஆமாம் தம்பி, இவனைத்தான் தேடறேன்... இவன் எங்கே இருந்தான்...? எப்படி எங்களை விட்டு பிரிஞ்சான்?'' என்று கேட்டார்.

''அதோ பாருங்க, அந்தக் கூட்டத்திலே சிக்கிக்கிட்டுத் தனியாத் தவிச்சுட்டு இருந்தான்... நான்தான் அதைப் பார்த்து விட்டு உங்ககிட்ட அழைச்சுட்டு வர்றேன்'' என்றான் ரவி.

அவனை உற்றுப் பார்த்த பொறுப்பாளரின் முகம் வியப்பால் மலர்ந்தது. கால்கள் ஊனமுற்ற போதிலும், இவனுக்குத்தான் எவ்வளவு உறுதியான மனமும், பிறருக்கு ஆபத்தில் உதவ வேண்டும் என்ற எண்ணமும் இருக்கிறது! அவர் அவனைப் பார்த்து, ''தம்பி, இவ்வளவு பொறுப்பா வழி தவறிப் போன இவனை அழைச்சுட்டு வந்திருக்கியே, உன்னை எப்படிப் பாராட்டுறதுன்னே தெரியல்லை... உன் உடம்பில்தான் குறை இருக்கே தவிர, உள்ளத்திலே இல்லை. பொருட்காட்சி பார்க்க வந்த நீ, இந்தச் சிறுவனுக்கு உதவுறதை முதன்மையா நெனச்சிருக்கியே அதுக்காக உனக்கு ரொம்ப நன்றி தம்பி'' என்று ரவியைப் பாராட்டி விட்டு அந்தப் பார்வையற்ற சிறுவனை அழைத்துக் கொண்டு திரும்பிச் சென்றார்.

கண்ணன், தன் நண்பர்களை ஏறிட்டுப் பார்த்தான். சற்று முன்பு ஊனமுற்ற ரவியைத் தனியாக விட்டு விட்டு வரக் கண்ணன் மறுத்தபோது தாங்கள் அவனோடு விவாதம் செய்ததையும்,தனியாகத் தவித்த ஒரு பார்வையற்ற சிறுவனுக்கு உதவுவதையே பெரிதாக நினைத்த ரவியின் மனப்பாங்கையும் நினைத்து அவர்கள் வெட்கித் தலை குனிந்து நின்றனர். இப்படி உடலில் ஏற்படும் ஊனங்களை விட உள்ளத்தில் ஏற்படும் ஊனங்களே உண்மையான ஊனங்கள் என்பது அவர்களுக்குப் புரிந்தது.

கண்ணன் ரவியின் கைகளை ஆதரவுடன் பற்றிக் கொண்டு, ''ரவி, உன்னை மாதிரி ஒரு தம்பியை அடைந்ததுக்காக நான் பெருமைப்படறேன்'' என்றான்.

அதைக் கேட்ட ரவியின் முகம் பெருமிதத்தால் பூரித்துப் போயிற்று.

உயிர்மேல் ஆசை



இராஜா பாலச்சந்தர்

நெடு நேரமாகக் காத்திருந்தான் படகோட்டி. அக்கரையில் இருக்கும் கிராமத்திற்குப் போக, காலையிலிருந்து யாரும் வரவில்லை

அவன் இதயம் பாரமானது. காரணம், படகில் பயணம் செய்வோர் கொடுக்கும் சில்லறைகள்தான் அவனது அன்றாட வருமானம். எதுவும்கிடைக்கவில்லை என்றால், அன்று பட்டினிதான். அவன் மட்டும் அல்ல, அவனை நம்பி இருக்கும் மனைவியும், ஐந்து குழந்தைகளும் பட்டினிதான்!

நேரம் கடந்து கொண்டே இருந்தது. வயிற்றில் பசியால் வலி உண்டானது.

கண்ணுக்கு மேலே கையை வைத்தபடி, தூரத்தில் பார்த்தான் படகோட்டி. ஒரு முதியவர் வந்து கொண்டு இருப்பது தெரிந்தது.

வெள்ளைத் தாடியும் நீண்ட மீசையும் வைத்திருந்தார் அவர். எளிமையாக உடுத்தியிருந்தார்.

படகோட்டியிடம் வந்தார். அவனிடம் மென்மையாகக் கேட்டார், "படகோட்டியே, நான் மறு கரைக்குப் போகணும். கொண்டு போய் விடுவாயா?"

அவரைப் பார்த்தால் இந்த இடத்திற்குப் புதியவராகத் தெரிந்தது. எனவே, அவரிடமிருந்து நிறையப் பணத்தைப் பறிக்கத் திட்டமிட்டான் படகோட்டி. "பெரியவரே, ஆற்றிலே நிறைய வெள்ளம் போகுது. அதனால், துடுப்பு வலிக்கிறது ரொம்பக் கஷ்டம்."

"நான் அதற்கேற்றபடி நிறையப் பணம் தருவேன்."

மகிழ்ச்சியுடன் அவரை ஏற்றிக் கொண்டு புறப்பட்டான் படகோட்டி.

படகு ஆற்றைக் கடந்து கொண்டு இருந்தது.

"வாழ்க்கை எல்லாம் எப்படி இருக்கு?" என பேச்சுக்கொடுத்தார் முதியவர்.

"அதையேன் கேட்கறீங்க? எனக்குப் பெரிய குடும்பம். ஆனால், வருமானமோ கொஞ்சம்தான். நான் ஏதாகிலும் சம்பாதிச்சுக்கிட்டுப் போனால்தான் அன்றைக்கு வீட்டிலே எல்லோருக்கும் சாப்பாடு." என்று குறைப்பட்டுக் கொண்டான் படகோட்டி.

"கவலைப்படாதேப்பா, உன் கஷ்டம் எல்லாம் ஒருநாளைக்கு நீங்கிடும்," என்று ஆறுதல் கூறினார் முதியவர்.

"நீங்க எங்கேயிருந்து வர்றீங்க

பெரியவரே? உங்களைப் பற்றி எதுவும் சொல்லவே இல்லையே?'' என்று கேட்டான் படகோட்டி.

சிரித்தார் முதியவர். ''எனக்கு இருக்கிற இடம்தான் சொந்த ஊர். உலக ஆசைகளைத் துறந்தவன் நான். உயிர் மேல எனக்கு ஆசைகிடையாது. எப்பவும் சாகத் தயாராக இருக்கேன். வாழ்வே மாயமப்பா.'' அவர் கூறியதைக் கேட்டு வியந்தான் படகோட்டி.

திடீரென ஆற்றில் உண்மையிலேயே வெள்ளம் வந்துவிட்டது. நீரின் வேகம் அதிகரித்தது. படகு தடுமாறியது. ஒழுங்கீனமாக ஓடியது படகு. அதைக் கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடினான் படகோட்டி.

எதிர்பாராதவிதமாகப் படகு ஒரு சுழலில் சிக்கியது.

''பெரியவரே, இனிமேல் நாம உயிர் தப்புவது கஷ்டம்,'' என அலறினான் படகோட்டி.

''அப்படியா! எப்படியாவது படகைக் கரைசேர்த்துடுப்பா. வேண்டும்னா நானும் துடுப்பு வலிக்கிறேன்.'' என்றார் முதியவர்.

''இருக்கிறது ஒரு துடுப்புத் தானே?''

''சரி, அதை நீயே வலித்துக் கொண்டிரு,'' என்ற முதியவர், தமது கைகளை நீரில் அமிழ்த்தி, துடுப்பு வலிப்பது போல வேகமாகச் செய்தார். அதனால், அவருக்கு மூச்சு இறைத்தது; வியர்வை அரும்பியது.

அதிர்ஷ்டவசமாக மீண்டும் திடீரென வெள்ளம் வடிந்தது; நீர் குறைந்தது. ஒருவழியாக, இருவரும் முயன்று, படகைக் கரைசேர்த்தனர்.

தரையில் இறங்கியதும், முதியவரை ஏளனமாகப் பார்த்தான் படகோட்டி. கிண்டலாகக் கேட்டான்: ''யோவ் பெரியவரே, கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே எப்பவும் சாகிறதுக்குத் தயாரா இருக்கேன்னு சொன்னியே? உயிர் மேல் ஆசையே கிடையாதுன்னு கூறினியே?''

''ஆமாம், அதற்குஎன்ன? இப்பவும் அதையேதான் சொல்கிறேன்,'' என்றார் முதியவர் அமைதியாக.

''பிறகுஏன் படகுசுழலிலேமாட்டிக்கிட்ட போது நீ அப்படிப் பரபரத்தாய். உயிரைக் காப்பாற்றிக்க ஆசைப்பட்டு, என்னென்னவோ முயற்சி செய்தாய்?''

முதியவர் பேசவில்லை.

''எதுக்கையா நீ ஊரை ஏமாற்றிக்கிட்டு இப்படிப் பேசறே?'' என மரியாதையின்றிப் பேசினான் படகோட்டி.

ஆனால், சாந்தமாகக் கூறினார் முதியவர், நான் என் உயிரைக் காப்பாற்றிக்கிறதுக்காக முயற்சி செய்யலையப்பா. படகு கவிழ்ந்து நான் இறக்கிறதைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை. ஆனால், அதே சமயம் சாகப்போகிறது நீயும்தானே? அதுக்காகத்தான் நான் வேதனைப்பட்டேன். உன்னை எப்படியாவது காப்பாற்றிக் கரை சேர்த்துடணும்னுதான் முயற்சி செய்தேன். ஏன்னா, உன்னை நம்பித்தான் உன் குடும்பமே இருக்கு? மேலும், என்னாலே நீ சாகிறதை நான் எப்படியப்பா அனுமதிப்பேன்?''

மன்னித்துவிட்டுத் தன் பயணத்தைத் தொடர்ந்தார் முதியவர்.


ஒலிம்பிக்கில் சேர்க்க...

மாணவன் 1: சியோல் ஒலிம்பிக்கிலே புதுப்புது விளையாட்டுகளை அறிமுகப்படுத்தறாங்களாம்.

மாணவன் 2: அதுக்கு என்ன இப்போ...?

மாணவன் 1: நம்ம ஊரு கிட்டிப் புள், கோலி, பம்பரம் எல்லாம் சேர்த்தா என்னன்னு ஒலிம்பிக் கமிட்டிக்குக் கடிதம் எழுதியிருக்கேன்.

— குருவாசன்.,



சோதிடம் பலித்தது!

குமார் சுப்பிரமணியம்

சுந்தரம் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவன். அவனுடைய தந்தை ஒரு விவசாயி. அயராத உழைப்பினால் கொஞ்சம் நிலமும், ஆடு மாடுகளும் வாங்கிச் சிறப்பாகக் குடும்பம் நடத்தி வந்தார் அவர்.

சுந்தரத்தின் சிறு வயதில் சோதிடரான அவன் தாத்தா சுந்தரத்தின் ஜாதகத்தைப் பார்த்து, ''இந்தப் பிள்ளை மிகவும் அதிர்ஷ்டசாலி. இந்நாட்டு மன்னரே. இவன் தலையை அவர் மடியில் வைத்துக் கொள்ளும் காலம் வரும்'' என்றார்.

சுந்தரம் அன்று முதல், தனக்கு அரச பதவியே கிடைத்தது போல் எண்ணி விட்டான். எப்பொழுதும் உல்லாசமாக ஆடை அணிந்து ஊர் சுற்றிக் கொண்டே இருந்தான். ஒரே பிள்ளையாதலால், அவன் பெற்றோரும் அவனைக் கட்டுப்படுத்தவோ, திருத்தவோ முயற்சி செய்யவில்லை. போதுமான வசதிகள் இருந்ததனால், அவன் எப்படியோ மகிழ்ச்சியாக இருந்தால் போதும் என்று விட்டு




விட்டார்கள். சுந்தரத்தின் இருபதாவது வயதிலே அவன் தந்தையும், அதற்குச் சில நாட்களுக்குப் பிறகு அவன் தாயும் இந்த உலகத்திற்கு விடை கூறிச் சென்று விட்டனர்.

சோம்பேறித்தனமே உருவாக வளர்ந்த சுந்தரம் நாட்கள் செல்லச் செல்ல குடும்பச் சொத்துக்களை ஒவ்வொன்றாக விற்றுப் பணம் வாங்கிக் காலத்தை ஓட்ட ஆரம்பித்தான்.

சுந்தரம் செலவழித்துக் கொண்டே இருந்தானே தவிர, சொத்தைப் பாதுகாக்கவோ, மேலும் சேர்க்கவோ பாடுபடவில்லை. கடைசியில் ஒருவேளை சாப்பாட்டுக்கே வழியில்லாமல் தெருவுக்கு வந்து விட்டான். கைநீட்டிப் பிச்சை எடுப்பதை கௌரவக் குறைவாக நினைத்த சுந்தரம், கடைசியில் அரசரை நேரில் சந்திக்கவே தீர்மானித்தான். பசியின் கொடுமையினாலும், ஏமாற்றத்தினாலும், உள்ளம் தளர்ந்து, தள்ளாடிக் கடற்கரை ஓரமாக வந்த சுந்தரம், மாலைப் பொழுதினில் இளைப்பாற அந்த மணல் பரப்பிலேயே அமர்ந்து விட்டான். 'இன்னும் சிறிது தூரம்தான் இருக்கிறது. அரச மாளிகையை அடைய, தாத்தா சொன்னபடி சோதிடம் பலித்துவிடப் போகிறது. மன்னர் மூலம் தன் துயரமும் அகலப் போகிறது' என்ற நிம்மதியுடன் பெருமூச்சுவிட்டு விட்டுத் தரையில் சாய்ந்தான். அமைதியான மாலை, குளிர்ந்த தென்றல், அதிகமான அசதி எல்லாமாகச் சுந்தரத்தை ஆழ்ந்த நித்திரையில் மூழ்கச் செய்தன. இரவில் இளம் தென்றலானது பெரும் காற்றாக வந்து, பெரிய அலையை எழுப்பி உறங்கிக் கிடந்த சுந்தரத்தை அடித்துச் சென்று விட்டது.

சில ஆண்டுகள் சென்றன. அந்நாட்டு அரசர் அதிகாலையில் கடற்கரை ஓரமாக மந்திரியுடனும், மற்றும் சிலருடனும் குதிரைச் சவாரி செய்வது வழக்கம். அன்றொருநாள் அவ்வாறு செல்லும் போது பளிச்சென ஒரு பொருள் பிரகாசத்துடன் அலையினால் மோதப்பட்டு வருவதை அரசர் கவனித்தார். உடனே ஒரு பணியாளை அழைத்து அந்த அதிசயப் பொருளை எடுத்துவரச் சொன்னார். அவன் ஒரு பட்டுத்துணியால் அதனை மூடி எடுத்து வந்து அரசரிடம் ஒப்படைத்தான். அரசரும் அதனைத் தன் மடியில் வைத்து வருடினார். அரண்மனைக்குத் திரும்பியதும் மேல்மாடத்துக்குச் சென்று பட்டுத் துணியைக் கட்டவிழ்த்து, அந்தப் பொருளைப் பார்த்தார். திடீரென்று அருவருப்புடன் அதைத் தூக்கி எறிந்தார். அது வேறொன்றுமில்லை; நம் சோம்பேறிச் சுந்தரத்தின் தலை ஓடுதான். அலையினால் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்ட அவன் சடலம் காலப் போக்கில் அழுகி, கரைந்து, ஒவ்வொரு உறுப்பும் தனியாகச் சென்று மண்டை ஓடு மட்டும் கரைக்குத் தள்ளப்பட்டது.



பிறந்த தினம்



வினோபா சொன்னது

காது வலித்தாலோ காலிலே அடி பட்டாலோ கண் அழுகிறது. 'உனக்குக் கஷ்டம் இல்லாத போது நீ ஏன் அழுகிறாய்?' என்று கேட்டால், ''நாங்கள் எல்லாம் ஒன்றுதான். மற்றவர் சுகத்தையும் துக்கத்தையும் எங்களுக்குவந்த சுகதுக்கங்களாகவே கருதுவோம்'' என்றுதான் சொல்லும். அவ்வாறே காலில் முள் தைத்தால், முள்ளை எடுக்க கை உடனே ஓடுகிறது. ''தாழ்ந்தவர்களுக்கு உதவ நான் என்னைத் தாழ்த்திக் கொள்ள மாட்டேன்'' என்று கை சொல்லவில்லை முள்ளை எடுத்தால்தான் கைக்குச் சமாதானம் ஏற்படும்.

தகவல்: சி. டி. காசி (21,301),
மதுரை — 2.

ஜோடியைச் சேருங்கள்

1. சிவன், அன்பு, கருணை, முருகன்.
2. ஆனி, பனி, மணி, தை, கனி
3. மதுரை, மீனாட்சி, காமாட்சி, புலி காசி.
4. சிங்கம், அன்னம், பாம்பு, புலி.

விடை: 1. சிவன், முருகன்; 2. ஆனி, தை; 3. மதுரை, காசி; 4. சிங்கம், புலி.

— ப. தினேஷ்குமார் (3321),
சென்னை — 7.



பிறந்த தேதிகள்

கீழே சில தலைவர்களின் பிறந்த தேதிகள் மாறி இருக்கின்றன. சரி செய்ய முடியுமா, பாருங்கள்:

1. மகாத்மா காந்தி — 23.7.1856
2. ஜவாஹர்லால் நேரு — 23.1.1897
3. பாலகங்காதர திலகர் — 10.12.1878
4. ராஜாஜி — 2.10.1869
5. சுபாஷ் சந்திர போஸ் — 14.11.1889

விடை: 1 — 4, 2 — 5, 3 — 1, 4 — 3, 5 — 2.

— க. கோகுலகிருஷ்ணன்
(20,919), விசலூர்.





பூமிக்கு அடியில் வீடு!

ஜப்பானில் பூமிக்கு அடியில் வீடு கட்டத் திட்டமிட்டிருக்கிறார்கள். போதிய வீட்டு மனைகள் இல்லாததாலும், ஜப்பானில் அடிக்கடி நில அதிர்ச்சி ஏற்படுவதாலும் இப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்ய முன்வந்திருக்கிறார்கள். கடல் நடுவே ஒரு நகரத்தை நிர்மாணிக்கும் திட்டத்தையும் ஜப்பானியர்கள் கைவசம் வைத்திருக்கிறார்கள்.

— இரா. மணி (21,412),
வந்தவாசி.



கவிஞர்கள் யார்?

கீழ்க்கண்ட புத்தகங்களை எழுதிய கவிஞர்கள் யார்?

1. மயில் தோகை.
2. பூந்தோட்டம்,
3. நிலாச் சோறு,
4. மலரும் மாலையும்
5. சிரிக்கும் பூக்கள்.

விடை: 1. பல்லவன், 2. திருச்சி பாரதன், 3. பி. வி. கிரி, 4. கவிமணி, 5. அழ. வள்ளியப்பா.

— பா. சாந்தபாபு (20,143),
பம்மல் — 75.



இரண்டு வரி


ஆண்டுக்கு இரண்டு வரி
அரசு போடாத வரி,
மக்கள் செலுத்தாத வரி,
மதியால் சொல்லுவாய் நீ?

விடை: ஜனவரி, பிப்ரவரி.

— எஸ். ஹலிமா ஸயிதியா
(21,300), திருச்சி — 1.

கதைக்கு 5 பைசா

என் தாத்தா ஒருநாள் காலையில் என்னை அழைத்து, "இன்று மத்தியானம் நான் ரேடியோவில் குழந்தைகளுக்குக் கதை சொல்லப் போகிறேன். அந்தக் கதையை இப்போது உனக்குச் சொல்லட்டுமா?" என்றார்கள். "சரி" என்றேன். கதையைச் சொன்




னார்கள். ''நன்றாயிருக்கிறது'' என்றேன். ''சரி, இப்போது கேட்ட கதைக்கு நீ ரூபாய் தரவேண்டும். எவ்வளவு தருவாய்?'' என்றார்கள்.

''5 பைசா தருவேன்'' என்று நான் சொன்னதும், ''என்ன! ஐந்து பைசா தானா? ரேடியோவில் இந்தக் கதைக்கு எனக்கு 100 ரூபாய் தருவார்களே'' என்றார்கள்.

''ரேடியோவில் நூற்றுக்கணக்கான குழந்தைகள் கேட்பார்கள். அதனால் 100 ரூபாய் தருகிறார்கள். இங்கே நான் ஒருவன்தானே கேட்டேன்! அதனால் 5 பைசா போதும்'' என்றேன்.

என் பதிலைக் கேட்டு என் தாத்தா என்னைத் தட்டிக் கொடுத்தார்கள்.

— வி. அரவிந்த் (10,928),
சென்னை — 40.



வென்றது யார்?

குப்பு, சுப்பு, ராமு, சோமு நால்வரும் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டனர். குப்பு முதலாவது அல்ல; ராமுவுக்கு அடுத்தாற்போல சோமு வந்தான். குப்புவுக்கும் ராமுவுக்கும் இடையில் யாரும் இல்லை.

யார் முதலில் வந்தது!

விடை: சுப்பு.

— ப. ஹேமா (15,973),
விழுப்புரம்.

தம், தம்

1. அன்னை குழந்தைக்கு ஊட்டுவது ——தம்.



2. பாடங்களில் ஒன்று ——தம்.
3. அஞ்சல் வழி செல்வது ——தம்.
4. இரும்பைக் கவர்வது ——தம்
5. யானையின் முகத்தில் இருப்பது ——தம்.
6. ஒரு வார இதழின் பெயர் ——தம்.

விடை: 1. சாதம், 2. கணிதம், 3. கடிதம், 4. காந்தம், 5. தந்தம், 6. குமுதம்.

— ச. சுபத்ரா (10,095),
திருவொற்றியூர்.

ஒரு பாட்டு

50 ஆண்டுகளுக்கு முன்பு தொழிலாளர் கூட்டங்களிலும், தேசியக் கூட்டங்களிலும் கீழ்க்கண்ட பாடலை உணர்ச்சியோடு பாடுவார்களாம்:

காலுக்குச் செருப்பு மில்லை;
கால் வயிற்றுக் கூழுமில்லை;
பாழுக் குழைத்தோமடா
— என் தோழனே
பசையற்றுப் போனோமடா.



இந்தப் பாடலைப் பாடியவர் யார் தெரியுமா? 'ஜீவா' என்று அழைக்கப் படும் தொழிலாளர் தலைவர் காலஞ் சென்ற ப. ஜீவானந்தம் அவர்கள் தான்.

— பி. எல். சாந்தி (5939),
இராயவரம்.





இதுவே முதல் தடவை.
ஆதாரம்: அதிசய உண்மைகள்.
தகவல்: கே. நரசிம்மன்.
(7378), ஓசூர்.

முதல் புத்தகம்


உலகில் முதல் முதலாக உலோக அச்சுக்களைக் கொண்டு அச்சிடப் பட்ட புத்தகம் லத்தீன் மொழியிலான பைபிள்தான். 1456 — ஆம் ஆண்டில் இப்புத்தகத்தை அச்சிட ஆட்டுத் தோல் உபயோகப்படுத்தப்பட்டது. பக்கத்திற்கு 40 வரிகள் கொண்ட இப் புத்தகம் 1282 பக்கங்கள் உடையது. 300 பிரதிகள் அச்சிட ஒவ்வொரு பிரதிக்கும் 300 ஆடுகளின் தோல் தேவைப்பட்டது.

— டி. எல். சிவகுமார் (9815),
வந்தவாசி

கவிதையில் சட்டம்

பெர்டினன்ட் பிளாகன் (1800 — 1866) என்பவர் பிரபல பிரெஞ்சு அரசியல்வாதி, நல்ல எழுத்தாளர், சிறந்த கவிஞர். இவர், தம் வாழ் நாளில் யாரும் நினைத்துப் பார்க் காத ஒன்றைச் செய்தார். பிரெஞ்சு நாட்டுச் சட்டத்தை ஒரு லட்சத்து இருபதாயிரம் சொற்கள் கொண்ட கவிதையாக இயற்றினார்.

கவிதையில் சட்டம் எழுதியது




பேரன், பேத்தி


பேரன், பேத்தி, என்பது பெயரன், பெயர்த்தி என்பதிலிருந்து வந்த வையே. மகன் அல்லது மகளிடம் பிறந்த புத்திரனுக்குத் தாத்தாவின் பெயரை வைத்ததால், 'பெயரன்' என் றும், பாட்டியின் பெயரை மகன் அல்லது மகளிடம் பிறந்த புத்திரிக்கு வைத்ததால் 'பெயர்த்தி' என்றும். அழைத்தனர் என்று எங்கள் தமிழ் ஐயா கூறினார்.

— மு. ரமேஷ்பாபு (12,886),
சென்னை — 44.

உறுப்பினர் வரைந்த ஓவியங்கள்



பி. கோவிந்தசாமி (5703)



வே. ஆனந்தி (21,422)



வே. புவனேசுவரி (21,423)



ஸ்ரீராம்.

சார் தபால்

கோகுலத் தாத்தா

* புத்தக மூட்டைகளைத் தூக்கி, தங்கள் சிரமத்தை விவரிக்க இயலாமல் தவிக்கும் பிஞ்சு உள்ளங்களின் ஒட்டு மொத்தக் கருத்தை ஆணித்தரமாகச் சொன்ன உங்களுக்கு நன்றி சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

— எஸ். ராஜா, குத்தாலம்.

* தலையங்கம் மிக அருமை. இக்கருத்தைப் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு எட்டச் செய்தால் பலன் கிட்டும்.

— தெ. முருகசாமி,
முதல்வர், இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி.

* தாங்கள் கூறியது போல், பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் இதுகுறித்துக் கவனம் செலுத்தினால் நலமாயிருக்குமே!

— ஆர். குணவதி, சென்னை — 12.

* பெரியவர்களானதும் முதுகு கூனல் ஆகாமல் இருக்க வேண்டுமே என்பதுதான் என் கவலை!

— ஆர். தாரா, மணச்சநல்லூர்.

* எவ்வளவுக்கு எவ்வளவு புத்தகங்களைச் சுமக்கச் சொல்கிறார்களோ, எவ்வளவுக்கு எவ்வளவு அதிக நன்கொடை கேட்கிறார்களோ, எவ்வளவுக்கு எவ்வளவு கட்டணம் வசூலிக்கிறார்களோ, அதுதான் உயர்ந்த பள்ளிக்கூடம் என்று சிலர் நினைக்கிறார்கள். இந்த மாயை என்று மறையுமோ?

— என். சிங்காரவேலன், சென்னை — 30.

* பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையின் குழந்தைப் பருவக் கட்டுரை வாழ்க்கைக்குப் பயன்படும் ஒரு கட்டுரையாக அமைந்தது.

— எம். ஏ. சுப்ரமணியன், ஏ. பி. லோகநாதன், கோபி.

* திரு. வி. க. திருவாரூரில் பிறந்தார் என்பது தவறு. அவர் பிறந்தது துள்ளம் என்ற ஊரில். தம் முன்னோர்கள் வாழ்ந்த திருவாரூரைக் குறிக்கவே தம் பெயருக்கு முன்னால் 'திரு' சேர்த்துக் கொண்டார்.

— அ. ப. பாலையன், சாட்டியக்குடி.

* 'மகளின் தியாகத்தால் மணி உருவானது' என்ற சிறுகதையில் தன் தந்தைக்காகவும், குடும்ப மானத்துக்காகவும் தன் உயிரையே அளித்த கோ — ஆவின் தியாகம் நெஞ்சை உருக்கக் கூடியதாக இருந்தது.

— செ. தியாகராஜன் (3032),
திருக்கடையூர்.

* தந்தை — மகள் பாசத்தை விளக்கும் விதமாக அமைந்திருந்தது இக்கதை.

— செ. சரவணன், திருவாரூர் — 2.

* பிருகஸ்பதியின் 'பள்ளிக்கூடம் வேண்டாமே' கோகுலத்திற்குச் சூட்டப்படும் மேலும் ஒரு புகழ் மகுடம்.

— சே. பாலசுப்ரமணியன்,
செய்துங்கநல்லூர்.

* 'பெரியோர் வாழ்விலே' யில் காணப்படும் ஆறு செய்திகளும் அறுசுவையாக இருந்தன.

— வி. சுந்தரராமன், குத்தாலம்.

* 'தொண்டைச் சதை வளர்ச்சி'யை மிக அருமையாகக் கூறியிருக்கிறார் டாக்டர் கு. கணேசன். கோகுலத்தைப் படிக்க நாங்கள் கொடுத்து வைத்தவர்களாவோம்.

— வை. நீதிமணி (21,625), கிள்ளை.

* ஆ! புதிய தொடர்கதையா! பூதலூர் முத்து எழுதுகிறாரா? இன்னும் ஓராண்டுக்கு எங்களுக்குக் கொண்டாட்டமதான்!

— ப. சிங்காரம், வலையப்பட்டி.

* 'வட்டமான பொருள்' (பழைய கதை; புதிய பாடல்) மிகவும் வேடிக்கையாக உள்ளது. பல முறை படித்து ரசித்தேன். ஆமாம், ஏன் தொடர்ந்து இந்தப் பகுதி வருவதில்லை?

— ம. வஜ்ரவேலு, மதுராந்தகம்.

* செல்வி ராஜேஸ்வரி பெற்ற பரிசுகளின் எண்ணிக்கையை அறிந்தபோது, 'அப்பப்பா! இத்தனை பரிசுகளா?' என வியப்படைந்தேன். இதோ, என் வாழ்த்தையும் செல்வி ராஜேஸ்வரிக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

— எஸ். ஆர். இராதா, குத்தாலம்.

* 'கோகுலம்' என் போன்றவர்களுக்கா, அல்லது தாத்தாக்களுக்கா? ஏன் கேட்கிறேன் என்றால் 'கோகுலம்' வந்து விட்டால் என் தாத்தா முதலில் படித்து விட்டுத்தான் எனக்குத் தருகிறார். என்ன கேட்டாலும், பிடுங்கினாலும் தரமாட்டார். இவர் என் தாத்தா மட்டுமல்ல; கோகுலத் தாத்தாவாகவும் இருக்கிறாரே!

— எஸ். கார்த்திகேயன் (18,229),
திருவாரூர் — 1.

* 'பழைய ஒலிம்பிக்கின் கதை' ஒலிம்பிக்கைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற தீராத ஆசையைத் தணித்தது. புதிய ஒலிம்பிக்கின் கதையை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

— நா. ஸ்ரீராம் (8002),
வெங்கடாத்ரி அகரம்.

கவிதை பிறந்த கதை

'இன்னொரு நாள் வருமா?'

தம்பி சீனிவாசன்



கவிஞர் தம்பி சீனிவாசன் அவர்கள் குழந்தை உள்ளம் படைத்தவர்; குழந்தைகளுக்காக நிறைய எழுதி வருபவர்; குழந்தை நூல்களைப் படைத்தவர்; படைத்துக் கொண்டிருப்பவர். தற்போது புதுதில்லியில், சாகித்திய அகாடமியின் உதவிச் செயலாளராகப் 'பணிபுரிந்து வருபவர். அவர் தம் கவிதை பிறந்த கதையை இங்கே கூறுகிறார்:

மயிலாப்பூர் திருக்குளத்துத் தெய்வம் பற்றி ஒரு பாடல் எழுதினேன். அரைப் பக்கம் போட்டோவுடன் அதனை வெளியிட்டார் 'கதிர்' ஆசிரியர் திரு.துமிலன்.

'ஐப்பசி முழுதும் அடை மழையாம்;
அதன்பின் சிலநாள் குளிர் பனியாம்;
தைப்பூசத்தில் தெப்ப விழா
தாக்கும் குளிரைப் போக்கும் விழா'

என்று தொடங்கி, தெப்பக் காட்சிகளை விவரிக்கும் பாடல் இது.

'தெப்பம் இழுக்கலாம் ஒருசுற்று
தெப்பச் சவாரி ஒருசுற்று
தெப்ப விழாவே வேடிக்கை
தெப்ப விழாவே ஆனந்தம்!'

என்று இது முடியும்.

'சுதேசமித்திரன்' வார இதழில், ஓர் ஆண்டு என்னை, குழந்தைகள் தினச் சிறப்பிதழ் தயாரிக்கப் பணித்தார்கள். அவசர அவசரமாகச் செய்ய வேண்டியிருந்தது. கதை, கட்டுரை, பாடல் என்று பல பகுதிகளைத் தயாரித்தபின், சில போட்டோக்களும், சேர்த்தேன். முன் ஆண்டில் தேர்த் திருவிழாவில், நானே எடுத்த ஒரு படம். சின்னஞ்சிறியதாக ஒரு பாடலுடன் அதை வெளியிட்டேன். அவசரத்தில் எழுதிய அந்தப் பாடல், எனக்குப்பிடித்தஒருபாடலாகஅமைந்தது. அந்தப் பாடல்தான், 'வடம் பிடிக்க வா!'



''ஒருவர் மட்டும் தள்ளின் இத்தேர்
ஓரடி கூடப் பெயராதே.
இருபுறமும் பலர் ஒற்றுமை யாக
இழுத்தால் ஓடும் அதிகவேகம்!

''ஊரில் நாட்டில் உள்ளோர் எல்லாம்
ஒற்றுமை வாழ்வு பழகிடவே
தேரில் அமர்ந்தான் ஈசன் இன்றே
தேர்வடம் இழுக்க வா, வா, வா!''

கவிஞர் திரு சோமு அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி சென்று, இலக்கிய உரைகளைக் கேட்டு அனுபவிப்பேன்.

அவரது குமாரி ராஜி மிகச் சிறு குழந்தையாக இருந்தபோது, மரச் செப்புகளை வைத்து விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். திரு சோமுவுக்காகக் காத்திருந்த போது குழந்தையிடம் 'அடுப்பு வேணும், துடுப்பு வேணும்' என்று விளையாடிக் கொண்டிருந்தேன். பின்னர் இந்த அனுபவம் பாடலாயிற்று —

''அடுப்பு வேணும் துடுப்பு வேணும்;
அண்டா செம்பு குடமும் வேணும்.

தட்டு வேணும் முறமும் வேணும்;
சட்டி வாளி கிண்ணம் வேணும்.

அரிசி வேணும் பருப்பு வேணும்;
அல்வா ஆக்க சீனி வேணும்.

பெட்டி வேணும் எல்லாம் வைக்கப்
பெரிய சொப்புப் பெட்டி வேணும்!''

தில்லியில், அண்டை வீட்டில் ஒரு பஞ்சாபிச் சிறுவன், பள்ளிக்கூடத்தில் தமிழ்ப்பாடம் எடுத்துக் கொண்டான். ஐந்து, ஆறாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூல் அவனுக்குப் பிடிபடவில்லை. என்னிடம் வீட்டில் படிக்க வந்தான்; முதலில் இருந்து கற்க வேண்டிய நிலையில் இருந்தான் அவன். எளிய சொற்களைக் கொண்டு, வீட்டில் பேசப் பழக்கினேன். சின்னச் சின்னப் பாடல்கள் தயாரித்து, ஆனந்தமாகப் பாட வைத்தேன். அதிலே ஒன்றுதான், 'தில்லி பார்க்க வா!' என்பது.



''தில்லி பார்க்க வேணும்
தில்லி பார்க்க வேணும்.
தில்லி பார்க்க வருவதானால்
எப்போ வர வேணும்?''

என்று வெளியூர்க் குழந்தைகளைக் கேட்க, தில்லிப் பையன் பதில் சொல்வதாக, பன்னிரு மாதங்களையும் வைத்துப் பாடிய பாடல் அது.

''தில்லி பார்க்க வருவதானால்
நவம்பரிலே வா
ராமலீலா காணச் சேரும்
கூட்டம் பார்க்க வா!''

என்பது போல, மாதம் ஒரு நிகழ்ச்சி அமைத்த பாடல். இறுதியில்,

''தில்லி பார்க்க வருவதானால்
எந்த நாளும் வா.
சுற்றிக் காட்ட நான் இருக்க
எந்த நாளும் வா!''

என்று முடியும் இந்தப் பாடலை, எனது சீடப் பிள்ளை ரசித்துப் பாடினான்.

'பொழுதை வீணாக்காதீர்!' என்று என் குழந்தைகளுக்கு அடிக்கடி சொல்லி வருவேன். இந்தக் கருத்து மனத்தில் பதிய எழுதியதே 'மீண்டும் வருமா?' என்ற பாடல்:

அன்றொரு நாள் ஆடுகையில்
நான் இழந்த பந்து
பின்னொரு நாள் தேடுகையில்
மீண்டும் வந்ததுண்டு!

அன்றொரு நாள் பாடுகையில்
அடி மறந்த பாடல்
பின்னொரு நாள் நினைவினிலே
மீண்டும் வந்ததுண்டு!

அன்றொரு நாள் போட்டியிலே
நான் இழந்த நண்பன்
பின்னொரு நாள் சேர்ந்திடவே
மீண்டும் வந்ததுண்டு!

அன்றொரு நாள் சோம்பலிலே
நான் இழந்த காலம்
என்னருமை வாழ்க்கையிலே
இன்னொரு நாள் வருமா?''


இதை எழுதிய போது, என் மகன் ராஜாவின் எட்டாவது பிறந்த நாள் சமயம். ''இதுவே உன் பிறந்த நாள் பரிசு!'' என்று அவனிடம் நான் எழுதிய தாளைக் கொடுத்தேன்.


பேட்டி: பி. வி. கிரி.

விசித்திரச் செய்திகள்

நத்தைகள் ஓட்டப் போட்டி!

ஸ்பெயின் நாட்டில் நத்தைகளின் ஓட்டப் போட்டி நடந்தது. 79 நத்தைகள் கலந்து கொண்டன. ஒரு சிறிய கல்லையும் இழுத்துக் கொண்டு வெற்றிக் கோட்டை நோக்கி ஓட வேண்டும் என்பது போட்டியின் விதி. இந்தப் போட்டியில் ஹெர்குலிஸ் என்ற நத்தை 240 கிராம் எடையுள்ள கல்லை இழுத்துக் கொண்டு 42.5 செ.மீ. தூரத்தை 10 நிமிடங்களில் கடந்து முதல் பரிசைப் பெற்றது! சில நத்தைகள் கூட்டை விட்டே வெளி வரவில்லை; சில நத்தைகள் பின்பக்கம் திரும்பி நகர்ந்தன!






ஒட்டு வீரர்!


நியூஜிலாந்து நாட்டில் 'போன் நோபிள்சன்' என்பவர் 4 விநாடிகளில் 170 அஞ்சல் தலைகளைத் தமது நாக்கின் எச்சிலின் உதவியால் ஒட்டி சாதனை புரிந்திருக்கிறார். இந்தச் சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்று விட்டது!

ஊரின் ஜனத்தொகை 6 பேர்கள்



தெற்கு ஆஸ்திரேலியாவில் வில்லியம் இரிக் என்னும் ஊர் இருக்கிறது. இதன் மொத்த ஜனத்தொகை 6 பேர்கள் மட்டுமே! ஆனால் இவர்கள் வளர்க்கும் ஆடுகள் 300. இந்த 6 பேர்களுக்குத் தனியார் டெலிபோன் துறையினர் டெலிபோன் வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். இதற்கு ஆன செலவு ரூ. 10 லட்சம் டாலர்!

ஒட்டக ஓட்டப் போட்டி




கோயில் பட்டியில் ஒட்டகப் போட்டி நடந்தது. 5 ஒட்டகங்கள் கலந்து கொண்டன. மும்தாஜ் என்ற பெண் ஒட்டகம் முதல் பரிசையும், பாட்சா என்ற ஒட்டகம் இரண்டாம் பரிசையும், ஜாஹீர் என்ற ஒட்டகம் மூன்றாம் பரிசையும் பெற்றன. முதல் பரிசுத் தொகை ரூ. 301.

விமானத்தில் சிறுவன் துப்பாக்கி!



அமெரிக்காவிலிருந்து பிரான்சுக்கு ஒரு விமானம் புறப்பட்டுச் சென்றது. விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது 5 வயதுச் சிறுவன் ஒருவன் தன்னிடம் இருந்த துப்பாக்கியை எடுத்தான். விமானத்தில் இருந்த பயணிகள் கதிகலங்கிக் கூச்சலிட்டார்கள். ஒரு பணிப்பெண் மிகவும் துணிச்சலாகப் போய் அந்தச் சிறுவனுக்கு ஐஸ்கிரீம் கொடுத்து அந்தத் துப்பாக்கியை வாங்கினாள். பிறகுதான் தெரிந்தது அது ஒரு விளையாட்டுத் துப்பாக்கி என்று!

குண்டுச் சிறுவர்கள்!



பீகார் மாநிலத்தில் விஷ்ணுகன் என்பவருக்கு 9 வயதிலும் 14 வயதிலும் இரு மகன்கள் இருக்கிறார்கள். ஆனால் மாதத்திற்கு 5 கிலோ எடை வீதம்ஒவ்வொருவரும்இப்போது 100 கிலோஎடையைத் தாண்டி விட்டார்கள். இது எதனால் என்பதைப் பற்றி ஆராய்வதற்காக இரு சிறுவர்களையும் இப்போது தில்லியில் உள்ள அகில இந்திய விஞ்ஞானக் கழக மருத்துவ மனைக்கு அனுப்பியிருக்கிறார்கள்!

கரப்பான் பூச்சிப் போட்டி!



நியூயார்க்கில் மிகப்பெரிய கரப்பான் பூச்சியைக் கொண்டு வருகிறவர்களுக்குப் பரிசளிப்பதாக ஒரு போட்டி அறிவிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான பேர்கள் பல்வேறு வித கரப்பான் பூச்சிகளைக் கொண்டு வந்தார்கள். அவற்றில் ஒரு கட்டடக் காண்ட்ராக்டர் கொண்டு வந்த மிகப் பெரிய கரப்பான் பூச்சிக்கு ரூ. 3000 முதல் பரிசு கிடைத்தது.!

பழமொழிப் புதிர் விடை:

புதிர் — 43: யானை வாயில் போன கரும்பு.

புதிர் — 44: திருடனுக்குத் தேள் கொட்டினாற் போல.

பூந்தளிர்க் கதையரங்கம்



பூங்குளம் என்ற ஊரில் பொன்னன் என்ற பணக்காரர் வசித்து வந்தார். அவருடைய பெயரைப் போலவே அவருடைய மனமும் இருந்தது. எல்லோருக்கும் மிகவும் அன்புடையவராகவும், வள்ளலாகவும் திகழ்ந்தார்.

பொன்னன் மிகுந்த கடவுள் பக்தியுடையவர். அவர் தம் ஊருக்கு அருகிலுள்ள சந்தைக்குச் சென்று, தமக்கும், தம் வீட்டிற்கும் தேவையான பொருட்களை ஒவ்வொரு வாரமும் வாங்கி வருவார். அந்த ஊருக்கும், சந்தைக்கும் இடையே ஒரு தென்னந் தோப்பு இருந்தது. அதைக் கடந்தே செல்ல வேண்டும். காலையில் சென்றால் மாலையில்தான் திரும்புவார்.

அவ்வாறே அன்றும் அவர் சென்று திரும்பும் பொழுது நன்கு இருட்டி விட்டது. மழை வரும் அறிகுறியும் தோன்றியது. சிறிது நேரத்தில் மழை வந்துவிடும் என்ற நினைப்புடனும், இருட்டின் பயத்திலும் வேகமாக நடந்தார். அப்பொழுது "யாரது? நில்!" என்ற குரல் அவரது வேகத்துக்குத் தடையாகக் கேட்டது. அதனால் அவர் நின்று சுற்று முற்றும் பார்த்தார்.

அந்தக் குரலுக்குரியவன் துப்பாக்கியைக் காட்டி, "மரியாதையாக உன்னிடம் உள்ள பணத்தையும், பொருட்களையும் கொடுத்துவிடு" என்று மிரட்டினான். அப்பொழுது மழை மிகவும் பலமாகப் பெய்து கொண்டிருந்தது; காற்றும் பலமாக அடித்தது.

பொன்னன் கடவுளிடம் வேண்டிக் கொண்டார்.

"நான் மூன்று எண்ணுவதற்குள், கொடுத்துவிட வேண்டும். இல்லையேல்...?" என்று கூறி, திருடன் எண்ணத் தொடங்கினான்.

"ஒ... ன்... று...
இ... ர... ண்... டு...
மூ... ன்... று..."

அவன் துப்பாக்கி விசையை இழுக்க முயன்ற போது, தொப்பென்று ஒரு சப்தம் கேட்டது. மறு விநாடி திருடனின் கையிலிருந்த துப்பாக்கி பொத்தென்று தரையில் விழுந்தது. உடனே பொன்னன் கீழே குனிந்தார்; அங்கே கிடந்த துப்பாக்கியைக் கையில் எடுத்து, அவனைப் பார்த்துக் குறி வைத்தார்.

அவர் தன்னைச் சுட்டு விடுவாரோ என்ற எண்ணத்தில் அவன் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்,' என்று எண்ணி ஓடத் தொடங்கினான்.

திருடன் துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய போது, காற்று பலமாக வீசியதால் அவர்கள் நின்ற இடத்தி

லிருந்த தென்னை மரத்திலிருந்து விழுந்த தேங்காய்தான் துப்பாக்கியைத் தட்டி விட்டது என்பதை அறிந்த பொன்னன், கடவுளின் அருளை எண்ணி மகிழ்ந்தவாறே வீடு வந்து சேர்ந்தார். மழையும் ஓய்ந்தது!

பகை தீர்த்த வெள்ளம்



நல்லானும் செல்லானும் அண்டை வீட்டுக்காரர்கள். அண்டை நிலக்காரர்களும்கூட. நல்லான் எல்லார்க்கும் நல்லான். செல்லான் நல்லவர் வழிச் செல்வான்! இருவரும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் சேர்ந்தே ஓய்வு நேரங்களைக் கழிப்பார்கள். வேலைகளிலும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வார்கள்.

ஒருநாள் தோட்டத்திலிருந்த நல்லானுடைய கன்றுக்குட்டி கயிற்றை அறுத்துக் கொண்டு, செல்லானுடைய நிலத்தில் புகுந்து பயிரை மேய்ந்து சேதப்படுத்தி விட்டது. அதைக் கண்ட செல்லானின் மனைவி வாயில் வந்தபடி கோபமாகத் திட்டினாள். அன்று முதல் இரு குடும்பங்களுக்கும் பகை மூண்டது. ஒருவர் முகத்தில் ஒருவர் விழிப்பதில்லை என்ற நிலை ஏற்பட்டது.

ஐப்பசி மாதம், அடை மழைக் காலம். மூன்று நாட்களாக இரவும் பகலும் விடாமல் மழை பெய்தது. ஆறு, குளங்கள் நிரம்பி வழிந்தன. நான்காம் நாள் மழை சிறிது நின்றது. செல்லான் தன் தோட்டத்தைப் பார்க்கப் போய்விட்டான். அப்பொழுது நல்லான் வீட்டிலிருந்தான். அந்த ஊருக்கு அருகில் ஒரு பெரிய ஏரி இருந்தது. அது கரையை உடைத்துக் கொண்டு தண்ணீர் ஊருக்குள் புகுந்து விட்டது. அதோடு ஆற்று வெள்ளமும் சேர்ந்து கொண்டது. தெருக்களெல்லாம் நீரில் மூழ்கிவிட்டன. வீடுகளிலும் நீர் புகுந்துவிட்டது.


மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து முக்கிய பொருள்களை மட்டும் எடுத்துக் கொண்டு மேடான இடங்களுக்கு ஓடிவிட்டனர். நல்லானும், தன் குடும்பத்தினரை அனுப்பிவிட்டு, கடைசியாக நகைகளும், பணமும், துணிமணிகளும் அடங்கிய ஒரு பெட்டியைத் தூக்கிக் கொண்டு தெருவில், மார்பளவு நீரில் நடந்தான். அப்போது, அடுத்துள்ள செல்லானின் வீட்டில் குழந்தையின் அழுகுரல் கேட்டது. செல்லானின் மனைவி தொட்டிலில் தூங்கிய குழந்தையை மறந்துவிட்டு, கிடைத்த பொருள்களுடன் முன்பே மேட்டிற்கு ஓடிவிட்டாள். அங்கு சென்ற பிறகுதான் குழந்தையின் நினைவு வந்தது. திரும்பவும் வர முடியாமல் பதறித் துடித்தனர். செல்லானும் வீடு திரும்ப முடியாமல் தோட்டத்திலேயே தங்கி விட்டான்.

குழந்தையின் அழுகுரலைக் கேட்ட நல்லான் ஒரு கணம் சிந்தித்தான். உடனே, பெட்டியை நீரில் விட்டு விட்டுச் செல்லானின் வீட்டிற்குள் சென்றான். குழந்தையை எடுத்துக் கொண்டு மேட்டிற்கு வந்தான். அழுது கொண்டிருந்த செல்லானின் மனைவி குழந்தையைக் கண்டதும், ஓடி வந்து நல்லானின் கால்களைப் பற்றிக் கொண்டு கதறினாள். அப்போது அங்கு வந்து சேர்ந்த செல்லானும் நல்லானுக்கு நன்றி கூறினான். ஊர் மக்களும், அவனது நல்ல உள்ளத்தைப் புகழ்ந்தனர்; 'பகையைத் தீர்த்தது வெள்ளம்' என்று பாராட்டினர்.

வெள்ளம் வடிந்தது; மக்கள் வீடு

திரும்பினர்; தங்கள் பொருள்களைத் தேடிக் கிடைத்தவைகளை எடுத்தனர்; வீடுகளைச் செப்பனிட்டனர். சில நாட்களுக்குப் பிறகு செல்லான் புதர்களுக்கிடையே ஒரு பெட்டியைக் கண்டெடுத்தான். பெட்டியின் மேல் நல்லானின் பெயர் இருந்தது. செல்லான் பெட்டியை எடுத்து வந்து நல்லானிடம் கொடுத்தான். நல்லான், தான் செய்த உதவி வீண்போகவில்லை என்று எண்ணிச் செல்லானுக்கு நன்றி கூறினான்.

கர்வம்பிடித்த குயில்



G.சுஜாதா. (17156)

அந்தக் குயில் நெடு நாட்களாகக் கர்வம் கொண்டிருந்தது. 'எனக்குத் தான் இனிய குரல் இருக்கிறது; என்னை எவராலும் மிஞ்ச முடியாது' என்று.

குயில் எப்பொழுதும் அம்மாமரத்துக் கிளை ஒன்றில் அமர்ந்து தேனினும் இனிய குரலில் பாடிக் கொண்டிருக்கும். அப்பக்கம் வரும் பிற விலங்குகளைத் தன்னைப் போல் பாடச் சொல்லிக் கேலி செய்யும்.

ஒரு நாள் அவ்வழியே யானை ஒன்று வந்து கொண்டிருந்தது. குயில் அதைப் பார்த்து, ''யானை அண்ணா! நீங்க ஒரு பாட்டுப் பாடுங்க'' என்றது. உடனே யானை, தன் கடுங் குரலில் பிளிறியது. குயில் கைகொட்டிச் சிரித்து அதைக் கேலி செய்தது. அவமானமுற்ற யானை அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டது.

சிறிது நேரத்தில் காக்கை ஒன்று அம்மாமரக் கிளையில் வந்து அமர்ந்தது. குயில் காக்கையைப் பாடச் சொல்லி வேண்டிக் கொண்டது. கரகரத்த குரலில் காக்கை கரையவே, குயில் அதையும் பழித்துக் கேலி செய்தது. அதுவும் வெட்கமுற்று அங்கிருந்து பறந்து சென்றுவிட்டது.

இவ்வாறு அன்று முழுவதும் குயில் அவ்வழியாகப் போவோர் வருவோரையெல்லாம் கேலி செய்து அவமானப்படுத்தி அனுப்பியது.

குயிலினால் அவமானப்படுத்தப்பட்ட எல்லா விலங்குகளும், பறவைகளும் ஒன்று கூடி ஒரு மாநாடு போட்டன. 'எப்படியாவது குயிலின் கொட்டத்தை அடக்கி, அதன் கர்வத்தை அடக்க வேண்டும்' என்ற தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

ஒவ்வொருவரும் தத்தமது யோசனையைக் கூற, இறுதியில் தந்திரம் மிக்க நரியின் யோசனை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதைச் செயல்படுத்தும் எல்லா ஏற்பாடுகளையும் விலங்குகளும், பறவைகளும் செய்யலாயின.

ஒரு வாரம் கழிந்தது. காக்கையும், மயிலும் குயிலின் இருப்பிடத்தை நோக்கிச் சென்றன.

அவை குயிலிடம், ''குயிலக்கா! குயிலக்கா! இன்று குரங்கண்ணாவின் பிறந்த நாள். அதை வாழ்த்த ஒரு விழாவிற்கு ஏற்பாடு செய்துள்ளோம். அவ்விழாவில் நீயும் தவறாமல் கலந்து கொண்டு குரங்கண்ணாவை வாழ்த்த வேண்டும். விழாவில் நீ நிறையப் பாட்டுக்கள் பாடவேண்டும்,'' என்று வேண்டிக் கொண்டன.

விழா நாளன்று ஒரு மரத்தடியில் அனைத்து விலங்குகளும், பறவைகளும் கூடின. கடைசியில் குயில் மிகுந்த ஒய்யாரமாக நடந்து வந்தது. குயிலை அனைத்தும் கைதட்டி ஆரவாரம் செய்து வரவேற்றன.

நரி எழுந்தது. ''சபையோர்களே! முதலில் சாப்பாட்டுக் கச்சேரி நடை

பெறும். பிறகுதான் பாட்டுக் கச்சேரி'' என்றது.

உடனே இலைகள் போடப்பட்டு உணவு வகைகள் பரிமாறப்பட்டன. விருந்தினர் அனைவரும் நன்கு சுவைத்து உண்டார்கள். கடைசியில், திட்டப்படி சூப் வழங்கப்பட்டது. குயிலுக்கு எலும்புத்துண்டுகளுடன் கூடிய, சூப் தாராளமாக வழங்கப்பட்டது. குயில், ''நன்றாக இருக்கிறது'' என்று சொல்லிச் சூப்பை ஒரு பிடிபிடித்தது.

ஆனால், ஐயோ பாவம்! ஒரு சிறிய எலும்புத் துண்டு குயிலின் தொண்டையில் சிக்கிக் கொண்டது. திணறிய குயில் பலமாகச் செருமவே, எலும்புத் துண்டு எசகுபிசகாக அதன் தொண்டையில் சிக்கிக் கொண்டு விட்டது. குயில் வேதனை தாங்க முடியாமல் அலறியது. நரி அதனருகே வந்து அனுதாபம்தெரிவித்துக்கொண்டது. பிறகு நரி கொக்கைக் கூப்பிட்டுக் குயிலுக்கு மருத்துவம் செய்யச் சொல்லியது. கொக்கு, தன் கூர்மையான அலகால் எலும்புத் துண்டை வெளியில் எடுத்தது.

விழாவின் இறுதி நிகழ்ச்சியான பாட்டுக் கச்சேரிக்குரிய நேரம்வந்தது. குயில் பாடுவதற்காக மேடை மீது ஏறியது. தொண்டை வலித்தது. ஆயினும், அதைக் காட்டிக் கொள்ளாமல் கர்வத்துடன் பாட ஆரம்பித்தது.

ஆனால், பாட்டு வரவில்லை. கனைத்துச் செருமிப் பார்த்தும் குரல் எழவில்லை. இருப்பினும், குயில் முயன்று பாடியது. பாதி சத்தமாகவும், பாதி 'தஸ்புஸ்' என்றுமே ஓசை வந்தது. எவ்வளவு முயற்சி செய்தும் குயிலினால் பாட முடியவில்லை.

இதைக் கண்ட சபையோர் 'ஆய், ஊய்' என்று கத்திக் கைகொட்டிக் கேலி செய்தனர். குயிலுக்குப் பெருத்த அவமானமாகப் போய்விட்டது.

பிறகுதான் குயிலுக்குத் தன் தவறும், பிற விலங்குகளின் திட்டமும் புரிந்தன. உடனே, அது சபையோரைப் பார்த்து உடைந்த குரலில் கூறியது:

''நண்பர்களே! நீங்கள் என்னை மன்னித்து விடுங்கள். நான் என் குரலில் உள்ள இனிமையினால் கர்வம் கொண்டு உங்களை எல்லாம் கேலி செய்தேன். இழிவு படுத்தினேன். இனிமேல் இவ்வாறு நான் செய்ய மாட்டேன். நான் திருந்தி விட்டேன்.''

கர்வம் குலைந்து, உள்ளம் திருந்திய குயிலைப் பாராட்டிய விலங்குகள் ''உன்னைத் திருத்தவே, நாங்கள் இப்படி ஒரு நாடகமாடினோம்'' என்று கூறின.

அன்று முதல் குயில் சிறிதும் கர்வமின்றித் தன் இனிய குரலால் பாடி அனைவரையும் மகிழ்வித்ததுடன் அவர்களுடன் கூடி இன்பமாக வாழ்ந்தது.



"உங்கம்மாவுக்கு தலைவலி வந்தா நீ என்ன செய்வே?"

"வீட்டுக்குள்ளே கூச்சல் போட்டு விளையாடாமே வெளியே போய்க் கூச்சல் போட்டு விளையாடுவேன்!"

—குமார்



"ஏண்டா இனிமே ஸ்கூலுக்கும் போக மாட்டேன்னு சொல்றே? அந்த ஸ்கூலையும், டீச்சரையும் பிடிக்கலையா?"

"ஸ்கூலும், டீச்சரும் பிடிக்குது! டீச்சர் கையிலேயிருக்கிற பிரம்பைத்தான் பிடிக்கலே!"

— குமார்

கேளுங்கள் சொல்கிறோம்

* சரஸ்வதி தேவியை இந்துக்கள் மட்டும் தான் வணங்குகிறார்களா, அல்லது மற்ற மதத்தவரும் வணங்குகிறார்களா?

— அழ. ராமு, தில்லைநகர், திருச்சி.

இந்துக்கள் மட்டுமன்றி பௌத்தர்கள், சமணர்கள் ஆகியோரும் சரஸ்வதியை வணங்கி வந்துள்ளனர். மணிமேகலை என்பது பௌத்த சமயக் காவியம். அதில் அதன் ஆசிரியர் கலைமகளை 'சிந்தாதேவி' என்று குறிப்பிடுகிறார்.

* ஷேக்ஸ்பியர் மொத்தம் எத்தனை நாடகங்களை எழுதினார்? அவைகளில் சிறந்த நாடகங்கள் என்ன என்ன?

— ப. சிந்தாமணி, சென்னை — 17.

மொத்தம் 37 நாடகங்களை அவர் எழுதினார். இன்ப முடிவுடைய நாடகங்கள், துன்ப முடிவுடைய நாடகங்கள், வரலாற்று நாடகங்கள் என்று அவற்றை மூன்று வகையாகப் பிரிக்கலாம். இன்ப முடிவுடைய நாடகங்களில் வெனிஸ் வர்த்தகன், (The Merchant of Venice), துன்ப முடிவுடைய நாடகங்களில், ஹாம்லெட் (Hamlet), வரலாற்று நாடகங்களில் ஆங்கில மன்னர்களைப் பற்றிய நாடகங்கள் புகழ்பெற்றவை.

* உலகிலே மிகப் பெரிய நதி நைல் நதியா? அல்லது அமெஸான் நதியா?

— ஆ. சரவணன், பண்ருட்டி — 6.

அமேஸான் நதிதான். நைல் நதி இதைவிட நீளமானதுதான். ஆனாலும், அமேஸானில் பாயும் தண்ணீரைவிடக் குறைவாகவே நைல் நதியில் பாய்கிறது.

* காற்றுக்கு எடை உண்டு என்கிறார்களே, அதை எப்படிக் கண்டுபிடிப்பது?

— சி. ரஞ்சனி, திருச்சி — 2.



காற்று இல்லாத பலூனையும், காற்று ஊதிய பலூனையும் நிறுத்துப் பார்த்தால், காற்று ஊதிய பலூனின் எடை அதிகமாயிருக்கும். இதிலிருந்தே காற்றுக்கு எடை உண்டு என்பதை அறிந்து கொள்ளலாம்.

* எங்கள் ஊர்க் குளத்திலுள்ள தாமரையின் அடிப்பகுதியில் உள்ள தாமரைத் தண்டைத் தோண்டி எடுத்துப் பச்சையாகவும், அவித்தும் சாப்பிடுகிறார்கள். இதனால், உடம்புக்கு என்ன நன்மை, தீமை?

— க. எழிலன், பேரங்கியூர்.

தாமரைத் தண்டை மட்டுமல்ல; அதன் கிழங்கு, கொட்டை முதலியவற்றையும் கூடச் சிலர் உணவாகப் பயன்படுத்துகின்றனர். தீமை இருப்பதாகத் தெரியவில்லை. தாமரைப் பூவும் விதையும் மருந்தாகப் பயன்படுகின்றன.

* தமிழில் முதன் முதலாகக் குழந்தைகளுக்குக் கதை, கவிதை எழுதியவர் யார்?

— எம். சிவகுமார், சென்னிமலை.

குழந்தைகளுக்குப் பத்திரிகைகளும், புத்தகங்களும் தோன்றும் முன்பே பல கதைகளும் பாடல்களும் நம் நாட்டில் இருந்து வந்தன. வாய் மொழியாக வழங்கி வந்த அவற்றைக் கூறியவர்களின் பெயர்களோ, பிறந்த ஊர்களோ, வாழ்ந்த காலமோ யாருக்கும் தெரியாது.

* கை, கால் எலும்பு முறிந்தால், பிளாஸ்டர் ஆப் பாரிஸ் வைத்துக் கட்டுகிறார்கள். வேறு எது, எதற்கு இது உபயோகப்படுகிறது?

— பி. ராமசந்தர், வேதாரண்யம்.

உடைந்த பீங்கான் கருவிகளை இதனால் ஒட்டலாம்; செயற்கைப் பற்கள் கூடச் செய்ய இது உதவுகிறது. சுவரில் ஏற்படும் பிளவுகளைச் சரி செய்யவும் பயன்படுத்துகின்றனர். இன்னும் பல வார்ப்பு வேலைகளுக்கும் இதைப் பயன்படுத்துகின்றனர்.

* 'படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில்' என்று கூறுகிறார்களே, இதன் அர்த்தம் என்ன?
— த. இராஜசேகரன், குறிஞ்சிப்பாடி.

ஒருவர் சொல்வது ஒன்றாக இருக்கும்; செய்வது அதற்கு நேர்மாறாக இருக்கும். சொல்லும் செயலும் எதிர்மாறாக இருப்பதைத்தான் அந்தப் பழமொழி சுட்டிக் காட்டுகிறது.

* யானைக்குப் பற்கள் உண்டா? இல்லை, தந்தம்தான் அதன் பற்களா?
— என். ஜெயஸ்ரீ, திருவாரூர்.

யானைக்குப் பற்கள் உண்டு. அவற்றை அரவைப் பற்கள் அல்லது கடைவாய்ப் பற்கள் என்பார்கள். ஒவ்வொரு தாடையின் ஒவ்வொரு பக்கத்திலும் ஆறு அரவைப் பற்கள் இருக்நம். ஆனால், கோரைப் பற்கள் என்னும் நாய்ப் பற்கள் யானைக்கு இருப்பதில்லை.

* 'துப்பறியும் சாம்பு' என்ற புத்தகத்தை நான் பத்துத் தடவை படித்தேன். மிகவும் சுவையாக இருக்கிறது. இந்தப் புத்தகத்தை எழுதிய 'தேவன்' அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆசை. கூறுவீர்களா?
— என். கிருஷ்ணவேணி, திருச்சி — 2.




அவருடைய இயற்பெயர் ஆர். மகாதேவன். 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் 12 ஆண்டுகள் உதவி ஆசிரியராகவும் 13 ஆண்டுகள் பொறுப்பாசிரியராகவும் பணி புரிந்தவர். 'ஜஸ்டிஸ் ஜகந்நாதன்,' 'லட்சுமி கடாட்சம்,' 'ராஜத்தின் மனோரதம்' போன்ற பல நாவல்களையும் நூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் எழுதியவர். நகைச்சுவை ததும்ப எழுதுவதில் வல்லவர். தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக இரண்டு ஆண்டுகள் விளங்கியவர். 57 — ஆவது வயதில் காலமானார்.

* காந்தியடிகளுக்குத் தமிழ் தெரியுமா? என் அக்காவின் பத்தாம் வகுப்புத் தமிழ்ப் புத்தகத்தில் தமிழ்ச் சிறுவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் இல்லாத போது, காந்தியடிகளே தமிழாசிரியராக இருந்து தமிழ் கற்பித்தார் என்று மு. வ. அவர்கள் எழுதியுள்ளார். இது உண்மையா?
— ச. உமாமகேஸ்வரன், கோவை.

உண்மைதான். காந்திஜிக்கு ஓரளவு தமிழ் தெரியும். அதை வைத்துக் கொண்டு, அவர் ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார்.

* கரியும் வைரமும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்கிறார்களே, அது எப்படி இருக்க முடியும்?
— ப. மாலினி, பழவேற்காடு.



இரண்டும் ஒரே இனத்தைச் சேர்ந்த தாதுக்கள்தான்! இரண்டும் கார்பனின் இரு வேறு வகைகள். பூமியின் ஆழத்திலே உள்ள கரி, அதிகமான வெப்பத்திற்கும், அழுத்தத்திற்கும் உள்ளாகிப் படிவங்களாக மாறுகிறது. பூமியைத் தோண்டும் போது, அடியில் நீலநிறப் பாறைகள் அபூர்வமாகத் தென்படும். அந்தப் பாறைகளை வெட்டி எடுத்து உடைக்கிறார்கள். அப்போது அதில் உள்ள வைரம் தூளாகாமல் உறுதியாக இருக்கும். அதைத் தனியாகப் பிரித்து எடுத்து விடுவார்கள். வைரத்தை வேறு எதைக் கொண்டும் கீற முடியாது. வைரத்தை வைரத்தால்தான் கீற முடியும். அமிலத்தில் இது கரையாது. ஆனால், நெருப்பிலே போட்டால், கரியாகிவிடும்! அந்தக் கரியை கிராபைட் (Graphite) என்பார்கள்.

* நாம் இப்போது பல மாடிக் கட்டடங்களில் உபயோகிக்கும் லிஃப்ட் (Lift) யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
— பி. விஜயலட்சுமி, பெரணமநல்லூர்.

எலிஷா ஜி. ஓடிஸ் (Elisha G. Otis) என்ற அமெரிக்கர் 1852 — இல் கண்டுபிடித்தார்.

* தற்போது நம் தேசத்தில் எத்தனை பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன?
— சி. குருபாதம், சிவகங்கை.

159 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன.

ஒலிம்பிக்ஸ்

2. நவீன ஒலிம்பிக்கின் கதை...

ஜானகி மணாளன்

குழந்தைகளே! பழைய ஒலிம்பிக் பற்றித் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா? கி.பி. 393 — இல் நடந்தது தான், அதன் கடைசி ஒலிம்பிக். அதன் பிறகு ஒலிம்பியா நகரம் அழிந்து பூமிக்குள் புதையுண்டு விட்டது!

1875 — ஆம் ஆண்டு அவ்விடத்தைத் தோண்டிப் பார்க்கத் தொடங்கினார்கள். பழைய ஒலிம்பிக் சின்னங்கள் கிடைத்தன. ஏறத்தாழ அதே சமயத்தில், பிரான்சு நாட்டில் ஓர் அறிஞர் பியரேதி குபர்தின் என்று பெயர். பிரெஞ்சுக் கோமகன். ஒலிம்பிக் பற்றிக் கேள்விப்பட்டார். அதைப் புதுப்பிக்க விரும்பினார். அத்துடன் அதை ஒரு சர்வதேச விளையாட்டாகவும் ஆக்கினால்என்ன என்று நினைத்தார். அதைச் செயல்படுத்த 1894 — இல் சர்வதேச் காங்கிரஸ் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற 12 நாடுகள் அதில் கலந்து கொண்டன. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை வெவ்வேறு நாடுகளில் ஒலிம்பிக்கை நடத்துவது என்று முடிவு செய்தார்கள். சர்வதேச ஒலிம்பிக் சங்கம் என்று ஒன்றை ஏற்படுத்தினார்கள். குபர்தின்தான் அதன் ஸ்தாபகர். 1937 — இல், தாம் இறக்கும் வரையில் அதன் தலைவராக இருந்தார்.

குபர்தினின் முயற்சி வெற்றி பெற்றது. ஒலிம்பிக் பந்தயங்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு விட்டன. ஆண்டு 1896. அதுதான் நவீன ஒலிம்பிக்கின் முதல் ஒலிம்பிக். அது லீப் வருடம். அதன் பிறகு, நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை, ஒவ்வொரு லீப் வருடத்திலும் ஒலிம்பிக் நடைபெற்று வருகிறது. அதற்குக் காரணம் குபர்தின். எனவே அவர்தாம் 'நவீன ஒலிம்பிக்கின் தந்தை!'

அதன் பிறகு இதுவரையில் 23 ஒலிம்பிக்குகள் நடந்து விட்டன. சியோலில் நடக்கப் போவது 24 ஒலிம்பிக்!

குழந்தைகளே! நடந்து முடிந்த அந்த 23 ஒலிம்பிக் பந்தயங்களின் முக்கிய நிகழ்ச்சிகளைத் தெரிந்து கொள்ள ஆர்வம் பொங்குகிறது அல்லவா?

இதோ நவீன ஒலிம்பிக்கின் கதை! படித்து அறிந்து கொள்ளுங்கள்.

ஒன்றாவது — ஏதென்ஸ் ஒலிம்பிக்:

ஆண்டு 1896. ஏப்ரல் 4 முதல் 14 — ஆம் தேதி வரை நடந்தது. 80 ஆயிரம் பார்வையாளர்கள் வந்தனர். முதல் போட்டி ஹாப் ஸ்டெப் அண்டு ஜம்ப் — அதாவது தத்தி—தப்படி—தாண்டுதல். நாள் ஏப்ரல் 6 — ந்தேதி. பங்கு கொண்டோர் 12 பேர். அளவு நாடா பிடித்து தூரத்தை 'அளந்தவர் இளவரசர் ஜார்ஜ்! 14 மீட்டருக்குக் கொஞ்சம் குறைவு. தாண்டியவர் கோனோலி. அவர்தான் நவீன ஒலிம்பிக்கின் முதல் சாம்பியன். கரவொலி விண்ணைப் பிளக்க, மன்னர் முதலாம் ஜார்ஜ் அவருக்குப் புனித ஆலிவ் இலைக் கிரீடத்தைச் சூட்டினார். முதலிடம் அமெரிக்காவுக்கு.

இரண்டாவது — பாரீஸ் ஒலிம்பிக்:

ஆண்டு 1900. துவக்கம் ஜூலை 25 — ஆம் தேதி. அன்று ஞாயிற்றுக்

கிழமை. விடுமுறை நாள். எனவே, சனிக்கிழமையே துவக்குமாறு அமெரிக்கா சொல்லியது. அவ்வாறே சனியன்று துவங்கியது. கூட்டமே இல்லை. எனவே, இறுதிப் போட்டியை ஞாயிறன்று நடத்தினர். அமெரிக்க வீரர்கள் சிலர் வரவில்லை. எனினும், பத்தில் எட்டுப் போட்டிகளில் அமெரிக்கா வென்றது. முதன் முதலில் ஒரே வீரர் நான்கு தங்கப் பதக்கங்களைப் பெற்றார். அவர் அமெரிக்காவைச் சேர்ந்த எல்வின் சி. கிரேஞ்சலின். முதன் முதலாகப் பெண்கள் பங்கேற்கத் தொடங்கியது இதில்தான். போட்டி லான் டென்னிஸ்.

மூன்றாவது — செயின்ட் லூயி ஒலிம்பிக்:

ஆண்டு 1904. அமெரிக்காவில் தூரமான இடம். எனவே, குறைந்த நாடுகளே பங்கேற்றன. பிரிட்டனும் பிரான்சும் வீரர்களை அனுப்பவில்லை. மக்கள் வருகையும் குறைவு. காரணம்; உள்ளூர்த் திருவிழா! பாரிஸ் ஒலிம்பிக் போலத்தான். மொத்தம் 96 தங்கப் பதக்கங்கள். அதில் அமெரிக்காவுக்கு 78 தங்கப் பதக்கங்கள்!

நான்காவது — லண்டன் ஒலிம்பிக்:

ஆண்டு 1908. அந்நாட்டு மன்னர் துவக்கி வைத்தார். விழா நிகழ்ச்சி முடியவில்லை. அதற்குள் மழை. இரண்டு வாரம் தொடர்ந்து மழை பெய்தது. அத்துடன் வேறு பல பிரச்னைகளும் சேர்ந்துகொண்டன. அயர்லாந்து தனித் தீவு. அது பிரிட்டனின் பகுதி என்று கூறி விளையாட்டில் பங்கு பெற வேண்டும் என்றது பிரிட்டன். அத்துடன் அதன் வெற்றி பிரிட்டனின் வெற்றி என்றும் கூறியது. இதை அயர்லாந்து ஏற்கவில்லை. அணிவகுப்பில் பின்லாந்து ரஷ்ய நாட்டுக் கொடியை ஏற்று வரவேண்டும் என்று ரஷ்யா கூறியது. பின்லாந்து மறுத்தது. கொடியே இல்லாமல் அணிவகுத்துச் சென்றது. 400 மீட்டர் இறுதி ஓட்டத்திலும் ஒரு பிரச்னை. இறுதி ஓட்டத்துக்கு நான்கு பேர். அமெரிக்கர் மூவர். பிரிட்டிஷ்காரர் ஒருவர். ஓடும்போது



• லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் சின்னம்.

இடையில் யாரோ ஃபவுல் என்று கத்த, ஓட்டம் தடைப்பட்டது. மீண்டும் ஓடவிட வேண்டும் என முடிவெடுத்தார்கள். அமெரிக்கர்கள் அதை ஏற்கவில்லை. கலந்து கொள்ளாமல் விலகினர். பிரிட்டிஷ் வீரர் ஒருவர் மட்டுமே ஓடித் தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றார்! ஒலிம்பிக் வரலாற்றில் இப்படி நடந்தது முதல் தடவை. பிறகு ஒரு தடவை இவ்வாறு ஒரே நபர் ஓடி வென்றார். லண்டன் ஒலிம்பிக்கில் தினசரி ஏதாவது ஒரு சண்டை. அமெரிக்கரான ரே ஏவ்ரி மொத்தம் 10 ஒலிம்பிக் தங்கப் பதக்கங்கள் பெற்றார். பாரிசில் 3. செயின்ட்லூயியில் 3. 1906 இடைப்பட்ட ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் இரண்டு. 1908 — இல் இரண்டு. ஆக 10. ஒரே நபர் இப்படி 10 பதக்கம் வேறு எப்போதும் பெறவில்லை. இத்தனைக்கும் சிறு வயதில் அவர் கால் ஊனமாயிருந்தவர்!

ஐந்தாவது—ஸ்டாக்ஹோம் ஒலிம்பிக்:

ஆண்டு 1912. அமெரிக்க இந்தியரான ஜிம்தோர்ப் பெண்டாதலின்

மற்றும் டெகாதலின் இரண்டிலும் தங்கப் பதக்கம் பெற்றார். கல்லூரியில் பயிலும் போது பேஸ் பால் விளையாட ஒரு தடவை பணம் வாங்கினாராம். அது பிற்பாடு ஒரு பத்திரிகைச் செய்தி மூலம் தெரிய வந்தது. ஒலிம்பிக் விதிப்படி விளையாட்டைக் காசாக்கக் கூடாது. எனவே, அவரது தங்கப் பதக்கங்கள் திரும்பப் பெறப்பட்டன. இரண்டாவது வந்தவர்கள் முதலாவதாக வந்ததாக அறிவிக்கப்பட்டனர். ஆனால், அவ்விருவரும் அதை வெற்றியாக ஏற்காமல் பதக்கத்தைப் பெற மறுத்துவிட்டனர். அவ்விருவர் நார்வேயின் பாயி மற்றும் ஸ்வீடனின் விஜ்லேண்டர். நீளம் தாண்டுதலில் பின்லாந்து வெற்றி. 6 தங்கப் பதக்கங்கள் பெற்று ஆறாவது இடம். இதுவரை நடந்த ஒலிம்பிக்குகளில் ஒழுங்காக நடந்த முதல் ஒலிம்பிக் இதுவே!

ஆறாவது — பெர்லின் ஒலிம்பிக்:

ஆண்டு 1916. முதல் உலகப் போர் காரணமாகப் போட்டிகள் நடைபெறவில்லை.

ஏழாவது — ஆண்ட்வெர்ப் ஒலிம்பிக்:

ஆண்டு 1920. இதில் 29 நாடுகள் கலந்து கொண்டன. எல்லா நாட்டு வீரர்களும் போட்டி துவங்குமுன் கட்டுப்பாட்டு உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்வழக்கம்இதில்தான் துவங்கியது. ஒலிம்பிக் கொடி ஏற்றப்படத் தொடங்கியதும் இந்த ஒலிம்பிக்கில் தான். முதன் முதலில் மிகக் குறைந்த வயதுக்காரரும், மிக அதிக வயதுக் காரரும் கலந்து கொண்டு வெற்றி பெற்ற ஒலிம்பிக் இது. அமெரிக்காவின் ஆலன் ரிகனுக்கு 12 வயது. ஃப்ரீ ஸ்டைல் நீச்சலில் தங்கப் பதக்கம் பெற்றார். ஸ்வீடனின் ஜோஹான்ஸனுக்கு 72 வயது. 600 மீட்டர் தனி ஆள் ரைஃபில் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றார். அமெரிக்கா தனி வெற்றி பெற முடியாத முதல் ஒலிம்பிக். 27 போட்டிகளில் 8 — இல்தான் வெற்றி. பின்லாந்துக்கும், அதே 8. பின்லாந்துக்கு அது மகத்தான சாதனை! ஐஸ் ஹாக்கி முதன் முதலில் துவக்கப் பட்ட ஒலிம்பிக்கும் இதுவே!

எட்டாவது — பாரிஸ் ஒலிம்பிக்:

ஆண்டு 1924. பாரிசில் இரண்டாம் தடவையாக நடந்த ஒலிம்பிக். ஒருவரே 4 தங்கப்பதக்கம் பெற்ற இரண்டாவது ஒலிம்பிக். பெற்றவர் பாலோ நூர்மீ. ஆனால், 3000 மீ. குழு ஓட்டத்தை ஒலிம்பிக் போட்டியாக ஏற்காததால், அதிகாரபூர்வ வெற்றிப் பட்டியலிலிருந்து நீக்கி விட்டனர். அமெரிக்க நீச்சல் வீரர் ஜான்னி வேஸ்முலர், 100 மீ மற்றும் 400 மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் போட்டியில் புதிய சாதனையுடன் தங்கப் பதக்கம் பெற்றார். 4 × 200 மீ ஃப்ரீ ஸ்டைல் ரிலேயிலும் தங்கம்.

ஒன்பதாவது — ஆம்ஸ்டர்டாம் ஒலிம்பிக்:

ஆண்டு 1928. சென்ற ஒலிம்பிக்கின் சாம்பியன் பாலோ நூர்மீ 10 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் புதிய சாதனை! இந்த ஒலிம்பிக்குக்குப் பிறகு, அவர் ஓய்வு பெற்று, திரைப் படத்தில் நடிக்கச் சென்றார். டார்ஜானாக நடித்துப் பெரும்புகழ் பெற்றார். முதன் முதலாக ஆசிய வீரர் ஒருவர் தங்கப் பதக்கம் பெற்ற ஒலிம்பிக் இது. அவர் ஜப்பானின் மிகிஓ ஓடா. அவர் மும்பாய்ச்சலில் தங்கப் பதக்கம் பெற்றார். முதன் முதலில் பெண்கள் அதலெடிக்கில் பங்கேற்றனர். ஐந்து போட்டிகள் நடத்தப்பட்டன.

பத்தாவது — லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்:

ஆண்டு 1932. அமெரிக்காவில் இரண்டாவது தடவை. அதிக தூரம் என்பதால் பல நாடுகள் பங்கேற்கவில்லை. அமெரிக்கர்கள் 500 பேருக்கு மேல் பங்கேற்றனர். முதன் முதலில் ஒலிம்பிக் கிராமம் அமைக்கப்பட்டது. ஆண்கள் போட்டிகள் 22 — லும், பெண்கள் போட்டிகள் எல்லாவற்றிலும் புதிய சாதனைகள் படைக்கப்பட்டன.

பதினொன்றாவது — பெர்லின் ஒலிம்பிக்:

ஆண்டு 1936. போர் மேகங்களால் சூழப்பட்ட ஒலிம்பிக். ஹிட்லரின்

நேரடி ஈடுபாடு. பிரம்மாண்டமான ஏற்பாடுகள். 3 கோடி டாலர் செலவு. ஒலிம்பிக் மைதானத்தில், 'ஒலிம்பிக் ஜோதி' ஏற்றப்பட்டு, தொடர்ந்து எரியும் வழக்கம் இந்த ஒலிம்பிக்கில்தான் துவங்கப்பட்டது.

முதன் முதலாக, ஒலிம்பிக்கின் பிறப்பிடமான ஒலிம்பியாவில் சூரிய கிரணத்திலிருந்து ஏற்றப்பட்டு, 3000 வீரர்கள் மாறி மாறி 12 நாட்களில் 5768 கி. மீ. ஓடிவந்து பெர்லினில் ஒலிம்பிக் ஜோதியை ஏற்றினர். இப்பழக்கம் தொடர்ந்து இருந்து வருகிறது. முக்கிய ஸ்டேடியத்தில் தினசரி 1 லட்சத்து 10 ஆயிரம் பேர். பங்கு பெற்ற நாடுகளும் வீரர்களும் கூட அதிகம். பிற சிரமங்களும் அதிகம். ஸ்பெயினில் உள்நாட்டுப் போர். எனவே ஒலிம்பிக்கிற்கு வந்த் வீரர்கள் திரும்பிச் சென்றனர். பிரான்ஸ் எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும், வீரர்களை அனுப்பியது. ஃபுட்பாலில் அமெரிக்க வீரர்களுக்கு இத்தாலியரிடம் பலமான அடி. எனினும் ஜெர்மானிய நடுவர்கள் கண்டுகொள்ளவில்லை. இறுதி ஆட்டத்தில் பெரு, ஆஸ்திரேலியாவைத் தோற்கடித்தது. எனினும் மறு ஆட்டத்துக்கு உத்தரவிட்டனர். எனவே, பெரு அதில் கலந்து கொள்ள மறுத்து வெளியேறியது. ஜெர்மனி முதன் முதலாக ஒலிம்பிக் தங்கப்பதக்கம் பெற்றது. அத்துடன் முதலிடமும் பெற்றது. அமெரிக்க நீக்ரோக்கள் தாழ்வாக மதிக்கப்பட்டனர். ஆனால், அவர்கள் சாதனை சிறப்பானவை. ஜெய்ஸி ஓவன்ஸ் என்ற நீக்ரோ 4 தங்கப் பதக்கங்கள் பெற்று, ஹிட்லரையே பிரமிக்க வைத்தார். முதன் முதல் கூடைப் பந்தாட்டம் இதில்தான் துவக்கப்பட்டது.

பன்னிரண்டாவது — ஒலிம்பிக்:

ஆண்டு 1940. இரண்டாம் உலகப் போர் ஆரம்பம். எனவே நடைபெறவில்லை.

பதின்மூன்றாவது — ஒலிம்பிக்:

ஆண்டு 1944 — இதுவும் இரண்டாம் உலகப் போர் காரணமாக நடைபெறவில்லை.

பதினான்காவது—லண்டன் ஒலிம்பிக்:

ஆண்டு 1948. உலகப் போர் முடிந்து 3 வருடம் ஆகியிருந்தது. அதிக வீரர்கள் பங்கு பெறவில்லை. ரஷ்யா, ஜெர்மனி, ஜப்பான் பங்கேற்கவில்லை. முதலிடம் அமெரிக்கா பெற்றது. முதன் முதலில் ஒரே பெண் 4 தங்கப் பதக்கங்கள் பெற்ற ஒலிம்பிக் இது! அவர் ஹாலந்தின் ஃபெய்னி பிளாங்கர்ஸ். 30 வயது. 2 குழந்தைகளின் தாய். அந்த நான்கு போட்டிகளாவன: 100 மீ, 200 மீ ஓட்டம் 80 மீ தடை ஓட்டம். மற்றும் 400 மீ. ரிலே. அமெரிக்காவின் 17 வயது பாட் மத்தாய்ஸ் மிகக் குறைந்த வயது அதாலெடிக் சாம்பியன். செக்கோஸ்லோவாகியாவின் எமில் ஜைடோபெக் 10,000 மீ. ஓட்டத்தில் புதிய சாதனை.

(அடுத்த இதழில் முடியும்)



"ஹலோ... ராஜ்மோகன் இருக்காரா....?"

"அப்படி யாரும் இங்கே இல்லையே... மோகன்னு ஒருத்தர் மட்டும் இருக்கார்..."

"அப்படின்னா அவரைப் பேசச் சொல்லுங்க.. அப்புறமா, வேறே எங்கேயாவது ராஜ் இருந்தா பேசிக்கறேன்...!"




"என்னடா இது ஆங்கிலத்தில் சைபர் வாங்கியிருக்கிறாய..."

"கணக்கில் அதிக மார்க் வாங்கியிருக்கேன்....!"

"அப்படியா... எத்தனை...?"

"மூணு...."

— ஏ. ஆர். வீரராகவன்.



குழந்தை இலக்கியப் போட்டி அறிவிப்பு

கடந்த 38 ஆண்டுகளாகக் குழந்தை இலக்கிய வளர்ச்சிக்குப் பணி புரிந்து வரும் குழந்தை எழுத்தாளர் சங்கம், இந்த ஆண்டு மூன்று வகையான குழந்தை இலக்கியப் போட்டிகளை அறிவித்துள்ளது.

ஏவி. எம். பரிசு:

அறிவியல், வாழ்க்கை வரலாறு ஆகிய இரு துறைகளுக்கும் முதற் பரிசாக ஏவி. எம். தங்கப் பதக்கங்களும் இரண்டாம் பரிசாக ஏவி. எம். வெள்ளிப் பதக்கங்களும் வழங்கப் பெறும்.

எல்லப்பா — ரங்கம்மாள் நினைவுப் பரிசு:

சிறுவர் நாவலுக்கு எல்லப்பா — ரங்கம்மாள் நினைவுப் பரிசாக முதற்பரிசு ரூ. 1000/—, இரண்டாம் பரிசு ரூ. 500/— வழங்கப் பெறும்.

செல்லப்பன் நினைவுப் பரிசு:

கல்லூரி மாணவர், மாணவியர் மட்டுமே கலந்து கொள்ளும் சிறுவருக்கான சிறுகதைப் போட்டியில் செல்லப்பன் நினைவுப் பரிசாக முதற் பரிசு ரூ. 1000/—மும், இரண்டாம் பரிசாக ரூ. ரூ. 500/— ம் வழங்கப் பெறும்.

அறிவியல், வாழ்க்கை வரலாறு, நாவல் இந்த மூன்றும் 10 வயது முதல் 15 வயதுக்கு உட்பட்ட சிறுவருக்கு ஏற்ற வகையில் முழு அளவு வெள்ளைத் தாளில் சுமார் 80 பக்கங்களில் கையெழுத்துப் பிரதிகளாக இருக்க வேண்டும்.

கல்லூரி மாணவர்க்கான சிறுகதைப் போட்டிக்கு முழு அளவு வெள்ளைத் தாளில் 8 பக்கங்களுக்கு மேற்படாமல் கதை இருக்க வேண்டும்.

மூன்று போட்டிகளுக்கும் கையெழுத்துப் பிரதிகளை 30.9.88—க்குள் செயலாளர், குழந்தை எழுத்தாளர் சங்கம், ஏ. எல். 183, அண்ணா நகர், சென்னை — 40 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

வருகிற நவம்பர் மாதம் நடைபெறும் குழந்தைகள் தின விழாவில் பரிசுகள் வழங்கப்பெறும். மேலும் விவரம் வேண்டுவோர் சங்க முகவரிக்கு எழுதலாம்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: வெ. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ் கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 4 3154 3, 4 34 157.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால்: ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 36/—; வெளி நாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—.


"அம்மாவோட காபியை விட என் காபி ரொம்ப நல்லாயிருக்கும்!"
Parry's
கா:பிபைட்
COFFY BITE
Parry's
COFFY BITE
"காபின்னு இப்படித்தான் இருக்கணும்!"
PARRY'S
பாரிஸின் தரமான தயாரிப்புகள்
Parry's
The King of Sweets
HTA 7037

Registered No. TN/MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

வேடிக்கை உலகில் நுழையுங்கள்—
மேகி கிளப்பில் உறுப்பினர் ஆகுங்கள்!

உறுப்பினர் ஆவதற்கு, 5 காலி மேகி நூடுல்ஸ் பேக்குகளின் முன்புறத்தில் இருந்து, 'Maggi 2-Minute Noodles' என்ற பெயரை வெட்டி எடுத்து எங்களுக்கு அனுப்புங்கள். உங்களை ஆயுள் உறுப்பினராகச் சேர்ப்பதற்கு, ஒரு சூப்பர் மேகி கிளப் உறுப்பினர் பேட்ஜையும், உறுப்பினர் ஆனதற்கான சான்றிதழையும் உங்களுக்கு அனுப்புவோம். கூடவே, இந்த அன்பளிப்புக்களில் ஒன்றைத் தெரிந்தெடுக்கும் வாய்ப்பு—

—மேகி ஸ்கூல் ஃபன் ஸெட் (ஒரு கால அட்டவணையும், 20 புத்தக லேபல்களும்)
—மேகி டிராஃபிக் விளையாட்டு
—சைனீஸ் புதிர்
—மேகி போஸ்டர் ஸெட்
—டிஸ்னி டுடே காமிக் (ஒவ்வொரு முறையும் புதிய பிரதி)

நீங்கள் விரும்பினால், ஒவ்வொரு அன்பளிப்புக்கும் 5 ரேப்பர்களை அனுப்புவதன் மூலம் 5 அன்பளிப்புக்களையும் பெற்றுக் கொள்ளலாம். இது மட்டுமல்ல, வருங்காலத்தில் மேகி கிளப்பில் எத்தனையோ பல உற்சாகமான நடவடிக்கைகள் இருக்கும். எனவே, இன்றே உறுப்பினர் ஆகுங்கள்!



இது முக்கியம்!

தனியாக வெட்டி எடுக்கப்பட்ட பெயர்களை, ஸ்டாம்ப ஒட்டிய ஒரு 60 பைசா உறையில் வைத்து, ஒரு காகிதத்தில் இந்த விவரங்களை எழுதவும்:

பெயர், முழு முகவரி, வயது, பையன்/சிறுமி, உறையில் வைக்கப்பட்டுள்ள வெட்டி எடுக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை, நீங்கள் விரும்பும் அன்பளிப்பு.

உங்கள் கடிதத்தை அனுப்ப வேண்டிய முகவரி:
மேகி கிளப், தபால் பெட்டி எண்: 5788, புது தில்லி-110 055

HTA 6026TAM